# அடைக்கலம்

373.5493
YAL

Donated by:-
PROF. K. KAILASAPATHY

யாழ்ப்பாணம்
புனித மரியாள்
வித்தியாலய
நூற்றாண்டு விழாச்
சிறப்பு மலர்

University of Jaffna
373.5493
YAL
162591(AR; AR)

1873 - 1973

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புனித மரியாள் வித்தியாலய
நூற்றாண்டு விழா
பொலிவுடன் விளங்க
நல் வாழ்த்துக்கள் !


# மரைக்கார் ஸ்ரோர்ஸ்

21, கச்சேரி ரோட் கொழும்பு-11

உரிமையாளர் :

நா. மருதலிங்கம்
நெடுந்தீவு.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ். புனித மரியாள் வித்தியாலய
நூற்றாண்டு விழாவுக்கு எமது
நல்வாழ்த்துக்கள் !

UNIVERSITY OF JAFFNA
LIBRARY

UNIVERSITY OF JAFFNA
Library
SRI LANKA

University of Jaffna
162591
Library

Donated by:-
PROF. K. KAILASAPATHY

# ஞானம்ஸ் ஸ்ரூடியோ

புகைப்படப் பிடிப்பாளரும், புளக் தயாரிப்பாளரும்

மணிக்கூட்டு வீதி யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழகிற் சிறந்த

தங்க ஆபரணங்களுக்கு

தகுந்த இடம்

## நியூ ஸ்டார் ஜுவல்லர்ஸ்

87/1, கன்னாதிட்டி யாழ்ப்பாணம்

ஓடர் நகைகள்

குறித்த காலத்தில் செய்து கொடுக்கப்படும்.







விரும்பிய டிசைன்களில்
கேற்-கிறில் முதலியனவும்
இரும்புப்பெட்டிகளும்
குறித்த தவணையில்
செய்து கொடுக்கப்படும்.

உரிமை.
S.G. ரகுநாதன்

## தரன் இண்டஸ்றீஸ்

70, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்வாழ்த்துக்கள் !



வீட்டுத் தளபாடங்களும்
கயிறு திரிக்கும் இராட்டையும்
குறைந்த விலையில்
செய்து கொடுக்கப்படும்

**எஸ். செபஸ்தியாம்பிள்ளை**

அரசாங்க கட்டட ஒப்பந்தகாரர்

112, இராஜேந்திரா வீதி    யாழ்ப்பாணம்

*With the best Compliments :*

UNIVERSITY OF JAFFNA LIBRARY

Donated by:-
PROF. K. KAILASAPATHY

**PREMIER CAFE**

*MAIN STREET    JAFFNA*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*Donated by :*

# M/S DIAMOND HOUSE LTD.,

**JEWELLERS**

79 Kannathiddy
Jaffna
Phone : 7036

141-143 Sea Street
Colombo 11
Phone : 36321

*Space donated by*

# B. J. ALOYSIOUS

*General Merchants*

32-34 Grand Bazaar JAFFNA

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்வாழ்த்துக்கள் !

UNIVERSITY OF JAFFNA LIBRARY

# ஜெஸீமா பிக்சர் பலெஸ்

கண்ணுடி, படம் வியாபாரம்

232, காங்கேசந்துறை வீதி : யாழ்ப்பாணம்

*Space donated by :*

# P. I. FERNANDO

**Specialised Optician and Dental Works**

**51, MAIN STREET** **JAFFNA**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்டுக்கூத்துச் சக்கரவர்த்தி

கலாநிதி ம. யோசேப் அவர்களின்

அன்பளிப்பு



**ம. யோசேப்**

நகை வியாபாரம்

103 கன்னாதிட்டி

யாழ்ப்பாணம்



யாழ். புனித மரியாள் வித்தியாலய

நூற்ருண்டு விழாவுக்கு

இதயம் நிறைந்த வாழ்த்துக்கள் !

**ஸ்ரார் எலக்ற்றிக் வெல்டேஸ் அன்ட் ரேணிங் வேக்ஸ்**

233, ஸ்ரான்லி வீதி

யாழ்ப்பாணம்

தொலைபேசி : 7352



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம், புனித மரியாள் வித்தியாலய

# நூற்றுண்டு விழா

## அழைப்பிதழ்

அன்புடையீர்,

எதிர்வரும் 8-6-'73 வெள்ளிக்கிழமை பிற்பகல் 4-30 மணியளவில் நடைபெறவுள்ள எமது வித்தியாலய நூற்றுண்டு விழாவிற் பங்குபற்றிச் சிறப்பிக்குமாறு தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர், மாணவர்
புனித மரியாள் வித்தியாலயம்

யாழ்ப்பாணம்,
1-6-73

தலைவர்:

**திரு. தி. மாணிக்கவாசகர்**
வடமாநிலக் கல்விப் பணிப்பாளர்

பிரதம விருந்தினர்:

**மகா வந். கலாநிதி வ. தியோகுப்பிள்ளை அவர்கள்**
யாழ். மறை மாவட்ட ஆயர்

## வைபவங்கள்

1. **வித்தியாலயக் கொடியேற்றல்:**
   மகா வந். கலாநிதி வ. தியோகுப்பிள்ளை அவர்கள்
   யாழ். மறைமாவட்ட ஆயர்

2. **தோத்திரப் பூசை**

3. **நூற்றுண்டு நினைவு மண்டபத்தைத் திறந்து வைத்தல்:**
   திரு. சி. எக்ஸ். மாட்டீன்,
   தேசியப் பேரவை உறுப்பினர்

4. **தொழிற்கூடத்தைத் திறந்து வைத்தல்:**
   அதி வண. பி. சூசைப்பிள்ளை அடிகள்,
   ஊர்காவற்றுறை, புனித அந்தோனியார் கல்லூரி அதிபர்

5. **மனையியற் கூடத்தைத் திறந்து வைத்தல்:**
   அதி சங். சகோ. யூனாலி அவர்கள்
   யாழ். திருக்குடும்பக் கன்னியர் சபை மாகாணத் தலைவி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நிகழ்ச்சிகள்

தலைவர் : திரு. தி. மாணிக்கவாசகர்
வடமாநிலக் கல்விப் பணிப்பாளர்

1. வரவேற்புப்பா : வித்தியாலய மாணவர்
2. வரவேற்புரை : திரு. அ. யோசேப்
பெ. ஆ. சங்கப் பொருளாளர்
3. தலைவர் உரை
4. அதிபர் அறிக்கை
நூற்றாண்டு விழாச் சிறப்பு மலர் வெளியீடு
வெளியிடுபவர் : திரு. தி. மாணிக்கவாசகர்
முதற்பிரதிபெறுபவர் : திருமதி அந்தோனியா சுவாமிநாதர்
யாழ். மாநகரசபை உறுப்பினர்
6. பிரதம விருந்தினர் உரை
7. வாழ்த்துரைகள்:
திரு. சி. எக்ஸ். மாட்டீன், தேசியப் பேரவை உறுப்பினர்
திரு. ஏ. சுபசிங்க, பிரதம கல்வி அதிகாரி, யாழ்ப்பாணம்
திரு. ஏ. ஏ. யோசேப், மேலதிக அரசாங்க அதிபர், யாழ்.
அதி வண. பி. சூசைப்பிள்ளை அடிகள்
ஜனாப் எம். எம். மன்சூர், கல்வி அதிகாரி
அதி சங். சகோ. யூஜாலி அவர்கள்
வண. கே. பி. சந்தியாப்பிள்ளை அடிகள், பங்குக்குரவர்
8. பரிசளிப்பு
பரிசில் வழங்குபவர்: திருமதி சி. எக்ஸ். மாட்டீன்
9. நன்றியுரை: திரு. என். கே. ரகுநாதன்,
பெ. ஆ. சங்கச் செயலாளர்

## கலையரங்கு

1. தீப நடனம்
2. அபிநயப் பாட்டு
3. மீனவர் நடனம்
4. Action Song
5. Gypsy Dance
6. நாடகம்:
அணையாவிளக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## காணிக்கை

சீரார் அடைக்கலத் தாய் சேவடியை விக்கினந்திர்
ஏரார் படைக்கலமாய் ஏற்றவளின் — பேரால்
'அடைக்கலம்'என் றிம்மலரை அர்ப்பணித்தோம் தேவி
ஊடைக்கணிப் பிலே காணிக்கை !

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கல்லிலே சமைத்த கீதம்
கருத்திலே கலந்து பொங்கி
உளத்தினை உருக்கி, உண்மை
ஒளியினைப் பாய்ச்சு தம்மா!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடைக்கலம்

யாழ்ப்பாணம்
புனித மரியாள்
வித்தியாலய
நூற்றுண்டு விழாச்
சிறப்பு மலர்
1873–1973

## இம்மலரில்

வண. ரி. ஏ ஜே. மதுரநாயகம் அடிகள்
வண. பி. சூசைப்பிள்ளை அடிகள்
திரு. செ. வேலாயுதபிள்ளை
திரு'மதி இ. ஆனந்தக்குமாரசாமி
திரு. எ. ச. வேலாயுதபிள்ளை
திரு. ஆ. தேவராசன்
கலாநிதி க. கைலாசபதி
திரு. இ. முருகையன்
திரு. ம. சி. பிரான்சீஸ்
ஜனாப் எம். எம். மன்சூர்
சங். சகோ. புஷ்பம்
திரு. அ. சி. நல்லையா
திரு. க. யோ. ஆசிநாதர்
யாழ். ஜெயம்
திரு. இ. சிவானந்தன்
புதுவை இரத்தினதுரை

முதலியோரின்
கட்டுரை, கவிதைகள்,
மாணவ மணிகளின்
கைவண்ணங்கள்
இடம்பெற்றுள்ளன.

காப்பாளர்:
திரு. ஜெ. யோசேப்பு (அதிபர்)
பொறுப்பாசிரியர்:
திரு. என். கே. ரகுநாதன்
மலர்க்குழு:
திரு. சி. தார்சீசியஸ்
சங். சகோ. மரிய இளாரு
திருமதி ம. மா. ஆசீர்வாதம்
திருமதி நே. செந்திநாதன்
திருமதி அ. வி. பிரான்சிஸ்

UNIVERSITY OF JAFFNA LIBRARY
162591

ADAIKKALAM THE SOUVENIR OF THE CENTENARY CELEBRATIONS OF THE ST.MARY'S VIDYALAYAM, JAFFNA


162591
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ். புனித மரியாள்
வித்தியாலய
நூற்றாண்டு விழாவுக்கு
எமது உளங்கனிந்த
நல்வாழ்த்துக்கள் !

**ஆசிர்வாதம் அச்சகம்**
32 கண்டி வீதி
யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்கள் அதிபர்



திரு. றெகேஷன் யோசேப்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்ற தாய், அவள் பிள்ளைக் கடைக்கலம்.
பிள்ளை, தாயொடு தந்தை தளர் நிலை
உற்ற நாளினில் அன்னார்க் கடைக்கலம்.
உரிமையோ டுயர் பெண்மை வாழ்ந்திட
நற்றவப் பேராண்மை அடைக்கலம்.
நாடு காத்திடும் மன்னன் ஆயினும்
பெற்றி போய் நலிவுற்ற காலையில்
பேறு பெற்ற பெண், ஆண்மைக் கடைக்கலம்.
நற்றவம் பொலி நாடு யாரது?
நாமதன் எஜமானர் அல்லரோ?
கற்ற கல்வி, நம் நாட்டின் அரசியல்
காணவும், சமுதாயப் பழங்கொள்கை
இற்று வீழ உழைத்துப் பொருள்வளம்
ஈடிலாப் பொலி வோடு தேடவும்
உற்றதாம் பணி யாதலால், இனி,
உறுதியாய், உயர் வாழ்வுக் கடைக்கலம்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வித்தியாலய கீதம்

யாழூர்மேவிடும் மாமரி அடைக்கல
நாயகி கழகமே வாழி
வாழி... வாழி... வாழி... (யாழூர்)


பண்புடன் அறிவுறல் என்பதெம் விருது
வாக்கியம் இதையென்றும் மறவோம்.
ஒழுக்கமாய்க் கலைபல பயில்வோம்.
ஓங்கிய அறிவினில் துயில்வோம். (யாழூர்)

தமிழ்மொழி எம்விழி எனவே துதிப்போம்.
தமிழ்க்கலை வளர்ச்சியை வளர்ப்போம்.
கலைபல வளர்ந்திட உழைப்போம்.
நிலைபெறு தொழில் கற்றுத் திளைப்போம். (யாழூர்)

எவ்விடமேகினும் எந்நிலை மேவினும்
எம் கலாசாலையை மறவோம்.
ஆசிரியர் தமக்கென்றும் பணிவோம்.
அவர்களை எங்கெங்கும் கணிப்போம். (யாழூர்)

இனகுல பேதங்கள் ஒழிந்திடவேண்டும்.
மனநிலை மலர்ந்திட வேண்டும்.
கலாசாலை என்றும் ஓங்கிடவேண்டும்.
கடவுளின் அருள் என்றும் வேண்டும். (யாழூர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மகா வந். கலாநிதி வ. தியோகுப்பிள்ளை அவர்கள்
யாழ். மறை மாவட்ட ஆயர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்ப்பாணம், புனித மரியாள் வித்தியாலய நூற்றுண்டு விழாவை வாழ்த்தி, யாழ் மறைமாவட்ட ஆயர் மகா வந். கலாநிதி வ. தியோகுப்பிள்ளை அவர்கள் உவந்தளித்த ஆசிச்செய்தி

யாழ்ப்பாணம் புனித மரியாள் வித்தியாலயம் நூறுண்டு காலம் கல்விப் பணியும், சமயப் பணியும் புரிந்து, பெருமிதத்துடன் விழா எடுக்கும் இத் தருணத்தில் அவ்விழாவினைப் பாராட்டி வாழ்த்துச் செய்தி வழங்குவதில் நான் அளவில்லாத மகிழ்ச்சியடைகின்றேன்.

நூறு வருடங்களுக்கு முன்னர், யாழ்ப்பாணக் கத்தோலிக்கத் திருச்சபையினுல் ஆரம்பிக்கப்பட்ட இவ்வித்தியாலயம், ஒரு சிறிய கிடுகுக் கூரையாலான கட்டடத்திலிருந்து தனது சேவையைத் தொடங்கியது. வளர்ச்சிப் போக்கில் வித்தியாலயம் தனக்கென வசதியான கட்டடங்களை ஆக்கிக்கொண்ட போதிலும், பழைய கிடுகுக் கூரைக் கட்டடம் இன்றும் நிலைகொண்டிருப்பதானது, தன் ஆடம்பரமற்ற, எளிமையான இலட்சிய நோக்கிலிருந்து சிறிதும் பிறழாமல் உறுதி கொண்டிருப்பதை உணர்த்துவதாயுள்ளது. இந்த வகையில், மக்களின் நல்வாழ்வுக்கு நிலைக்களனுயுள்ள தெய்வ பக்தி, அன்பு, அறிவு, பண்பு, ஒழுக்கம் முதலிய நற்சீலங்களைப் பரப்ப இவ்வித்தியாலயம் ஆற்றிய பணி மகத்தானது என்பதில் சந்தேகமில்லை.

இந்தச் சீலங்களின் அடிப்படையிலேயே மனிதப்பண்பை நிலைக்கச் செய்து, நல் வாழ்க்கையை அமைத்து, சமூக முன்னேற்றத்தை ஏற்படுத்தி, முடிவில் ஆத்ம ஈடேற்றம் பெற உதவும் அரிய தொண்டினைச் செய்வதற்கு இவ்வித்தியாலயம் மேலும் வளர்ச்சி பெற்று, உயர் நிலையடைய எல்லாம் வல்ல ஆண்டவனை இறைஞ்சுகின்றேன்.

இவ்வித்தியாலயத்தின் அதிபர் திரு. ஞேகேஷன் யோசேப்பும், உதவி ஆசிரியர்களும், மாணவரும், பெற்ருேரும், தங்கள் நன்றிக் கருத்தினை எனக்கு அறியத் தந்தமைக்காக, அவர்களுக்கு எனது மகிழ்ச்சியைக் கூறுவதோடு நூற்றுண்டு விழா சிறப்புடன் நடந்தேற எனது இதயங்கனிந்த வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றேன்.

✠ வ. தியோகுப்பிள்ளை
யாழ் மறைமாவட்ட ஆயர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# *Message from*

## Dr. P. Udagama,

Secretary,
Ministry of Education
and Director-General of Education

*I am extremely happy to send my greetings to the Centenary Celebrations organized by the Principal, Staff and students of the Jaffna St. Mary's Vidyalayam.*

*Accompanying the Minister of Education on his visit to Jaffna last year, I saw for myself that this Vidyalayam, started hundred years ago in very humble surroundings, by the Catholic Missionaries in Jaffna, has now developed into a notable educational institution in the city of Jaffna. It is clear how much of impact this institution would have made on the social, economic and moral growth of this country in a hundred years. Those responsible for having nurtured this Vidyalayam to such great heights over a century need to be really commended.*

*No doubt, your Vidyalayam will reasonably feel proud to have rendered educational service - which is the best af all human services–uninterruptedly for a hundred years, and will continue to achieve more progress in the future.*

*I convey my good wishes for the success of the Centenary Celebrations and for the Centenary Souvenir to be really memorable.*

Ministry of Education,
Malay Street,
Colombo 2

P. Udagama
Secretary

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வியமைச்சரின் செயலாளரும்
கல்வி மா பணிப்பாளருமான
**கலாநிதி பிரேமதாச உடகம அவர்கள்**
**அனுப்பிய ஆசிச்செய்தியின் தமிழாக்கம்**

## உங்கள் பெருமிதம் நியாயமானதே !

யாழ்ப்பாணம் புனித மரியாள் வித்தியாலய அதிபர், ஆசிரியர், மாணவர் எடுக்கும நூற்றாண்டுவிழாவை வாழ்த்துவதில் நான் மிகுந்த மகிழ்ச்சியடைகின்றேன்.

நூறுண்டுகளுக்குமுன் யாழ்ப்பாணக் கத்தோலிக்க திருச்சபையினரால், மிக எளிமையான சூழலில் ஆரம்பிக்கப்பட்ட இவ் வித்தியாலயம், இன்று யாழ்ப்பாணப் பட்டினத்தில் குறிப்பிடத்தக்க ஒரு கல்வி நிறுவனமாக வளர்ச்சியடைந்திருப்பதைச் சென்ற ஆண்டு கனம் கல்வி அமைச்சரின் யாழ்ப்பாண விஜயத்தின்போது கூடச் சென்ற நான், நேரில் கண்டறிந்தேன். இந் நிறுவனம் நூறுண்டு காலம் ஆற்றிய கல்விப்பணி இந்நாட்டின் சமூக, பொருளாதார ஆத்மீக வளர்ச்சியில் எத்துணை தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கும் என்பது தெளிவானது. நூறுண்டு காலம் இவ்வித்தியாலயத்தை வளர்த்தெடுத்து, இத்தகைய சிறப்பு நிலையைப் பெறச் செய்தவர்கள் பாராட்டுக்குரியவர்களாவர்.

எல்லாப் பணிகளிலும் மேலான கல்விப் பணியை நூறுண்டுகாலம் இடைவிடாது புரிந்துள்ள உங்கள் வித்தியாலயம், அப்பணிக்காக நியாயமான முறையில் பெருமிதங் கொள்வதோடு, தொடர்ந்தும் முன்னேறிச் செல்லும் என்பதில் சந்தேக மில்லை.

நூற்றுண்டுவிழா வெற்றியுடன் நிறைவுறவும், அதனையொட்டி வெளியிடப் படும் விழா மலர் சிறப்பாக அமையவும் என் வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றேன்

பி. உடகம
செயலாளர்

கல்வி அமைச்சு,
மலே வீதி,
கொழும்பு-2

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## *Massage from*

**C. X. Martyn Esq;**

**M. P. for Jaffna.**

*It is with a sense of great satisfaction that I am acceding to your request to send a message of greetings and goodwill on the occasion of your Centenary celebrations. St. Mary's Vidyalayam is in-deed a landmark in the history of the evolution of education, particularly Catholic education in Jaffna. As Member of Parliament for Jaffna whose family has been for generations in Jaffna, I feel a special sense of gratification that I have myself been able to make a contribution to the improvement of this old and important educational institution. This school which was originally attached to Our Lady of Refuge had in the distant past a somewhat aristocratic complexion. Today in keeping with the progressive socialist policies it is a cosmopolitan institution which has in its fold a fair percentage of the Minority Tamils.*

*A century of existence is a long period even for an institution. It's work has been a boon to the people of Jaffna. The school is at present in the hands of an able and experienced principal and a good and co-operative staff. This presages well for the future of the school.*

*I cannot conclude this message without a word of thanks for the kind assistance given to the school by the Hon'ble Minister of Education, the Secretary to the Ministry and the Regional Director of Education.*

*May this school flourish and prosper.*

*Floret et crescat.*

C. X. Martyn
(M. P. for Jaffna.)

31, Flower Road,
Colombo - 7

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேசியப் பேரவையின் யாழ்ப்பாணத் தொகுதி உறுப்பினர்

**திரு. சி. எக்ஸ். மாட்டின் அவர்கள்**

வாழ்த்துகிறுர்

## மேலும் சிறந்து ஓங்குக !

தங்கள் வித்தியாலயத்தின் நூற்றுண்டு விழாவுக்கு ஆசி கூறும் நல்லெண்ணச் செய்தி அனுப்புமாறு, தாங்கள் விடுத்த வேண்டுகோளைப் பரிபூரண மனநிறைவுணர்ச்சியுடன் நிறைவேற்றுகின்றேன். யாழ்ப்பாணத்தின் கல்வித்துறை வளர்ச்சி வரலாற்றில், குறிப்பாகக் கத்தோலிக்க கல்வி வளர்ச்சி வரலாற்றில் புனித மரியாள் வித்தியாலயத்துக்கு உண்மையில் ஒரு சிறப்பிடமுண்டு. யாழ்ப்பாணத்தையே தாயகமாகக் கொண்ட நீண்ட வம்சா வழியினையுடைய ஒரு குடும்பத்தைச் சேர்ந்தவனுகிய நான் யாழ்ப்பாண நாடாளுமன்றப் பிரதிநிதி என்ற வகையில் இந்தப் பழம் பெரும் கல்வி நிலையத்தின் விருத்திக்கு என்னுலும் உதவ முடிந்ததையிட்டு விசேட நட்புப் பெருக்கத்துடன் மகிழ்ச்சியடைகின்றேன். அடைக்கலமாதா கோவிலுடன் முன்னர் இணைந்திருந்த இந்தப் பாடசாலை அந்நாளில் ஓரளவு பிரபுத்துவச் சார்புடையதாய் இருந்தது. இன்று முற்போக்குச் சோஷலிஸக் கொள்கைகளுக்கிணங்க, கணிசமானதொகைச் சிறுபான்மைத் தமிழ் மக்களும் ஒரே மடியில் பயில்வதற்கிணைந்துள்ள பொதுமை நிலவும் நிறுவனமாக இது விளங்குகிறது.

ஒரு நூற்றுண்டு காலவாழ்வு ஒரு நிறுவனத்துக்கு நீண்ட காலமாகும். இந்நிறுவனத்தின் பணிகள் யாழ்ப்பாண மக்களுக்கு ஒரு வரப்பிரசாதமாகவே இருந்து வந்துள்ளன. தற்போது இவ்வித்தியாலயம் திறமையும், அனுபவமும் மிக்க ஓர் அதிபரும், அவருடன் ஒத்துழைத்துப் பணியாற்றும் சிறந்த ஆசிரியர்களினதும் கைகளில் தங்கியிருக்கிறது. இது இப்பாடசாலையின் உன்னத வருங்காலத்திற்கு ஒரு சுப சூசகமாகும்.

இச்செய்தியை முடிப்பதற்கு முன்பு, இப்பாடசாலைக்குக் கௌரவ கல்வி அமைச்சரும், கல்வி அமைச்சின் செயலாளரும், மாநிலக்கல்விப் பணிப்பாளரும் செய்துள்ள உதவி ஒத்தாசைகளுக்கு என் நன்றியைத் தெரிவிக்கக் கடமைப் பட்டுள்ளேன்

இவ்வித்தியாலயம் மென்மேலும் செழித்துச் சிறந்தோங்குமாக ! எனது பாராட்டுகளும், நல்லாசிகளும் !

சி. எக்ஸ். மாட்டின்
பேரவை உறுப்பினர்

31, பிளவர் வீதி
கொழும்பு - 7

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வடமாநிலக் கல்விப்பணிப்பாளர்
திரு. தி. மாணிக்கவாசகர் அவர்களின்
வாழ்த்துமடல்

## புதுப்பொலிவுடன் சேவை செய்க

பழைமை வாய்ந்த உங்கள் வித்தியாலயத்தின் நூற்றாண்டு விழாவை வாழ்த்தி, ஒரு செய்தியை அனுப்பும் சந்தர்ப்பம் கிடைத்தமைக்காக நான் மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன். இவ்வித்தியாலயம், கடந்த நூற்றாண்டு காலமாகக் கல்வி வளர்ச்சிக்காகவும், சமய வளர்ச்சிக்காகவும் அரும்பணியாற்றி வந்திருக்கிறது. மன நிறைவுடன் இப்போது எடுக்கப்படும் நூற்றாண்டுவிழா, இவ் வித்தியாலயம் இதுகாலவரையாற்றிய உன்னத சேவையை எடுத்துக்காட்டுவதுடன், மேலும் கல்வித்துறையில் சிறந்த சேவையையும், மகத்தான சாதனைகளையும் புரிய புத்துணர்ச்சி ஊட்டுவதாய் அமைதல் வேண்டும் என ஆசைப்படுகிறேன்.

இலங்கையின் கல்வித்துறையில் ஒரு புதிய சிந்தனை உருவாக்கப்பட்டுள்ளது. அறிவும், பண்புமே கற்றதனாலாய பயன் என்று இதுகாறும் கருதப்பட்டு வந்தது. மனுக்குலத்தின் நல்வாழ்வுக்கு, இவைமட்டுமல்ல வண்ணம் பொலியும் ஒரு கைவினையும் முக்கியமானது என்ற தன்னிறைவுக் கோட்பாடே, இப்புதிய சிந்தனையாகும். இப்புதிய சிந்தனை உருவாக்கப்பட்டதன் பொறுப்பும் பணியும் ஒவ்வொரு பிரஜையிடமும் ஒவ்வொரு பாடசாலையிலும் தங்கியுள்ளது. நமது தேசாபிமான உணர்வும், சீரிய செயற்றிறனும், விடாமுயற்சியும் மகத்தான இப்புதிய சிந்தனையைச் செயற்பாடாக்கும் என்பது திண்ணம். இத்தப் பணியில் உங்கள் வித்தியாலயம், தனக்குரிய பங்கைச் செவ்வனே நிறைவேற்றும் என நம்புகின்றேன்.

இவ்வித்தியாலயத்தின் வளர்ச்சிக்காக தொடர்ச்சியாகப் பாடுபட்டுழைத்த முன்னைய அதிபர்கள் ஆசிரியர்களது சேவை மகத்தானது. அண்மைக் காலத்தில் இவ்வித்தியாலயத்தைப் பல துறைகளிலும் முன்னேற்றித் திகழச் செய்ய உழைத்து வரும் அதிபர் திரு. ஜெ. யோசேப்பு அவர்களையும் அவரது சக ஆசிரியர்களையும் பாராட்டுகிறேன். உங்கள் வித்தியாலயம் தொடர்ந்து 'புதுப்பொலிவுடன் சேவை செய்ய வாழ்த்துகிறேன்.

நூற்றாண்டு விழாவையொட்டி வெளியிடப்படும் சிறப்புமலர் கடந்தகாலச் சேவைகளையும் இனிப் புரியப் போகும் சாதனைகளையும் எடுத்துக்கூறும் பயனுள்ள மலராக அமைய வேண்டுமென்று விரும்புகிறேன். மலர் சிறப்புற எனது நல்லாசிகளைத் தெரிவிக்கின்றேன்.

தி. மாணிக்கவாசகர்
வடமாநிலக் கல்விப் பணிப்பாளர்

கல்வித் திணைக்களம்,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ். மாநகர முதல்வர்
திரு. அ. த. துரையப்பா அவர்களின்
வாழ்த்துரை



## நெஞ்சங் கனிந்த நல்வாழ்த்துக்கள்!

யாழ் புனித மரியாள் வித்தியாலயம் தனது நூற்றுண்டு விழாவை இவ்வாண்டு கொண்டாடவிருப்பது மகிழ்ச்சியைத் தருகின்றது.

அந்நியர் ஆட்சிக் காலத்தொட்டு இன்று வரை தமிழ் மொழி மூலம் பிள்ளைகளுக்குக் கல்வியூட்டும் ஒரு வித்தியாலயத்தின் நூற்றுண்டு விழாவிற்கு நல்லாசி கூறுவது கிடைத்தற்கரிய ஓர் அரும்பெரும் பேறுகும்.

பள்ளி மாணவர்களின் மத்தியில் சமயக்கல்வியையும், மதப்பற்றையும் வளர்ப்பதற்கு உங்கள் வித்தியாலயம் கடந்த நூறு ஆண்டுகளாக அரும் தொண்டு புரிந்து வந்துள்ளது.

நூற்றுண்டு விழாவையொட்டி வெளிவரும் சிறப்பு மலர் மணம் கமழ எனது மனமார்ந்த நல்வாழ்த்துக்கள்.

நூற்றுண்டு விழா, சிறப்பாக இனிது நிறைவேற எனது நெஞ்சம் கனிந்த நல்லாசிகளைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

அ. த. துரையப்பா
மாநகர முதல்வர்

மாநகர மண்டபம்,
யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## *Message from*

### Dr. K. H. M. Sumathipala,

Additional Secretary to the Ministry of Education

*I am extremely happy to send you a congratulatory message for publication in the special commemorative souvenir to be released in connection with the Centenary Celebrations of your Vidyalayam.*

*Attainment of a hundred years is a great occurenee not only in the life of a person but also in the existence of an institution. On the eve of this great occasion, when you were making preliminary arrangements to celebrate it, I had the opportunity to accompany the Honourable Minister of Education on his visit to your Vidyalayam last year and was happy to see for myself personally the progress you have achieved.*

*It is notable that almost on the eve of hundred years of your Vidyalayam's educational service, a new turn has taken place, in the educational history of our country. Cutting away from colonialistic educational systems completely, our educational policy has turned towards a great endeavour to nurture the social, economic and cultural traditions of our country. My wishes to your Vidyalayam is to forge ahead, using all the opportunities provided by our new educational system-*

*May the Centenary Celebrations and the Centenary Souvenir achieve all Success.*

K. H. M. Sumathipala
Additional Secretary

**Ministry of Education,**
**Malay Street,**
**Colombo.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வி அமைச்சின் மேலதிகச் செயலாளர்
கலாநிதி கே. எச். எம். சுமதிபால அவர்கள்
அனுப்பிய வாழ்த்துச் செய்தியின் தமிழாக்கம்

## மகத்தான சாதனை

உங்கள் வித்தியாலயத்தின் நூற்றாண்டு விழாவை வாழ்த்தி, அவ் விழாவை யொட்டி வெளியிடப்படும் சிறப்பு மலரில் பிரசுரிப்பதற்காக ஒரு செய்தியை அனுப்புவதில் நான் மிகுந்த மகிழ்ச்சியடைகின்றேன்.

நூறுவருட ஆயுள் என்பது ஒரு மனிதனின் வாழ்க்கையில் மட்டுமன்றி, ஒரு நிறுவனத்தின் வாழ்க்கையிலும் மிக மகத்தானது. உங்கள் வித்தியாலயத்தின் இந்த மகத்தான சாதனையைக் கொண்டாட நீங்கள் முன்னாயத்தம் செய்த வேளையில், கடந்த ஆண்டு, கௌரவ கல்வி அமைச்சருடன் உங்கள் வித்தியலயத்துக்கு நானும் வருகை தந்து உங்கள்வளர்ச்சியைக் காணக் கிடைத்தமையையிட்டு மகிழ்ச்சியடைகின்றேன்.

கிட்டத்தட்ட உங்கள் வித்தியாலயம் ஆற்றிய கல்விப்பணியின் நூற்றாண்டு கால எல்லையில், எமது நாட்டின் கல்விச் சரித்திரத்தில் ஒரு புதிய திருப்பம் ஏற்பட்டுள்ளதை அவதானிக்க முடிகிறது. கலோனியலிஸக் கல்வி முறையிலிருந்து முற்றிலும் வேறுபட்டு, எமது நாட்டின் சமூக, பொருளாதார, கலாசார அமைப்பை வளர்த்தெடுக்கும் மகத்தான பணிக்கு எமது கல்விக் கொள்கை திரும்பியுள்ளது. புதிய கல்வித்திட்ட அடிப்படையில் சகல வாய்ப்புகளையும் பயன் படுத்தி உங்கள் வித்தியாலயம் முன்னேற வேண்டுமென வாழ்த்துகிறேன்!

நூற்றாண்டு விழா வெற்றியீட்டவும், விழாமலர் சிறப்பாக அமையவும் எனது நல்லாசிகள்!

கே. எச். எம். சுமதிபால
மேலதிகச் செயலளர்

கல்வி அமைச்சு
மலே வீதி
கொழும்பு-2

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

கல்வியமைச்சில் இயங்கும்
தமிழ்ப் பிரிவின் கல்விப் பணிப்பாளர்
**திரு. க. கனகசபாபதி அவர்கள்**
அனுப்பிய ஆசிச்செய்தி



## அக இருளைப் போக்கும் அகல் விளக்கு

உங்கள் வித்தியாலயத்தின் நூற்றாண்டு விழாவை வாழ்த்தக் கிடைத்த சந்தர்ப்பத்துக்காக நான் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

யாழ்ப்பாணப் பட்டினத்தில் வசதிகளும், வாய்ப்புகளும் நிரம்பப் பெற்ற பெரிய கல்லூரிகள் நாற்புறமும் சூழ்ந்திருக்க, அவற்றின் நடுவே ஓர் அகல் விளக்காகச் சுடர் கொடுத்து, தன் அயலில் உள்ள வறிய பிள்ளைகள் தங்களி அக இருளைப் போக்க இவ் வித்தியாலயம் பேருதவியாயிருந்ததை நான் அறிவேன். ஆடம்பரமற்ற அறிவே பேரறிவர்கும். அந்த வகையில் உங்கள் வித்தியாலயம் ஆற்றிய கல்விப்பணி மகத்தானதாகும் என்பதில் ஐயமில்லை.

இன்றைய புதிய கல்வித்திட்ட அடிப்படையில் இவ்வித்தியாலயச் சூழல், தொழில்மயமும் தன்னிறைவும் நிரம்பிய புதிய பாதையில் முன்னேறும் வாய்ப்பைப் பயன்படுத்துமென நம்புகிறேன்.

நூற்றாண்டு விழா எடுக்கும் புனித மரியாள் வித்தியாலய அதிபரையும், ஆசிரியர்களையும் மனப்பூர்வமாகப் பாராட்டுகிறேன்; விழாவையொட்டி வெளியிடப்படும் சிறப்பு மலர் பொலிவுற எனது நல்லாசிகள்!

க. கனகசபாபதி
கல்விப்பணிப்பாளர்

கல்வி அமைச்சு,
மலாய் வீதி,
கொழும்பு—2

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ். திருக்குடும்பக் கன்னியர்சபை
மாகாணத்தலைவி
**அதி சங். சகோ. யூளாலி**
அவர்களின் ஆசிச்செய்தி



## இனிய நினைவுகளில் திளைக்கின்றேன்

யாழ்நகரின் மத்தியிலே, நூற்றாண்டு காலமாகக் கடும்பயணஞ் செய்து, கல்விப் பீடமாம் மலையேறி, காலமாற்றத்தின் தாக்குதல்களிலெல்லாம் கலங்கரைச் சுடராய் நின்று, இன்று தன்னையும் தன்சேவையையும் பெருமையுடன் நோக்குகின்றது புனித மரியன்னை பாடசாலை. எனது இனிய பல நினைவுகள் இக் கல்விக்கூடத்தோடு இணைந்தவை என்பதில், நானும் இவ்வேளை பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

வளர்ச்சிக்கிரமத்திலே மிகத் தாமதமடைந்து, காலக் கிரமத்தில் வலுப்பெற்று, நூறு ஆண்டுகள் கழிந்து, இன்று முன்னேற்றப்பாதையிலே முந்தி நடைபோடுகின்ற இக் கழகத்தில் முன்னொருபோது ஆசிரியையாய் இருந்தேன் என்கின்ற நிலையிலே பெருமிதமடைகின்றேன். அயலிலுள்ள உயர்கல்லூரிகளிலிருந்து மாணவர்குழாம் இங்கு பவனி வருவதைக் காண மகிழ்ச்சி பொங்குகின்றது. இந்நிலை மேலும் வளர்ச்சியுற்று, இன்னும் பல்லாண்டு காலமாக இக் கலைப்பீடம் குன்றின்மேற்தீபமாய் விளங்கும் நாள் தூரத்திலில்லை. அந்நிலை கண்டு களிகூர எல்லாம்வல்ல இறைவனை இறைஞ்சுகின்றேன். காலவோட்டத்தில் மேன்மேலும் தகுதி வாய்ந்த — தியாக சேவைமிக்க - இறையன்பு பிறரன்பிற் சிறந்த பல ஆசிரியர்களின் சேவையால் வளம்பெற்று, நாட்டிற்குகந்த நன்மக்களை - உத்தம சீலர்களை உருவாக்க உள்ளன்புடன் வேண்டுகின்றோம்.

நூற்றாண்டு சேவையின் நிறைவுக்குக் காரணமாயிருந்த திருச்சபை மதகுருமார் ஆசிரியர்கள், பெரியார்களின் அரும் பெருந்தொண்டுகளை மனமார வாழ்த்துகிறோம்.

அத்துடன், இந்நூற்றாண்டை சிறப்பிக்கும் விழாமலரும் இதழிதழாய் விரிந்து நறுமணங்கமழ்ந்து, "ஈன்ற ஞான்றிலும் பெரிதுவந்தனளே" என நாம் அனைவரும் மகிழ, எம் வாழ்த்துக்கள் அதற்கு உரித்தாகுக!

சகோ. யூளாலி

திருக்குடும்பக்கன்னியர் மடம்,
யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கருத்தரங்க மலர்

நமது நாட்டுக் கல்விச் சரித்திரத்தில் ஒரு கால கட்டம் முற்றுப் பெற்று, ஒரு புதிய அத்தியாயம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. நம்மை ஆட்சி செய்த அந்நியர், தமது அரசுயந்திரத்தைச் சுளுவான முறையில் இயக்கு வதற்காக நம்மீது திணித்த கல்விக் கொள்கைக்கு ஒரு முற்றுப்புள்ளி வைத்துவிட்டோம். இந்த அந்நிய கல்விக் கொள்கை, எமது மக்களின் சுதந்திர உணர்வையும் தேசாபிமானத்தையும் மழுங்கப் பண்ணியது; விதேசியக் கலாச்சாரம் தலையெடுக்கவும், பொருளாதாரச் சுரண்டல் நிலைபெறவும் வாய்ப்பளித்தது, நாம், ஆடைநலங்காத உத்தியோக ஆசைக்கும், குறுக்குவழியில் பதவியும் பணமும் சம்பாதித்து 'பெரிய மனிதர், ஆகும் ஈனத்தனத்துக்கும் அடிமைப்பட்டு, நாட்டு முன்னேற் றத்தில் கிஞ்சிற்றும் அக்கறையின்றி, உழைப்பையும், உழைப்பின் பெருமை யையும் மதிக்காமல் வீண் வாழ்க்கை வாழ்ந்துவிட்டோம். இனி, ஒரு புதிய சமுதாயத்தைக் கட்டி வளர்க்கவேண்டும்!

இந்த நாட்டை அந்நியர் ஆட்சி செய்த 1869-ம் ஆண்டில், கல்வி, ஒரு வரையறை செய்யப்பட்ட அரசாங்க நிர்வாகத்தின் கீழ்க் கொண்டு வரப்பட்டது. இந்த நிர்வாகக் கல்வியின் நூற்றாண்டுவிழா, 1969-ம் ஆண்டில் நாடெங்கும் கொண்டாடப்பட்டது. நூறு வருடம் இந்தக் கல்வி முறையில் தேர்ந்து நாம் கண்ட பலன் என்ன? பொருளாதார நெருக் கடியும், வேலையில்லாத் திண்டாட்டமும், அந்நியக் கடன்களும்தான்! கழுத்தை நெரிக்கும் இத் தொல்லைகளிலிருந்து விடுபடவும், நாட்டை அபிவிருத்திப் பாதையில் முன்னேற்றவும் கல்வி நூற்றாண்டுவிழாக் கொண் டாடி இரண்டாண்டுகளின் பின், நாம் 1972-ல் புதிய கல்வித்திட்டத்தை உருவாக்கியிருக்கிறோம். இக்கல்வித்திட்டம் செயற்பட ஆரம்பித்து ஒரு வருடத்தின் பின், இந்த ஆண்டு, எமது வித்தியாலயம் தனது நூற்றாண்டு விழாவைக் கொண்டாடுகின்றது. கல்விப் பணியோடு தொடர்புடைய ஆண்டுகளில், எமது நூற்றாண்டு விழா நடைபெறுவது குறிப்பிடத் தக்க அம்சமாகும். இந்த விழாவையொட்டி ஒரு சிறப்புமலரை வெளியிடுவதில் நாம் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றோம்.

இச்சிறப்புமலர், பெயரளவிலோ அன்றிச், சம்பிரதாய பூர்வமாகவோ அல்லாமல், உண்மையிலேயே ஒரு சிறப்புமலராக அமைவதற்கு வேண்டிய சந்தர்ப்பங்களும், கல்வியோடு தொடர்பான பின்னணிகளும் வாய்க்கப் பெற்றுள்ளமையால் ஒரு உத்வேகத்தை ஏற்படுத்துகின்றது. நூற்றாண்டு விழாவைக் கொண்டாடுகின்ற இச்சந்தர்ப்பத்தில் ஆக்கபூர்வமான ஒரு மலரை வெளிக்கொணர்வது நமக்குப் பெருமையைத் தருகின்றது.

பொதுவாக, இது போன்ற பாடசாலை மலர்கள், கல்வி வளர்ச்சிக்கு உழைத்த பெரியார்கள், ஊர்ப்பிரமுகர்கள், பாடசாலையோடு தொடர் பான நிகழ்ச்சிகள் என்ற வகையில் 'புகழ்பரப்பும்' மலர்களாகவே அமை வது வழக்கம். ஆனால், இந்த மலர் அந்த மரபுகளை மீறி, இன்றைய கல்வி வெளிப்பாட்டினையும் தேவைகளையும் ஒட்டி கல்வித் துறை நிபுணர்கள், சிந்தனையாளர்களின் கருவூலங்களைத் தாங்கி வெளிவருகின்றது. இதன் கார

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ணமாக புதியகல்வித்திட்டத்தின் பகைப்புலனைத் தெளிவுபடுத்தும் வகையில் கட்டுரைகள் இடம்பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது. அறிஞர்களின் பலவிதமான கருத்துக்களையும் வரவேற்று ஒரு கருத்தரங்க மலராக வெளியிட்டிருக்கிறோம். அதேநேரத்தில், எமது வித்தியாலயத்தையும், அதன் நூற்றாண்டுப் பணியினையும் நாம் மறந்து விடவில்லை. பாராட்ட வேண்டிய அந்தப்பணியையும் நடு நின்று செய்திருக்கின்றோம். எமது மாணவமணிகளின் ஆக்கங்களையும் வெளியிட்டிருக்கின்றோம். அடைக்கல நாயகியின் நிழலில் வளர்ந்தோங்கியுள்ள வித்தியாலயமாகையால், மலருக்கு 'அடைக்கலம்' எனப்பெயர் சூட்டியுள்ளோம். இம்மலர், மாணவர்களையும் தமிழ் ஆர்வங்கொண்ட அன்பர்களையும், கல்வித்துறையில் ஈடுபாடுள்ள அறிஞர்களையும் கவர்ந்து, பெரும்பயன் நல்கும் என்று கருதுகின்றோம்.

இம்மலரை உருவாக்குவதில் எமக்குப் பெருந்துணையாய் நின்று உதவியவர்கள் வணிகப்பெருமக்களாவர். விற்பனைசெய்வதற்கும், விளம்பரப்படுத்துவதற்கும் எதுவுமேயில்லாத போதும், கல்விப் பணியைக் கௌரவிப்பதற்காக கஷ்டங்களின் மத்தியிலும், விளம்பரங்கள் தந்தும், விளம்பரங்களாக அல்லாமல், வெற்றிடங்களை வாங்கி அன்பளிப்புச் செய்தும், வாழ்த்துக்களை நல்கியும் அவர்கள் அளித்த உதவி பாராட்டுக்குரியது. இந்த வணிகப் பெருமக்கள் அமைத்துத்தந்த படுதாவில், கல்விமான்களும், எழுத்தாளர்களும் கவிஞர்களும் தங்கள் கைவண்ணத்தைக் காட்டியுள்ளனர். பலவிதமான அன்றாடப் பிரச்சினைகளுக்கிடையில், தமது சிரமத்தைப் பொருட்படுத்தாது கட்டுரைகள், கவிதைகள் எழுதி உதவிய அறிஞர்களுக்கு நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளோம்.

எமது வித்தியாலயத்தின் நூற்றாண்டுவிழாவை வாழ்த்தியும், மலரை வாழ்த்தியும் ஆசிச்செய்திகள் வழங்கிய யாழ். ஆயர் மகா வந். கலாநிதி வ. தியோகுப்பிள்ளை அவர்களுக்கும், கல்வி அமைச்சின் செயலாளரும் கல்வி மா பணிப்பாளருமான கலாநிதி பிரேமதாச உடகம, மேலதிகச் செயலாளர், கலாநிதி கே. எச். எம். சுமதிபால, பேரவை உறுப்பினர் திரு. சி. எக்ஸ். மாட்டீன், வடமாநிலக் கல்விப்பணிப்பாளர், திரு. தி. மாணிக்கவாசகர், தமிழ்ப்பிரிவுக் கல்விப்பணிப்பாளர், திரு. க. கனகசபாபதி, யாழ் நகர முதல்வர், திரு. அல்பிரட் தங்கராசா துரையப்பா, திருக்குடும்பக் கன்னியர்சபை மாகாணத்தலைவி, அதி சங். சகோதரி யூளாலி ஆகியோருக்கும் எங்கள் நன்றி உரியது.

இம்மலர் சிறப்புற வெளிவருவதில், எல்லாவகையிலும் தாராள மனதுடன் நடந்துகொண்ட எமது அதிபருக்கும், விளம்பரங்கள் சேகரித்துதவியநண்பர்களுக்கும், எம்மோடு ஒத்துழைத்த ஆசிரியர்களுக்கும் மலர்க்குழுவினருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

கடைசியாக, இம்மலரை மிகக் குறுகிய காலத்தில் அச்சியற்றியுதவிய ஆசீர்வாதம் அச்சக உரிமையாளர் திரு. மு. வி. ஆசீர்வாதம் ஜே. பி. அவர்களுக்கும், அச்சகத் தொழிலாள நண்பர்களுக்கும் எமது நன்றி.

—ஆசிரியர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிபரின் அறிக்கை

பணிகளுள் எல்லாம் தலை சிறந்தது கல்விப்பணியாகும். ''அன்னசத்திரம் ஆயிரம் வைத்தல், ஆலயம் பதினாயிரம் நாட்டல், அன்னயாவினும் புண்ணியங்கோடி, ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல்'' என்பது பாரதி வாக்கு. ஆனால் இப்பணியில் ஈடுபட்டவர்களுக்கு இடர்ப்பாடுகள் ஏற்படுவது வழக்கம். எனினும், இன்பமும், ஆத்மலாபமும் நிச்சயமாகும். இந்த அடிப்படையில் ஆரம்பிக்கப்பட்ட எமது வித்தியாலயத்தின் நூற்றாண்டுவிழா கொண்டாடப்படும் இவ்வேளையில், இதனை ஆரம்பித்து வளர்த்த பெருமக்களின் தன்னலமற்ற சேவையையும், தியாகவுணர்வையும் நினைவு கூரக்கடமைப்பட்டுள்ளோம்.

அடைக்கல அன்னையின் ஆசியுடன், நூறாண்டுகளுக்கு முன்பு இவ்வித்தியாலயத்தைத் தொடக்கியவர்கள், யாழ்ப்பாணம் கத்தோலிக்க திருச்சபையினர் என்பது எல்லோருக்கும் தெரிந்த விஷயம். இதைத் தொடக்கி, எத்தனையோ கஷ்டங்களுக்கு மத்தியில்— அரசு, இப் பாடசாலையைப் பொறுப்பேற்கும் வரை—சுமார் 86 ஆண்டுகள் நிர்வகித்து, காத்து, வளர்த்து இன்றைய உன்னத நிலைக்கு உயர்த்திய பெருமை திருச்சபைக்குரியதாகும். கல்வி வளர்ச்சியோடு, ஸ்தாபன வளர்ச்சியை இணைத்து, இதை முன்னேற்றுவதற்குக் காலத்துக்குக் காலம், இவ்வித்தியாலயத்தின் தலைமைப் பீடத்தைப் பொறுப்பேற்று நடத்திய அதிபர்களும் உதவி ஆசிரியர்களும் எவ்வளவு பாடுபட்டிருப்பார்கள் என்பதை எம்மால் உணரமுடிகின்றது. திருக்குடும்பத்தைச் சேர்ந்த கன்னியர்கள் கையிலும் சுமார் 25 ஆண்டுகள் இதன் தலைமைப் பொறுப்பு இருந்திருக்கிறது. அவர்கள் சேவையும் அளவிடற்பாலது. திருக்குடும்பக் கன்னியர் சபையின் மாகாணத் தலைவியான அதி. சங். சகோ. யூளாலி அவர்களின் பணியாலும் சிலகாலம் சிறப்படைந்துள்ளது. அத்துடன், ஒரு கல்வி நிறுவனம், அந்த நிறுவன்ம் அமைந்துள்ள பகுதியில் வாழும் பெற்றோரின் ஆதரவின்றி உயர் நிலையடைய முடியாது என்பதும் எமக்குத் தெரியும். மொத்தத்தில், எமது வித்தியாலயத்தை அணையா விளக்காகக் காத்துவந்த எல்லா ஆயர்களுக்கும், குறிப்பாக அமரரான ஆயர் மகா வந். கலாநிதி எமிலியானுஸ்பிள்ளை அவர்களுக்கும் எமது நன்றிக்கடன் உரியது. இன்றைய யாழ். ஆயர் மகா வந். கலாநிதி வ. தியோகுப்பிள்ளையவர்களும், திருச் சபையின் பாரம்பரியத்துக்கேற்ப—பாடசாலைகளை அரசு பொறுப்பேற்றதாயினும்—தமது நல்லாசியை எமக்கு வழங்கி வருகிறார் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவிக்கின்றேன்.

இந்தவகையில், இவ்வித்தியாலயத்தை ஆரம்பித்து, உருவாக்கி, கட்டிக்காத்து வளர்த்து உயர் நிலைக்குக் கொண்டு வந்துள்ள சகல தியாக சீலர்களுக்கும் தலைவணங்குகின்றோம். இத்தகையதொரு வித்தியாலயத்தில், அதன் நூற்றாண்டு விழாக் கொண்டாடப்படுகின்ற அரிய சந்தர்ப்பத்தில் அதிபராகப் பணியாற்றக் கிடைத்த நானும், எனது உதவி ஆசிரியர்களும் பாக்கியசாலிகள் என்பதில் சந்தேகமில்லை. எல்லோருக்கும் தோன்றாத் துணையாய் நின்று, எம்மை அரவணைத்து, 'எடுத்த காரியம்யாவினும் வெற்றி'யீட்டச் செய்த அன்னை, அடைக்கல நாயகியைப் பணிகின்றோம்.

## புதிய கல்வித் திட்டமும் புதிய வாய்ப்புகளும்

யாழ்ப்பாணப் பட்டினத்தில், பலவிதமான வசதிகளும், படித்தவர்கள், பணக்காரர்கள் எனப்படுவோரின் தயையும் நிறைந்த பல பெரிய கல்வி நிறுவனங்களின் நடுவே, எமது வித்தியாலயம் அமைந்துள்ளது. இந்தப் பெரிய கல்வி நிறுவனங்களில் கற்கும் மாணவர்களின் 'வளர்ப்புத் தொட்டிலாக' எமது வித்தியாலயம் இருந்து வருவதைக் குறிப்பிட விரும்புகிறேன். எமது வித்தியாலயத்தில் திறமையாகக் கற்று முன்னுக்கு வரும் மாணவர்களை, அவர்களது பெற்றோர், இடைநடுவில் இத்தகைய பெரிய கல்வி நிலையங்களுக்கு மாற்றி விடுகின்றார்கள். வேறொரு வகையில் இதைச் சொல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வதானுல், பெரிய கல்வி நிலையங்கள், எம்மைப்போன்ற வித்தியாலயங்களிலிருந்து மாணவர்களை 'வடிகட்டி' எடுக்கிருர்கள் எனலாம்.

பெரியபள்ளிக்கூடங்கள், சிறியபள்ளிக் கூடங்களை நசுக்குகின்றனவா? பெற்ருரும், இத்தகைய புறக்கவர்ச்சிகளால் ஈர்க்கப்படு கின்ருர்களா? என்பது பிரச்சினைக்குரிய விடயமாகும், எது எப்படி இருந்த போதிலும், இத்தகைய பெரிய கல்விநிலையங்களின் 'படிகளில் ஏறத்தகுதியற்றவர்களெனப் புறக்கணிக்கப்பட்ட' வறிய—உழைப்பாளிமக்களின் பிள்ளைகளுக்கு நாம் புகலிடமாக விளங்குகின்ருேம் என்பது எமக்குப் பெருமையைத் தருகின்றது.

புதியகல்வித் திட்டச் செயற்பாட்டில், 'கல்வியைப் பெறுவதில்' அல்லது 'கல்வியூட்டுவதில்' மட்டுமல்ல, பெரியபள்ளிக் கூடங்கள்—சிறியபள்ளிக் கூடங்கள் என்ற ஏற்றத்தாழ்வுகள் ஒழிக்கப்படுவதற்கான நம்பிக்கை தெரிவிக்கப்பட்டுள்ளது மகிழ்ச்சி தரும் செய்தியாகும். கைத்திறனை வளர்ப்பதன் மூலம், வாழ்க்கைக் கேற்ற தொழில் ஒன்றுக்குத் தம்மை தயாராக்கிக் கொள்ள நெறிப்படுத்துதல் புதிய கல்வித் திட்டத்தின் முக்கிய அம்சமாகும். இத்திட்டத்தின் மூலம், உண்மையில், இப்பகுதியில் வாழும் சாதாரண உழைப்பாளி மக்களின் பிள்ளைகள், சிறந்த முறையில் கல்வியைப் பெறவும், கல்வியினுல் வாழ்க்கையைப் பயனுள்ளதாக்கவுமான வாய்ப்புகள், முன்பிருந்ததைவிட மேலும் பலமாய் அமையப் பெற்றுள்ளதென்பதை இச்சந்தர்ப்பத்தில் தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளேன்.

## கல்வி, விளையாட்டு, கலைகள்

இவ்வித்தியாலயத்தின் ஆரம்ப கால மாணவர் தொகை 47. ஆசிரியர் இருவர். தற்போது சுமார் 600 மாணவர்கள் படிக்கின்ருர்கள். 22 ஆசிரியர்கள் பணிபுரிகின்ருர்கள். ஒரு பிரதம பாடசாலையாக ஆரம்பிக்கப்பட்ட இவ்வித்தியாலயம், இப்போது ஒரு சிரேட்ட வித்தியாலயமாகத் திகழ்கின்றது. முன்னர், கலைப்பாடங்கள் மாத்திரம் கற்பிக்கப்பட்டுவந்தன. படிப்படியாக வளர்ச்சி பெற்று, இன்று கலைகளுடன், விஞ்ஞான, தொழில் முன்னிலைப்பாட நெறிகளையும் கற்பிக்கும் நிலைக்கு உயர்ந்துள்ளது.

1952ம் ஆண்டு, சி. பா. த. வகுப்பு ஆரம்பிக்கப்பட்டது. அப்போது, வித்தியாலயத்தின் தலைமைப் பொறுப்பு வண. கன்னியரின் கீழ் இருந்ததால், 7ம் வகுப்புக்கு மேல் ஆண்பிள்ளைகள் படிக்க முடியாதிருந்தது. அதனுல் மேல் வகுப்புகளில் மாணவர் தொகை குறைவாயிருந்தது. சி. பா. த. வகுப்புப்பரீட்சைகளில் கணிசமான அளவு சித்திகள் கிடைத்துள்ளன.

1968-ம் ஆண்டு பாடசாலைகள் புனருத்தாரணம் செய்யப்பட்டபோது, இவ்வித்தியாலயத்தில் 7-ம் தரம் வரை தான் படிக்க முடியும் என்ற ஒரு நிச்சயமற்ற தகவலின் காரணமாக, அந்த ஆண்டு 7-ம் தரம் சித்தியெய்திய முழு மாணவரும் வேறு பாடசாலைகளுக்கு மாறிச் சென்றனர். அதன் காரணமாக 72-ம் ஆண்டில் க. பொ. த. வகுப்புக்குத் தோற்றும் மாணவர்கள் இருக்கவில்லை.

பொதுவாக மாணவர்களின் கல்வி வளர்ச்சி சகல வகுப்பு மட்டங்களிலும் முன்னேற்றம் அடைந்துள்ளது. மறைக் கல்விப் பரீட்சையில் முக்கிய இடங்கள் பெற்றுள்ளனர். கடந்த காலங்களில் நடைபெற்ற தமிழ்த்திறன் போட்டிகளில் நியாயமான அளவு வெற்றிகள் ஈட்டியுள்ளனர்.

வட்டார, மாவட்ட ரீதியில் நடைபெறும் விளையாட்டுப் போட்டிகளிலும், கலைவிழாக்களிலும், அநேகமாக, ஆண்டு தோறும் முக்கிய ஸ்தானங்களை எமது மாணவர் கைப்பற்றியுள்ளனர்; வெள்ளிக் கிண்ணங்கள் பரிசு பெற்றுள்ளனர்.

குருளைச்சாரணர் இயக்கம் சிறந்த முறையில் இயங்கி வருகின்றது.

இவ்வாண்டுத் தொடக்கத்தில், வேம்படி மகளிர் கல்லூரியில் முதலாம் தரம் மூடப்பட்டமையினுல் அங்கு அனுமதி கோரிய பிள்ளைகளுக்கு எமது வித்தியாலயம் புகலிடம் அளித்துள்ளமை குறிப்பிடத் தக்கதாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கட்டடங்கள், தளபாடங்கள்

அரசு, பாடசாலைகளைப் பொறுப்பேற்ற பின், இவ்வித்தியாலயத்துக்கு கட்டடங்கள் தளபாடங்கள் போன்ற உதவிகள் கிடைக்கவில்லை என்பது ஒரு நீண்டகாலக் குறையாக இருந்தது. இடவசதியின்மையும், தளபாடங்கள் பற்றுக்குறையும் இவ்வித்தியாலயத்தின் முன்னேற்றத்தைப் பெரிதும் பாதித்து வந்துள்ளன என்பது மறுக்கமுடியாத உண்மை. இவ்விரு குறைகளில், ஒரு குறை தற்போது நீக்கப்பட்டுள்ளது. அண்மையில் இவ்வித்தியாலயத்துக்கென இரு கட்டடங்கள் கட்டப்பட்டதனால், இட நெருக்கடி தீர்ந்துள்ளதை நன்றியுடன் தெரிவிக்கின்றேன்.

சென்ற ஆண்டு யாழ்ப்பாணத்துக்கு உத்தியோக பூர்வமாக விஜயம் செய்த மாண்புமிகு கல்வி அமைச்சர், கலாநிதி அல்ஹாஜ் பதியுத்தீன் மஹ்மூத் அவர்கள், 15-5-72இல் எமது பாடசாலையைத் தரிசித்து, 60 × 20 அடி அளவான ஒரு கட்டடத்துக்கு அடிக்கல் நாட்டிச் சென்றார். அக்கட்டடம் விரைவில் பூர்த்தியாக்கப்பட்டு, 15-9-72 இல் யாழ். தேசியப்பேரவை உறுப்பினர் திரு. சி. எக்ஸ். மாட்டீன் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. தொடர்ந்து, 25-10-72 இல் அப்போதிருந்த வடமாநிலக் கல்வி அதிபதி திரு. விஜிதா அபயசேகரா அவர்களால் 100 × 20 அடி அளவான மற்றோர் கட்டடத்துக்கு அடிக்கல் நாட்டப்பட்டது. இக்கட்டடமும் பூர்த்தியாக்கப்பட்டுள்ளது; நூற்றாண்டுவிழாவில், இக்கட்டடத்தைத் திறந்து வைப்பது ஒரு முக்கிய வைபவமாகும்.

இடவசதிக்குறைவால், நீண்டகாலமாக எமது மாணவர்களுக்கு ஏற்பட்ட குறை நீக்கப்பட்டுள்ளதை மகிழ்ச்சியுடன் தெரிவிக்கின்றேன். இக்கட்டடங்களுக்கான நிதி ஒதுக்கீட்டைச் செய்து தந்தவர், இவ் வித்தியாலய வளர்ச்சியில் கண்ணுங் கருத்துமாயுள்ள தேசியப் பேரவை உறுப்பினர் திரு. சி. எக்ஸ். மாட்டீன் அவர்களாவார். அவருக்கும், கல்வித் திணைக்களத்துக்கும் நாம் நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளோம்.

கட்டடப் பிரச்சினை தீர்ந்துள்ள இச்சமயத்தில், தளபாடப்பிரச்சினை நிலைகொண்டுள்ளதை வருத்தத்துடன் சுட்டிக்காட்ட வேண்டியுள்ளது. சமீபகாலமாக எமது வித்தியாலயம், கல்வித் திணைக்களத்தோடு தொடர்புடைய பல வேறுபட்ட பரீட்சைகளுக்கும், வகுப்புகளுக்கும். கருத்தரங்குகள் போன்ற நிகழ்ச்சிகளுக்கும் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. ஆனால் அப்படியான சந்தர்ப்பங்களில் ஒழுங்கான ஒருமைப்பாடான முறையில் ஆசன ஏற்பாடுகள் செய்வதில் மிகுந்த சிரமமேற்படுகின்றது. வகுப்புகளில் உள்ளவையோ பற்றுக்குறைத் தளபாடங்கள்; அவையும் பலதரப்பட்ட அளவுகள், அமைப்புகளில் உள்ளதால் பெரும் கஷ்டத்துக்குள்ளாகின்றோம். இக் கஷ்டத்தை நீக்க உதவும்படி கல்வித் திணைக்களத்தைப் பணிவுடன் வேண்டுகின்றேன்,

## குடிநீர்ப்பிரச்சினை

சுமார் 600 பிள்ளைகள் படிக்கும் எமது வித்தியாலயத்துக்கென தனிப்பட்ட முறையிலே குடி தண்ணீர் வசதி இடையாதென்பதை அறிய ஆச்சரியப்படுவீர்கள். வித்தியாலயத்தையொட்டி இரு நல்லதண்ணீர்க் கிணறுகள் உள்ளன. பாடசாலையை அரசு சுவீகரித்தபோது இக்கிணறுகள் இரண்டும் கோவில் வளவுடன் சேர்ந்தமையால்—எமக்கெனக் கிணறு இல்லாமற் போயிற்று. ஆனாலும், பிள்ளைகள் இக் கிணற்று நீரைப் பருகுவதற்கு எவ்வித இடைஞ்சலும் ஏற்படவில்லை. எனினும் இடைவேளையில் குறுகிய நேரத்தில் சிறுவர்கள் முண்டியடித்து நீரை அள்ளிப்பருகுவதில் பெரும் சிரமத்தை மேற்கொண்டனர்.

இந்தச் சிரமத்தைப் போக்குவதற்கு நாம் தற்காலிகமாக ஒரு ஏற்பாட்டைச் செய்துள்ளோம்.

ஞானம் ஸ்ருடியோ அதிபர் திரு. ஞானப்பிரகாசம் அவர்களின் உதவியால் ஒருசிறு தண்ணீர்த் தொட்டியை அமைத்து, பங்குக் குரவரின் இல்லத்திலிருந்து ஒரு றப்பர்க் குழாய் மூலம் அத்தொட்டியை நிறைத்து பிள்ளைகளின் குடிநீர்ப்பிரச்சினையைத் தீர்த்துள்ளோம். இந்த உதவியைச் செய்து தந்த திரு. ஞானப்பிரகாசம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களுக்கும் நாம் நன்றி கூறக் கடமைப் பட்டுள்ளோம். வண. ஞானப்பிள்ளையடிகள், எமக்கு திறந்தவெளியரங்கு மேடை யொன்றை அமைத்து உதவியிருக்கின்றார். பல வழிகளிலும் வித்தியாலய வளர்ச்சிக்கு உறுதுணையாயிருந்ததுடன், பிள்ளைகளின் ஆத்மீக வளர்ச்சியிலும் ஈடுபாடுகாட்டி யதை இங்கு நாம் குறிப்பிடக் கடமைப் பட்டுள்ளோம்.

இவ்வித்தியாலயத்துக்கு நிரந்தரமான குடி நீர்ச்சேவை ஏற்படுத்த வேண்டியது அவசியமாயுள்ளது. புதியகல்வித்திட்டத் தில் இடம் பெற்றிருப்பதால் மாத்திர மல்ல, நாட்டின் உணவு அபிவிருத்தியில் மாணவரைப் பயிற்றுவது முக்கியமாகை யால் பயிர்ச்செய்கையை முக்கியப்படுத்து தற்கு ஒரு கிணறு தோண்டப்படுவது அவ சியம். அல்லது குழாய் இணைப்பு மூலம் குடிநீர்ச் சேவை ஏற்படுத்தல் வேண்டும். தாகந்தீர்த்தல், தர்மங்களுள் முதன்மை யானதாகும், அதுவும் பள்ளிச்சிறுர்க் கெனில் அதன் பலனை எடுத்துக் கூற வேண்டியதில்லை. தர்ம சிந்தையும், தயாள குணமுமுள்ள பெரியார்கள் இந்த உதவி யைச் செய்து தருவார்கள் என எதிர் பார்க்கின்றேன்.

## தொழிற் கூடம்

## மனையியற் கூடம்

வித்தியாலயப் பெற்றுர்—ஆசிரியர் சங்கம், வித்தியாலய வளர்ச்சிக்கு ஆற்றி வரும் சேவையை இங்கு குறிப்பிட விரும்பு கின்றேன். மாண்புமிகு கல்வியமைச் சருக்கு நாம் அளித்த வரவேற்புபசாரத் தின்போது, தொழில் முன்னிலைப்பாட நெறிக்கான ஒரு கட்டடத்தை அமைக்க முயற்சிகள் மேற்கொள்வதாக வாக்குறுதி யளித்திருந்தோம். பெ. ஆ. சங்கம், ஒரு தொழிற் கூடத்தை அமைத்துத் தந்து, கல்வி அமைச்சருக்கு நாம் கொடுத்த வாக் குறுதியைக் காப்பாற்றியதுமன்றி—மனையி யற் சாஸ்திரத்துக்கான கூடம் ஒன்றையும் அமைத்துக் கொடுத்திருக்கிறது. வித்தி யாலயத்தின் ஒரு பகுதியை அறையாக்கி, அலுமாரிகள், தட்டுகள், கழுவு தொட்டி முதலியன அமைக்கப்பட்டுள்ளன.

இவ்விரு கூடங்களை அமைத்ததன் மூலம் தொழில் முன்னிலைப்பாடங்களையும், மனையியற் கலையையும் நன்கு கற்க வாய்ப்பு ஏற்படும் என்பதில் சந்தேகமில்லை. சென்ற 21-3-73ல் திரைப்பட உதவி நிதிக் காட் சியை ஒழுங்கு செய்து, அதன் மூலம் கிடைத்த நிதியிலிருந்து இவ் வேலைகள் செய்யப்பட்டுள்ளன. பெ. ஆ. சங்கத்தின் முன்மாதிரியான உதவிக்கு நன்றி கூறு கின்றேன்.

அடைக்கலமாதா கோயில் தர்மச் சீமாட்டிகள் சபையைச் சேர்ந்தவர்கள், எமது தொழில் முன்னிலைப்பாட நெறி ஒன்றுக்கான தும்புத்தொழிலைச் செய் வதற்கு—கயிறு திரிக்கும் இராட்டைச் சோடி ஒன்றைச்செய்து உதவியுள்ளார்கள். அவர்களுக்கும் என் நன்றியைத் தெரிவிக் கின்றேன்.

## வேறு தேவைகள்

வித்தியாலயத்தின் அவசியத் தேவை கள் சிலவற்றை முன்பு குறிப்பிட்டுள்ளேன். அவற்றை விட-கல்வித் திணைக்களம் கருணை கூர்ந்து செய்து தர வேண்டிய தேவை ஒன் றும்,பெருமக்களின் கருணையால் நிறைவேற வேண்டிய சில உதவிகளும் உள்ளன. இவ் வித்தியாலயத்துக்கு ஒரு விஞ்ஞான கூடம் இல்லாமை பெருங் குறையாகும். இந்த உதவி தனி மனிதர்களால் செய்ய முடி யாததாகும். இதனைக் கல்வித் திணைக்களம் செய்து தந்தால், புதிய கல்வித் திட்டத் தின்படி, விஞ்ஞான பாடத்தை வெறும் ஏட்டுக் கல்வியாயன்றி செயல் முறைப் படிப்பாக்கவும், அதனுல் மாணவர் பயன் பெறவும் முடியும் என்பதையும் கூற விழை கின்றேன்.

மற்றது,வித்தியாலயக் கட்டடங்களும் தளபாடங்களும், காணியும் பாதுகாப் பின்றி உள்ளன. இதன் வடக்கு, கிழக்கு எல்லைகளுக்கு மதில் கட்டப்படவேண்டும். அத்துடன் வித்தியாலயத்துக்கு மின்சார வசதி ஏற்படுத்த வேண்டும். இந்த உதவி களையாவது வசதி படைத்தவர்கள் கூட் டாகச் சேர்ந்தோ, தனிப்பட்ட முறையிலோ செய்து தருவது, கல்வி முன்னேற்றத்துக்கு உதவியாகவிருக்குமென்று நம்புகின்றேன்



162591
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வித்தியாலயத்துக்கென தட்டச்சுப் பொறியும், பிரதி எடுக்கும் மெசினும் இல்லாதது பெரும் குறையாகவுள்ளது. இதன் காரணமாக, பரீட்சைக் காலங்களில் மிகவும் அல்லற்படுகின்றோம். மாணவர்களைச் சிறந்த முறையில் பரீட்சிக்க முடியாதிருக்கின்றது. இந்த இரண்டு மெசின்களும் கிடைக்கக் கூடுமானால், பல வழிகளிலும் அனுகூலமேற்படுமென்பதை பணிவுடன் குறிப்பிடுகின்றேன்.

### நூற்றாண்டு விழாச் சிறப்புமலர்

நூற்றாண்டு விழாக்கொண்டாடப்படும் இவ்வரிய சந்தர்ப்பத்தில், எமது வித்தியாலயத்தின் வளர்ச்சியை எடுத்துக்காட்டும் வகையில் ஒரு சிறப்பு மலரை வெளியிடுவதில் நாம் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றோம். இம்மலரை உருவாக்குவதில் பெரும் பாடுபட்டு உழைத்து, தன் பணியைச் சிறப்பாகச் செய்த மலர் ஆசிரியர் திரு. என். கே. ரகுநாதன் அவர்களுக்கு நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன்.

### எல்லோர்க்கும் நன்றி!

நூற்றாண்டுவிழாவை வாழ்த்திச் செய்திகள் அனுப்பிய சகல பெரியார்களுக்கும்,

கல்வி சம்பந்தமான உதவிகளையும், ஆலோசனைகளையும் அளித்துவந்த யாழ்ப்பாணக் கல்வித் திணைக்களத்தைச் சேர்ந்த முன்னைய கல்வி அதிபதிகளுக்கும், எமது வித்தியாலய வளர்ச்சியில் அக்கறை செலுத்தி வரும் இன்றைய கல்வி அதிபதி திரு. தி. மாணிக்கவாசகர் அவர்களுக்கும்,

எமது கல்வித் தேவைகளை உடனுக்குடன் நிறைவேற்றியுதவிய வட்டாரக் கல்வி அதிகாரி ஜனாப். எம். எம். மன்சூர் அவர்களுக்கும்,

ஒரே குடும்பத்தவர்கள் போன்ற ஐக்கியத்துடனும், கட்டுப்பாட்டுடனும், கடமையுணர்வுடனும் பணியாற்றும் எனது உடன் ஆசிரியர்களுக்கும்,

வித்தியாலய வளர்ச்சியில் சிரத்தையெடுத்து எம்மை உற்சாகப்படுத்தும் பெற்றோருக்கும் நன்றி தெரிவிக்கின்றேன்.

புனித மரியாள் வித்தியாலயம்,
யாழ்ப்பாணம்
8-6-73

றெகேஷன் யோசேப்பு
(அதிபர்)


## ஐந்தாண்டுத் திட்டத்தில் கல்வியின் நோக்கம்

"பொருளாதார அபிவிருத்தியின் அடிப்படை நோக்கம், மக்களுக்குச் சிறந்த, நிறைவான, அதிக திருப்தியைத் தரும் வாழ்க்கையை அமைத்துக் கொள்ள வசதி அளிப்பதேயாகும். கல்வியினூலான மிகப் பெரும் முதலீட்டின் நோக்கமும் இத்தகையதொன்றாக இருக்குமானால், அதையிட்டு அஞ்சுவதற்கு அவசியமில்லை. கல்விபெற்ற மக்கள் பொருளாதாரம் அளிக்கக் கூடிய உற்பத்தி சார்ந்த தொழில்களுக்கு ஏற்ற வகையில் அமையும் அளவிற்கே அவர்கள் நாட்டின் செல்வமாக அமைய முடியும்."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திருமதி ம. கணபதிப்பிள்ளை
சிரேஷ்ட உதவி ஆசிரியர்



திரு. என். கே. ரகுநாதன்
நூற்றாண்டு விழாச் சிறப்புமலர்
பொறுப்பாசிரியர்



அருள் திரு. பி. சூசைப்பிள்ளை அடிகள்
ஆத்மீக வழிகாட்டி



ஜனாப் எம். எம். மன்சூர்
கல்வி வழிகாட்டி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பெற்ருர் - ஆசிரியர் சங்கம்



குருளைச் சாரணர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிவியலும் அருள்நெறியும்

அருள் திரு ரி. ஏ. ஜே. மதுரநாயகம் அடிகள்
யாழ். சம்பத்திரிசியார் கல்லூரி அதிபர்; யாழ். கத்தோலிக்கப் பாடசாலைகளின் முன்னாள் பிரதம முகாமையாளர்

"முன்னேற்றப் பாதையில் மூச்சுடன் அடி எடுத்துவைத்து, அரும் பெரும் சாதனைகளைச் செய்கிறது அறிவு. அதற்கு ஈடான வளர்ச்சி, சமய - ஒழுக்கத் துறைகளில் காணப்படவில்லை என்றால், அழிவுப் பள்ளத்தில் அதிவேகமாகவும் அதிபயங்கரமாகவும் விழவேண்டியிருக்கும்." இத்தகைய சமய எழுச்சிக்குரலை, சாத்தே என்ற பேரறிஞர் விடுக்கின்றார்.

அறிவுத் துறையில் அன்றாடம் புதிதாகக் கண்டுபிடிக்கப்படுபவை அளப்பரியன. அறிவியலின் பல கூறுகளான உள இயல், சமூக இயல், நுண்கலையியல் மனித இயல், போன்ற துறைகளில், புத்தம் புதியன கண்டுபிடிக்கப்பட்டு, நாளாந்தம் நம்மை வியப்பில் ஆழ்த்திய வண்ணம் இருக்கின்றன. இத்தனைக்கும், உலகைக் கட்டிக் காக்கும் புதிய நியதிகளின் முன், அறிவு மேதைகள், அஞ்சலி செலுத்தி, அமைதியாகத் தலை வணங்கி நிற்கின்றனர்.

இயற்கையின் எழில் விளையாட்டின் முன் ஏற்படும் வியப்பு, இயற்கை சக்திகளை மட்டும் ஆராயும் திறனுடன் நின்றுவிடாமல், "ஏன்?" "எப்படி?" இவைகள் நிகழ்கின்றன என்ற அடிப்படைக் கேள்விகளுக்கு நம்மை இட்டுச் செல்லவேண்டும். புவியில் தோன்றும் புதியனவற்றை வியந்து நோக்கும் புதுயுக மனிதன், தனது நிறைவற்ற குறித்த வரம்பிற்குட்பட்ட தன்மையையும் நன்கு உணரவேண்டும். கொடைகளின் நிறைவின்மையை உணர்ந்து கொள்வது தான் 'நான் பெற்ற கொடைகளின் நிறைவு' இது புனித அகுஸ்தீனாரின் மூதுரை. இயற்கையின் இரகசியங்களை ஆன்மீகரீதியில் அறிந்து கொள்ளவேண்டும் என்பதே இதன் உள் அர்த்தம்.

## அறிவு மேதைகளின் அடிச்சுவட்டில் :

"இயற்கையுடன் தொடர்புகொள்ளும் ஒவ்வொரு பொழுதும், எனது கரங்களால் கடவுளைத் தொடுவது போன்ற உணர்வு எழுகிறது" எனக்கூறிய மேதை கெப்ளர் தமது வாழ்வின் இறுதி வரைக்கும்— சமயக் கொள்கையில் வேர் ஊன்றி— திடகாத்திரக் கிறீஸ்தவ மகனாகத் திகழ்ந்தார்; அவர் புதிதாக கண்டுபிடித்ததில், இறைவனே தம்மைத் தாம் வெளிப்படுத்தினார் என உணர்ந்து, ஆனந்தக் கண்ணீர் வடித்தார். றொபட் பொயில் என்ற ஆங்கில அறிஞர் "அண்டகோளத்தை அலங்கரிக்கும் இறைவனின் வியத்தகு கைத்திறனைப் புலப்படுத்துவதே அறிவியல்" எனக்கூறி தமது இறைப்பற்றை அப்பட்டமாக அறிவித்தார். நியூட்டன் தமது விசுவாசத்தை இப்படி எடுத்துக் கூறுகிறார் "இறைவன் எல்லாவற்றையும் கட்டிக் காக்கின்றார். அவருக்கும் உலகிற்கும் உள்ள உறவு உள்ளத்துக்கும் உடலுக்கும் உரியதைப்போன்ற ஒன்றல்ல- அவர் உலகின் பெருந்தலைவன்' "என் ஆண்டவரே ! — உங்கள் தேவன்" என்றுதானே சொல்லுகிறோம்:

"இயற்கையில் எப்பக்கம் பார்க்கினும் அவரின் அடிச்சுவடு தெரிகிறதே — அறிவுள்ளவன் எவனும் இந்த உண்மையை உணராதிருக்க முடியாது" என்பது மில்டன் உரைக்கும் உறுதியான உண்மை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாறும் உலகும் மறுமலர்ச்சியும் :

சமயக் கல்வியிலும் சமய வழிபாட்டிலும்,
சமயப் பிடிப்பைப் புகுத்த. கடந்த ஒரு
சில ஆண்டுகளாக முயற்சிகள் எடுக்கப்பட்டு-
வெற்றியும் கிட்டியுள்ளது. ஆனால், முன்
னைய நிலைபோல் வாழ்வுக்கும் கொள்கைக்
கும் தொடர்பில்லாத வகையில் வாழ்க்
கையை உள்ளூர்ந்து தொடாதவகையில்,
இம் முயற்சிகள் அமையப் பார்க்கின்றன.
எத்தகைய நிதானத்துடனும் பண்புடனும்
இம்முயற்சிகள் மேற்கொள்ளப்படினும்,
அவை சமய மறுமலர்ச்சிக்கு பற்றுக்கோ
டாக அமைய மறுக்கின்றன. இம் மறு
மலர்ச்சிக்கு வேண்டியது ''சான்றாண்மை''
என்ற பண்பு. செபிப்பதற்கும் — அமைதி
யைக் கடைப்பிடிப்பதற்கும் — மனத்தை
ஒரு நிலைப்படுத்துதற்கும் உரிய வழிவகை
களை கையாளப் பயிலவேண்டும். ''கட்
டுப்பாடு'' இதற்கு ஒரு துணையாக அமைய
வேண்டும். அத்துடன் நின்றுவிடாது ஆன்ம
வளர்ச்சிக்குரிய ஒரு முக்கிய அம்சமாக,
கலை உணர்வுகளும் வளர்க்கப்படவேண்
டும்!

## தேவையும் சேவையும் :

திருச்சபையின் அவசர அழைப்பின்
ஒலி கேட்கிறது. ஏன்? யாருக்கு? அப்போஸ்
தொலிக்க சேவைபுரியும் ஆர்வமுள்ளவர்
களை அதுதட்டி எழுப்புகிறது. அறிவியலின்
பல்வேறு துறைகளில் இத்தகையோரின்
ஈடுபாடும் உழைப்பும் அவசியம் என்பதை
வற்புறுத்துகிறது. இந்த அவசர அழைப்
புக்கு உடனடியான பதில் கிடைக்கா
விட்டால், பயங்கர முடிவுகளை எதிர்பார்க்க
வேண்டியிருக்கும். இத்தகைய தொரு
முடிவை நாம் தவிர்க்க வேண்டுமானால்,
நம் வாழ்வில் இயேசு முழுமையாக ஏற்றுக்
கொள்ளப்படவேண்டும். அவரே நம் வாழ்
வின் தலைவனாகவும், இதயத்தில் ஆட்சி
செய்யும் இறைவனாகவும் அமர வேண்டும்.
அவரது அருளால் நமது வாழ்விலிருந்து சுய
நலம் களைந் தெறியப்பட வேண்டும். இந்
நிலையில்தான் புனித சின்னப்பருடன் நாமும்
சேர்ந்து ''என்னைப் பலப்படுத்தும் கிறீஸ்
துவுடன் சேர்ந்து நான் எதையும் சாதிப்
பேன்'' எனத் தைரியமாகச் சொல்லலாம்.
வேறுபாடுகளை மறந்து—மனித குலம் முழு
வதும் ஒன்றித்து இயங்கும் உயர் நிலையை
அடைய வேண்டுமானால்—இனமத பேதங்
களை விலக்கும் சகோதரத்துவ நிலை உறு
திப்பட வேண்டு மென்றால், உயர்ந்தவ
னென்றும் தாழ்ந்தவனென்றும் அந்நியன்
என்றும் அசல் பகைவன் என்றும் பிரிவு
படுத்தும் பிளவுகளை அகற்றும் சகோதரத்
துவம் வளரவேண்டும் என்றால், ''இறை
வனே நம் எல்லோருக்கும் தந்தை'' என்று,
வார்த்தையில் மட்டுமல்ல—வாழ்க்கையி
லும் செயலாற்ற வேண்டும். அவரில் நாம்
நிலைத்திருக்கும் அன்பில்தான் அகிலமே
ஒன்றாகும். இதுதான் ''ஒன்றே குலம்
ஒருவனே தேவன்'' என்பதன் தத்துவம்,

## ஆவே மரியா டிங் டொங் பெல்

அடைக்கலநாயகி ஆலயத்தின் கோபுரத்தில் அமைந்துள்ள மணிக்கூடு, யாழ்ப்பாண நகரின் சிறப்பு அம்சங்களில் ஒன்றாகும். ஒவ்வொரு 15 நிமிஷங்களுக்கும் ஒருதடவை, இம்மணிக்கூடு, இனிய ஓசை எழுப்பிப் பாடுகின்றது. அடைக்கலநாயகியை வாழ்த்தும் ''ஆவே மரியா'' என்பதுதான் அந்தப்பாட்டாகும்.

மக்கோனையிலுள்ள செள். வின்சென்ற் ஹோம் எனப்படும் சிறுவர் சீர் திருத்தப்பள்ளியைச் சேர்ந்த வண. சகோதரர்கள் சிலரால், இலங்கையிலேயே இம்மணிக்கூடு செய்யப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. இத்துறவிகள் ஜேர்மன் நாட்டைச்சேர்ந்தவர்களாவர்.

'சுருதி' பிசகாமல் ஓசையெழுப்புவதற்கு அனுகூலமாக அமைந்த சக்கரச் சில்லுகள், காலப் போக்கில் தேய்வுற்றதால், தற்போது அந்த இசை சற்றே பிசகாக ஒலிக்கின்றது.

லயனல் இம்மனுவல் என்பவரது அருமை அன்னையாரின் நினைவாக 25-6-48ல், இந்த மணிக்கூடு பொருத்தப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்வாங்கு வாழ...
# கல்வியிற் புரட்சி வேண்டும்!

கு. நேசையா
முன்னாள், சிரேஷ்ட கல்வி விரிவுரையாளர்,
இலங்கைப் பல்கலைக்கழகம்

## I

மனித குல வரலாற்றின் மிகப் புரட்சிகரமான யுகத்தில் வாழக்கிடைத்த பெரும் பாக்கியசாலிகள் நாம். ஒருபுறத்தில் விஞ்ஞான, தொழில் நுட்பத்துறைகளில் நிகழ்ந்துள்ள மகத்தான புரட்சி, "மனிதனின் மிக அடிப்படையான குணும்சங்களிலேயே தராதர மாற்றங்களை ஏற்படுத்தி, ஒருவகையில் சொல்லப்போனால், மனிதனின் மதிவன்மையையே புதுக்கி அமைத்துவிட்டது" எனலாம். எவ்வளவு தூரம் உலகம் முழுவதிலும் இந்த மாற்றத்தின் செல்வாக்குப் புதிந்துள்ளதென்பதை, இன்று ஒவ்வொரு தனிமனிதனும், அநேகமாக ஒருவர் தப்பாமல், வானொலி கேட்டு வருகிறுன் என்ற உண்மையிலிருந்தே கண்டு கொள்ளலாம்: இவர்களில் மிக மந்த மதியுள்ள ஒருவனுற் கூட, கண்டுபிடிப்பதற்குப் பெரும் மேதாவிலாசம் தேவைப்பட்ட நுட்ப உண்மைகளை இலகுவில் புரிந்து கொள்ள முடிகிறது. மறுபுறத்தில் இதே போன்ற யுக சம்பவமாகக் குறிப்பிடத்தக்க சமூகப் புரட்சி, மனிதனின் தனித்துவத்தையும், தன் மதிப்பையும் அவனுடைய சர்வதேச சமூக அங்கத்துவத்தையும் பிரகடனம் செய்து நிற்கிறது. இந்தவகையில் தான், அவன் ஒரு தனி மனிதனுகவும், பிரஜையாகவும், உற்பத்தியாளனுகவும், கண்டுபிடிப்பாளனுகவும், கலைஞனுகவும் முழுமையான தற்பூரணத்துவம் விழைகிறுன்.

இத்தகைய அடிப்படையான மாற்றத்தின் பின்னணியில்தான், கல்வி நிறைவேற்ற வேண்டிய பங்கு என்ன என்பதை, நாம் ஆராய வேண்டும். அடிப்படையில் முற்றிலும் புதிய விதமான சமூகங்களுக்கேற்ற முறையில், ஆண்களையும் பெண்களையும் தயார் செய்யவேண்டிய நிலையிலுள்ள கல்வி முறை, தானும் தன்னளவில் தன் நோக்கத்திலும் உள்ளடக்கத்திலும் நீடிப்பிலும் புரட்சிகரமான ஒரு மாற்றத்துக்கு உட்பட்டாக வேண்டுமென்பது வெளிப்படை. எனவே, கல்வியின் ஒவ்வொரு கட்டத்திலும் விஞ்ஞான, தொழில்நுட்பத்துறை அத்தியாவசிய அம்சமாக அமையவேண்டும். எனினும் இத் தொழில் நுட்பத் துறையின் தன்மைகளை இலங்கை போன்ற ஒரு நாட்டின் கிராமீய பண்பாட்டிற்குத் தக்கபடி தழுவி அமைக்க வேண்டியிருக்கலாம். அத்துடன் பாடசாலையும் அதன் நோக்கங்களும் புதிய சமூகத்துடன் இணைந்து போக வேண்டும்; உண்மையில் புதிய சமூக அமைப்பையே உருவாக்க உதவ வேண்டும். மனித வாழ்வின் பெறுபேறுகளை உயர்த்த உதவும் எளிமையான தொழில் நுட்ப, சமூகாசார முறைகளை, பரீட்சார்த்தமாகக் கடைப்பிடித்துப்பார்ப்பதற்கு, கல்வி நிலையங்கள் எல்லாமட்டங்களிலும் உதவி புரியவும் கூடும்.

## II

'ஐக்கிய நாடுகளின் கல்வி விஞ்ஞான கலாசார நிறுவனம் நியமித்த சர்வதேச கல்வி விருத்தி ஆய்வுக்குழு, வாழ்வாங்கு வாழ' என்னும் அறிக்கை நூலில், விருத்தியடைந்துவரும் நாடுகளில் கல்வி 'அந்நிய மாதிரி'களை அடிப்படையாகக்கொண்டிருக்கிறது என்று சுட்டிக்காட்டுகிறது. இத்தகைய கல்விக்கு, 'விதேசமுறைக்கல்வி'க்குள்ளது போலவே இரண்டு பெரும் பலவீனங்கள் பெரும்பாலும் உண்டென்று ஆய்வுக் குழு குறிப்பிடுகிறது: (அ) தொழில் நுட்பத்துறையின் வரவுக்கு முந்திய கல்வியையே அது வழங்குகிறது; (ஆ) மேன்மக்கள் கூட்டத்துக்குப் புது இரத்தம் பாய்ச்சும் விதத்தில் ஆளணியைத் தேர்ந்து சேர்த்துப் பயிற்றுவதற்கான வடிகட்டிபோலப் பாடசாலையைச் செயற்படவைக்கும் டாம்பீகக் கல்வி முறையாக அது விளங்குகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதன் விளைவாக நகர் சார்ந்த உயர்வர்க்கம் தான் பலப்படுகிறது என்பதன்று; விருத்தியடைந்து வரும் நாடுகளில் இக் கல்வி முறை கிராமத்திலிருந்து நகரத்துக்கான குடிபெயர்வையும் தூண்டிவிடுகிறது. மேலும், சமூக ஏற்றத்தாழ்வுகளும் சமத்துவமற்ற வீட்டுப் பின்னணிகளும் நிலவுமிடத்து, பாடசாலையிற் சேர்வதற்கான 'சம பிரவேச' வாய்ப்பு, தேறி முன்னேறுவதற்கான 'சமசந்தர்ப்ப' வாய்ப்பாகி விடுவதில்லை.

விருத்தியடைந்து வரும் நாடுகளில், இறக்குமதிக் கல்வி முறை குறித்த நாட்டின் பண்பாட்டுப் பின்னணிக்கும் சமூகச் சூழலுக்கும் தக்கபடிதழுவப்படாமையால் ஏற்பட்டுள்ள பிரத்தியேகமான மூன்றாவது பலவீனம் ஒன்றையும் ஆய்வுக்குழு குறிப்பிடுகிறது.

இலங்கையில் இடைநிலைக் கல்வி என்று தரப்படும் படிப்பு முறையில், நான்காவது பலவீனம் ஒன்றை நாம் கவனிக்கலாம். கல்வி பெறும்காலத்தில் அவ்வப்போது கற்காமல் தரித்து விடுவோரின் உயர்ந்த எதிர்காலத்திறமை வீணாவதால் ஏற்படும் எண்ணிக்கை வீழ்ச்சி ஒரு புறமிருக்க, சர்வதேச தராதரங்களின்படி இங்கு கல்வியின் தரவீழ்ச்சியும் காணப்படுகிறது. இங்கு இடைநிலைக் கல்வி புகட்டும் ஆசிரியர்களில் பத்தில் ஒரு பங்கினர் கூடப் பட்டதாரிகளல்லர். பட்டதாரிகளல்லாதாரில் மூன்றில் ஒரு பங்குக்கும் அதிகமானோர் பயிற்சி பெறாதவர்கள். சமீப வருடங்களில் நியமிக்கப்பட்ட பெருந்தொகையான 'மாணவ ஆசிரியர்'களுடன் சேர்த்து நோக்கினால், ஆசிரிய குலத்தின் பெரும் பகுதியினர் அரைகுறைக் கல்வி பெற்றவர்களென்றே கொள்ளவேண்டும். தவிரவும் படிப்பின் தரம், பட்டதாரிப் பத்திரம் பெறும் நோக்கைக் கொண்டிருப்பதாலும் பாதிக்கப்படுகிறது; ஒரு தொழிலைப் பெறும் பட்டத்தைச் சம்பாதிப்பதிலன்றி, ஒரு தொழிலைச் செய்யும் அறிவை ஈட்டுவதில் மாணவர்களுக்கு அதிக அக்கறையில்லை. உத்தியோக நாட்டத்தில் அதிகம் அழுத்தம் இல்லாமல், மனிதனின் இயல்பான அறிவு நாட்டத்திலும், தொடர்ந்து கற்கும் ஆவலிலும் தங்கியுள்ள, உண்மையான இலக்கே, கல்விக் கொள்கையின் திறவுகோலாய் அமைய வேண்டும்.

மனிதன் 'தன்னைத்தானாக்கிக்கொண்டு' வாழ்வாங்கு வாழச் செய்வதே கல்வியின் நோக்கம். உண்மையில், வேகமாக மாறி வரும் ஒரு தொழில் நுட்ப உலகில், தொழில் வினைகள் விரைந்து மாறும் நிலையில், ஒவ்வொருவரும் ஆயுட்காலத் தொழில்வினை ஒன்றுக்குத் தம்மைத் தயாரித்துக் கொள்வது அறவே முடியாத காரியம். தற் பூரணத்துவம் பெறும் நன்முனைப்புக்கும், தொழில்வினைகளின் தன்மைகள் மாறிக் கொண்டேயிருக்கும் அவ்வகதிக்கும் நிறைவு காண 'வாழ்நாள் முழுதும் கல்வி' கற்கும் முறையே வழி. ஒருவர், ஒரு வேலைத் துறையிலிருந்து மற்றொன்றுக்கு மாறவும், சில வேளை தன்சேவைக்காலத்தில் பல தடவை அவ்வாறு செய்யவும், அதேயளவுக்கு மீண்டும் மீண்டும் பயிற்சிபெறவும், எப்போதும் தயாராயிருக்க வேண்டும். அத்துடன், ஒருவரின் திறமைகள் எவ்வளவு அதிகமோ, அவை பூரணப்படுவதற்கு அவ்வளவு அதிக காலம் தேவைப்படும். எனவே ஒரு குறிப்பிட்டளவு பள்ளிப் படிப்போ, ஆயுளின் ஆரம்ப பருவத்தில் பல்கலைக்கழகத்திற் பெற்ற கல்வியோ, முதிர்ச்சி பெற்றுவரும் ஒருவரின் அறிவுத் தேவையைப் பூர்த்திசெய்ய முற்றிலும் போதாமற்போய் விடக்கூடும். ஏன், ஒவ்வொருவரும் தனக்குரிய சரியான காலத்தில் குறித்தளவு உயர்தரக் கல்வியைப் பெறும் திறமைகொண்டவர் என்று இன்று நாம் நம்புகிறோம்; தற்பூரணத்துவம் பெறவும் தான் விரும்பும் எந்தப் புதிய தொழில் வினையைத் தேடவும், தேவையான கல்வியைத் தனக்கேற்ற சுய வேகத்திற் பெற்றுக் கொள்வதற்கு, அந்த ஒருவருக்கு மறுக்க முடியாத உரிமை உண்டு.

இத்தகைய ''வாழ்நாள் முழுமைக் கல்வி'', முதற் பள்ளிப் படிப்புத் தொடங்க முந்திய, முற் பள்ளிக் காலத்திலேயே சகலருக்கும் ஆரம்பிக்க வேண்டும். சிறந்த வசதிகள் கொண்ட முற்பள்ளிகள், பால்ய வயதிலேயே படிப்பறிவு தருவதுடன் அநேக, குழந்தைகளின் வீட்டுச் சூழலில் நிலவும் ஒழுக்க வறுமையையும் பண்பாட்டு வறுமையையும் ஈடு செய்கின்றன. சிலர் விஷயத்தில், உடம்பின் வளர்ச்சியை மட்டுமன்றி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூளையின் விருத்தியையும் பாதிக்கும் போஷாக்குப் பற்றுக்குறையையும் இவை தீர்த்து வைக்கின்றன.

'வாழ்நாள் முழுமைக் கல்வி'க்கான வசதிகள் இருக்குமிடத்து, பாடசாலை அகல்வுப் பரீட்சைகள், அநேகமாக அர்த்தமற்றுப்போய்விடுமென்பதைச் சொல்ல வேண்டியதில்லை; குறிப்பிட்ட ஒரு பரீட்சையில் ஏற்படும் தோல்வி, ஒருவரின் தொழிற் பணிக்கு முற்றுப் புள்ளியாக அமைந்து விடவும் மாட்டாது.

## IV

ஐக்கிய நாடுகளின் கல்வி விஞ்ஞான கலாசார நிறுவன அறிக்கை, 'வாழ்நாள் முழுவதும் கல்வி' என்னும் இந்த மகத்தான கோட்பாட்டை மட்டுமன்றி, அதே யளவு வன்மை வாய்ந்த 'கற்கும் சமூகம்' என்னும் கோட்பாட்டையும் பரிந்துரைக்கிறது. பாடசாலை, கல்வி பெறும் நிலையத் தொகுதிகளில் ஒன்றுக அமைந்து, 'கற்கும் சமூகத்தின்' அங்கமாக விளங்கும் "வாழ்க்கைக்காக, வாழ்க்கையின் மூலம், வாழ்க்கை முழுவதும் கற்றல்" என்னும் காந்திய அடிப்படைக் கல்வித் திட்டத்தை ஓரளவில் ஒத்தது இது.

கற்றல் என்பது ஒரு மனிதனின் வாழ்நாள் முழுவதுடனும் சம்பந்தப்பட்டால், கால அளவையும், பன்முகப் பாட்டையும் பொறுத்தும், சமூக, பொருளாதார நிறுவனங்களைக் கல்விக்கான மூலாதாரங்களாகக் கொண்டும், நாம் ஒரு "கற்கும் சமூக" நிலையை அடைந்து விடுகிறோம். இவ்வகையில் குடும்பம், பண்ணை, தொழிற்சாலை, குடியியற் சேவைத் தலங்கள், ஸ்தல ஸ்தாபனங்கள், கூட்டுறவுச் சங்கங்கள், தொழிற் சங்கங்கள், வெகுஜன பிரசார சாதனங்கள், பொது நூல் நிலையம், நூதனசாலை அனைத்தும் சக்தி வாய்ந்த கல்விச் சாதனங்களாக உபயோகிக்கப்படலாம். பிரதேச பல்கலைக்கழகங்கள், அநேகமாக ஒவ்வொருவர் வீட்டு வாயிலிலும் அமைந்து, முழுநேரப் பயிற்சிகளையும், முதியோர் கல்வித் திட்டங்களையும் வழங்கி. எவ்வளவோ பேர், குறிப்பாக ஆசிரியர்கள், வாழ்நாள் முழுவதும் தொடர்ந்து கற்றுவருவதற்குத் துணை புரிய முடியும்.

## V

இவையனைத்தின் மூலமும் ஒன்று தெளிவாகிறது. ஒரு புதிய சமூகத்தை, தன் அமைப்பிலேயே ஒரு கற்கும் சமூகமாக இயங்கும் சமூகத்தை, நாம் உருவாக்க விழைகிறோம் என்பதே அது. இந்தப் புரட்சிகரமான பணியையே, நாம், பாடசாலைகளும் மற்றும் கல்வி நிலையங்களும் நிறைவேற்றச் செய்ய வேண்டும்.

கல்வியை ஜனநாயகப்படுத்தல் என்றால், பொதுமக்கள், பெற்றோர், கல்விப் போதகர், மாணவர்கள் ஆகிய அனைவரும் கல்வியைச் சார்ந்த தீர்மானங்களிற் பங்கு கொள்ள வேண்டுமென்பதும் கருத்து.

எனினும், எதைக் கூறியபோதிலும், உண்மைக் கல்வி என்பது தன்னைத்தான் கற்றுக் கொள்தல். அதுவே வாழ்வாங்கு வாழ்தல்!

---

ஆங்கிலத்தில் எழுதப்பட்ட இக் கட்டுரையைத் தமிழாக்கி உதவிய திரு சில்லையூர் செல்வராஜனுக்கு நன்றி.

பாடசாலை, குழந்தையின் முழுவளர்ச்சிக்கும் பொறுப்பாயினும், வீட்டுச் சூழல் ஒரு மாணவனின் கற்றலிலும் செயல் முறையிலும் பெரும் பங்கு வகிக்கின்றது. இவ்வடிப்படை உண்மையை எல்லாப் பெற்றோரும் உணர்ந்து கொண்டால், கல்வி முன்னேற்றத்துக்கு வேண்டிய சூழலை ஏற்படுத்தியவர்களாவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிதை ஒன்று வேண்டும்

கவிதை ஒன்று வேண்டும்—நல்ல
கவிதை ஒன்று வேண்டும்
சுவையாய் நல்ல சொல்லாய்—இருந்த
கவிதை பார்த்து வந்தேன்
அமைவாய் நல்ல அழகாய் இருந்த
கவிதை கண்டு வந்தேன் எனினும்
கவிதை ஒன்று வேண்டும்—நல்ல
கவிதை ஒன்று வேண்டும்

மானைப் பெண்ணை நிலவை மலையை
மாறி மாறிப் பாடி
வானை நீலக்கடலை நல்ல
வார்த்தை கொண்டடுக்கி
மோனைத் தொடரில் பாடி வைத்த
கவிதை கோடி கண்டேன் எனினும்
கவிதை ஒன்று வேண்டும்—நல்ல
கவிதை ஒன்று வேண்டும்

நாளும் பகலும் உழைத்துத் தினமும்
நாதியற்று வாழும்
ஏழை மூச்சு இரையும் கவிதை
எத்தனையோ வேண்டும்
நாளை ஏழை பொங்கி எழுந்து
நல்ல உலகம் காணத்
தானே நடத்தும் வகையிற் கவிதை
தக்க தாக வேண்டும்

புத்தம் புதிய உலகைக் காணப்
பூக்க வேண்டும் கவிதை
மெத்த வார்த்தை ஜாலம் நீங்கி
மினுங்க வேண்டும் கவிதை
சத்தாய்க் கருத்து இறுகித் திரண்டு
சன்னதங் கொண்டு இயலும்
கவிதை ஒன்று வேண்டும்—நல்ல
கவிதை ஒன்று வேண்டும்

சி. மௌனகுரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எங்கள் குடும்பம்



முன்வரிசை : திரு. கி. யோசேப், திரு. அ. ஞெ. ஹயசிந்த், சங். சகோ. மரிய கிளாரு, திருமதி ம. கணபதிப்பிள்ளை (சிரேஷ்ட உதவி ஆசிரியர்), திரு. ஞெ. யோசேப்பு (அதிபர்) திருமதி சா. மேரி திரேசா, சங்: சகோ. மேரி மற்றில்டா, திருமதி அ. நாகலிங்கம், திரு. சி. தார்சிசியஸ், திரு. என்: கே. ரகுநாதன்.

பின்வரிசை : திருமதி இ. பாலேந்திரா, திருமதி அ. அருமைநாயகம், திருமதி நே. செந்திநாதன், செல்வி ஞே. தர்மலிங்கம், திருமதி மே. யோ. பேரின்பரெட்ணம், திருமதி மே. யோ. ஆசிர்வாதம், திருமதி க. துரைசிங்கம், திருமதி மே. மா. நிக்கலாப்பிள்ளை, திருமதி ம. மா. ஆசிர்வாதம், திருமதி ஞே. இராசேந்திரம், திருமதி டோரு பிலிப், திருமதி அ. வி. பிரான்சிஸ்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையின் புதிய கல்வித் திட்டம்

செ. வேலாயுதபிள்ளை
தலைவர், தமிழ்மொழிக்குழு, பாடவிதான அபிவிருத்தி நிலையம்

கல்வியின் நோக்கம் என்ன என்பது பற்றி அன்று முதல் இன்றுவரையும் அறிஞர்கள் பற்பல கருத்துக்களைத் தெரிவித்துள்ளனர். நமது மொழியிலே, கல்வியின் நோக்கம் கடவுளை உணர்ந்து, தெளிந்து, வழிபடுதல் என்ற கருத்தைத் திருவள்ளுவர் அன்று வெளியிட்டார்:

''கற்றதனு லாய பயனென்கொல் வாலறிவன்
நற்றாள் தொழாஅ ரெனின்''

மேற்கு நாட்டிலே, சோக்கிரதீசர் என்ற அறிஞர் (கி. மு. 469—399) கல்வியின் நோக்கம் பிழையை அகற்றி, உண்மையைக் கண்டுபிடிப்பதே என்று கூறினார். அண்மைக் காலத்திலே. தோண்டயிக், கேட்ஸ் என்னும் அறிஞர்கள் கல்வியின் நோக்கம் பற்றிப் பின்வருமாறு கருத்துத் தெரிவித்துள்ளனர்: மக்கள் ஒவ்வொருவரும் அவரவர் ஆசைகளை முற்றாக நிறைவேற்றுவதன் பொருட்டு, அனைவருடைய தேவைகளையும் பூர்த்தி செய்வதே கல்வியின் நோக்கமாகும்.''

இலட்சியவாதிகள் முதல் காரியவாதிகள் ஈறாக எத்தனையோ அறிஞர்கள் வெவ்வேறான பல கருத்துக்களைத் தெரிவித்துள்ளனராயினும், ஓர் அடிப்படை உண்மையை நாம் மறந்துவிடலாகாது. அந்த உண்மையைப் 'பசிவந்திடப் பத்தும் பறந்துபோம்' என்ற தமிழ்ப் பழமொழி தெளிவாக உணர்த்துகின்றது. பழமொழியிற் சொன்ன பத்தும் எவை என்பதை ஔவையார் பாடி வைத்துள்ளார்:

மானங் குலங் கல்வி வண்மை
யறிவுடைமை
தானந் தவமுயற்சி தாளாண்மை - தேனின்
கசிவந்த சொல்லியர்மேற் காமுறுதல்
பத்தும்
பசிவந் திடப்பறந்து போம்.''

இலட்சியவாதிகள் எடுத்துக்கூறும் இலட்சியங்கள் எல்லாம் பசிக்குச் சோறு போடமாட்டா. பசித்த வயிறோடுள்ள ஒருவனுக்கு இந்த இலட்சியங்களைச் சொல்லுவதிற் பயனில்லை. பசி தீர்ந்தபின்பே இலட்சியங்களைப்பற்றி அவன் எண்ணுவான். இஃதொரு மறுக்க முடியாத உண்மையாகும். இந்த உண்மையை உட்கொண்டே புதிய கல்வித்திட்டம் புரட்சிகரமான சில மாற்றங்களை நமது சிறுவர்களின் கல்வியிலே புகுத்தியுள்ளது.

நமது நாடு அபிவிருத்தியடையும் நாடுகளில் ஒன்றாகும். அபிவிருத்தியடைந்த நாடுகளுக்குள்ள பிரச்சினைகளும், அபிவிருத்தியடையும் நாடுகளுக்குள்ள பிரச்சினைகளும் வேறானவை. ஆதலால், அபிவிருத்தியடைந்த நாடுகளின் கல்வி முறையை அப்படியே நமது நாட்டிற் பின்பற்றுவது பொருந்தாது. அபிவிருத்தியடையும் நாடுகளிற் பற்பல இன்னல்களும் இடர்ப்பாடுகளும் இடைஞ்சல்களும் இருக்கும்; எத்தனையோ குறைபாடுகள் காணப்படும்; இவற்றையெல்லாம் தீர்த்து, முன்னேற்றப் பாதையில் அடியெடுத்து வைத்து, முன்னேற்றமடைந்த நாடுகளோடு போட்டியிடுவதென்றால், அஃது இலகுவில் முடிவதன்று. ஆனால், இன்றைய உலகில் இலங்கையராகிய நாம் அவ்வாறு போட்டியிட வேண்டிய நிலையிலே உள்ளோம். போட்டியிடாவிட்டால் எமக்கு வாழ்வில்லை. போட்டியிடுவதென்றால், அயராத முயற்சி

UNIVERSITY OF JAFFNA LIBRARY SRI LANKA

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யும், இன்னல்களை எதிரேற்கும் மனவுறுதியும் வேண்டும். இன்றைய உலகிலே நமது நிலையைத் தெளிவாக உணர்ந்து, எதிர்கால வாழ்வுக்கான திட்டத்தை எண்ணித் துணிந்து செயற்படுத்தவும் வேண்டும். இவற்றுக்கெல்லாம் ஈடுகொடுக்கத் தக்கதாகவே புதிய கல்வித் திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. இந்த இடத்திலே, இதுகாறும் நிலவி வந்த பழைய கல்வி முறை பற்றியும் சிறிது சிந்தித்தல் தக்கது.

பழைய கல்வி முறை, வெறும் நூற் கல்விக்கே பெரும்பாலும் முதன்மை கொடுத்தது. அந்தக் கல்வி நாட்டு மக்களின் வாழ்க்கையோடு ஒன்றிணையவில்லை. அந்தக் கல்வியைக் கற்றவர், உடைநலங்கா உத்தியோகங்களையே நாடினர்; தாம் மற்றவர்களைக் காட்டிலும் ஒருபடி மேலானவர் என்ற ஒரு தவறான எண்ணத்தை உருவாக்கிக்கொண்டு, நாட்டின் முதுகெலும்பாகவுள்ள பாட்டாளி மக்களினின்றும் விலகி, தந்தக் கோபுரங்களில் உறைபவராகக் கற்பனை பண்ணிக் கொண்டனர். ஆனால், அந்தக் கல்வியும் அநேகருக்கு ஏட்டுச் சுரைக்காயாகவே அமைந்து விட்டது. எல்லாரும் உடைநலங்கா உத்தியோகத்தை நாடினமையால், அந்தத் துறை நிரம்பிவிட, எத்தனையோபேர் வேறு தொழில் செய்ய வகையறியாது விழிக்கலாயினர்; கல்வி கற்றவரிடையே வேலையில்லாத் திண்டாட்டம் நாளுக்கு நாட் பெருகி, நாட்டிற்கே பெரும் பளுவாகி விட்டது.

இத்தனைக்கும் அபிவிருத்தியடைய வேண்டிய கைத்தொழில், விவசாயம், வர்த்தகம், தொழினுட்பம் முதலிய பல துறைகள் அபிவிருத்தி இன்றியே இருந்தன. அத்துறைகளை அபிவிருத்தி செய்வதற்கு வேண்டிய திறமையுள்ள ஆளணியை நமது பழைய கல்வி முறை உருவாக்கத் தவறி விட்டது. ஒருபால், கல்வி கற்ற இளைஞர் தொகை பெருகி வந்ததாயினும், மறுபால் செய்யவேண்டிய வேலைகள் எத்தனையோ இருந்தும், அவற்றைச் செய்யத்தக்க ஆளணி இல்லாமையால் நாட்டின் சமச்சீரான அபிவிருத்தி குன்றிவிட்டது. இதன் விளைவாக, நமது பொருளாதாரமும் பாதிக்கப்பட்டது. பற்பல பிரச்சினைகள் ஒன்றோடொன்று தொடர்புள்ள சங்கிலித் தொடராகத் தோன்றி, ஓயாத தொல்லை தொடர்ந்தவண்ணம் இருந்தன. இந்தக் களைத் தந்தவண்ணம் இருந்தன. இந்தக் கட்டத்திலேயே, இப்பிரச்சினைகள் பலவற்றுக்கும் தீர்வுகாணும் நோக்கோடும், அபிவிருத்தியடையும் நமது நாட்டின் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையிலும் புதிய கல்வித் திட்டம் புகுத்தப்பட்டது.

புதிய கல்வித் திட்டம் 1972 ஆம் ஆண்டில் முதன் முதலாக ஆறாந்தரத்திற் புகுத்தப்பட்டது. இவ்வாண்டு ஏழாந் தரத்திற்கும், அடுத்த ஆண்டுகளில் முறையே எட்டாம் ஒன்பதாந் தரங்களுக்கும் இத்திட்டம் தொடர்ந்து செயற்படுத்தப்படும். பெரிய பாடசாலை சிறிய பாடசாலை என்ற பேதம் இல்லாமலும், நகரப் பாடசாலை நாட்டுப்புறப் பாடசாலை என்ற வேறுபாடு காட்டாமலும், இலங்கையின் எல்லாப் பகுதிகளிலும், எல்லாப் பாடசாலைகளிலும் எல்லா மாணுக்கருக்கும் ஒரு சீரான கல்வியளிப்பதே இத்திட்டத்தின் தனிச் சிறப்பாகும். இக்கல்வி வெறும் புத்தகப்படிப்பாக மட்டும் அமையாமல், சூழலோடு ஒன்றிணைந்த ஒரு தொழிற்பாடமாக அமையும். கற்கும் மாணுக்கர் தமது வாழ்க்கைக்குப் பயன்படாத வெறும் அறிவை மூளையிலே திணித்து வைக்காமல், தமது மூளையையும் கைகளையும் இயைவுபடுத்தி, வாழ்க்கைக்கு வேண்டிய பயனுள்ள ஒரு தொழிலைச் செய்து, பிற்காலத்திற் பயனுள்ள நற்குடிகளாக வாழ்வதற்கும் பயிற்சி பெறுவர்.

சிரேட்ட உயர்நிலையிலே, அதாவது ஆறாந்தரம்முதல் ஒன்பதாந்தரம் வரையில், எல்லா மாணுக்கரும் பத்துப் பாடங்களைக் கட்டாயமாகக் கற்பர். தாய்மொழி, இரண்டாம் மொழி, சமயம், கணிதம், விஞ்ஞானம், சமூகக் கல்வி, உடலியற் கல்வி, அழகியற்கல்வி, தொழில் முன்னிலைப் பாடங்கள் இரண்டு என்பவையே அப்பத்துமாகும். விஞ்ஞானம், கணிதம், சமூகக் கல்வி என்பன முன்பு போலத் தனித் தனியே வெவ்வேறு துறைகளாகப் பிரியாமல், பலதுறைகளையும் அகப்படுத்திய ஒன்றிணைந்த பாடங்களாகக் கற்பிக்கப்படும். இவையும் தொழில் முன்னிலைப் பாடமொன்றுக்கு ஊட்டமளிப்பனவாய் அமை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யும். இவ்வாற்றால், இப்புதிய கல்வி தொழில் நோக்கிய கல்வியாகத் தோன்றும். அதாவது, இப்புதிய திட்டப்படி கல்வி கற்கும் மாணாக்கர் ஒவ்வொருவரும் தமது சூழலுக்கும் உளச்சார்புக்கும் உவந்த ஒரு தொழிலை மேற்கொண்டு, பிற்காலத்தில் அதனைத் திறம்படச் செய்து தமக்கும் நாட்டுக்கும் பயன்பட வாழ்வதற்குப் பயிற்சி பெறுவர் என்பதாம். இம்மாணாக்கர் கல்வி கற்கும்போதே, தமது சூழலில் வாழும் மக்களின் வாழ்க்கைத் தொழில்களில் அக்கறை கொள்வதற்கும், சூழலில் உள்ள வளவாய்ப்புக்களை அறிந்து, அவற்றை உபயோகமான தொழின் முறையிலே பயன்படுத்துவதற்கும், சூழலோடு இயைபுபட்டு வாழ்வதற்கும் பழகிக் கொள்வர். செய்யுந் தொழிலை மதிப்பதற்கும் செய்வன திருந்தச் செய்வதற்கும் வேண்டிய மனப்பான்மையையும் வினைத்திறமையையும் இப்புதிய கல்வித் திட்டம் மாணாக்கரிடம் உண்டாக்க வல்லதாகும்.

இக் கட்டத்திலே கலையென்றும் விஞ்ஞானம் என்றும் இப்போது வழக்கிலிருக்கும் பிரிவின் எதிர்காலம் என்னவாகும் என்ற ஐயம் எழக்கூடும். ஆரம்பக் கல்வியிலும் சிரேட்ட உயர்நிலைக் கல்வியிலும் அறிவுத் துறையைக் கலை என்றும் விஞ்ஞானம் என்றும் பாகுபடுத்திக் கற்பிப்பது நன்மை பயவாது. கலையும் விஞ்ஞானமும் ஒரு நாணயக்காசின் இரு முகங்களும் போன்றவை. இரண்டும் இன்றியமையாதவை; இரண்டும் சேர்ந்ததே முழுமையாகும். மாணாக்கருடைய உள வளர்ச்சிக்கும் அறிவு வளர்ச்சிக்கும் கலை விஞ்ஞானம் என்னும் இரு துறைகளும் கட்டாயமாக வேண்டும். இனி இக்கால வாழ்க்கையில், விஞ்ஞானம் ஒவ்வொரு கூற்றிலும் பிரிக்க முடியாதவாறு பின்னிப் பிணைந்திருக்கின்றது. இவற்றையெல்லாம் எண்ணிப் பார்க்குமிடத்து, விஞ்ஞான உணர்வும், விஞ்ஞான மனப்பான்மையும் இளமை தொட்டே மாணாக்கர் ஒவ்வொருவரிடமும் விருத்தியாக்கப்படுதல் வேண்டும் என்பது தெற்றெனப் புலனாகும். இது பற்றியே, புதிய கல்வித்திட்டத்தில் எல்லா மாணாக்கரும் கலையையும் விஞ்ஞானத்தையும் கற்பதற்கு வழி செய்யப்பட்டுள்ளது. சிரேட்ட உயர்நிலைவரையிலாயினும் எல்லாரும் விஞ்ஞானத்தை—அதாவது பௌதிகம், இரசாயனம், உயிரியல், தாவரவியல் என்னும் துறைகளை உள்ளடக்கிய ஒன்றிணைந்த விஞ்ஞானத்தை — ஒரு பாடமாகக் கற்பது கட்டாயமாகும்.

உயர் நிலையிலே, அதாவது பல்கலைக் கழகக் கல்வி நிலையிலே, அவ்வத் துறைகளிற் சிறப்புப் பயிற்சி பெறுதற்காகக் கலைப் பாடங்களும் விஞ்ஞானப் பாடங்களும் தனித்தனியேகற்பிக்கப்படலாம். இன்றைய அறிவுத்துறையின் வளர்ச்சி, அத்துணை ஆழ்ந்து அகன்று நுண்ணிதாய்ச் செல்வதனால், உயர் நிலையிலே பாகுபடுத்திக் கற்க வேண்டியது அத்தியாவசியமாகின்றது. ஆனால், அடிப்படையில் இந்தப் பாகுபாடு இருத்தலாகாது. இதனாலேயே புதிய பாடத் திட்டத்தில் ஒன்றிணைந்த பாட விதானம் ஒரு சிறப்பு அம்சமாக அமைந்துள்ளது. புதிய கணிதம், கணிதத் துறையின் பல பிரிவுகளை ஒன்றிணைத்தும், இவ்வாறே விஞ்ஞானம், சமூகக் கல்வி என்னும் ஏனைய இரு பாடங்களும் அவ்வத்துறையிற் பல பிரிவுகளை ஒன்றிணைத்தும் கற்பிக்கப்படுவதன் நோக்கம் இதுவே. இப்போது ஆறும் வகுப்பு முதலாகக் கற்பிக்கப்படும் பத்துப் பாடங்களுமே ஒன்றுக்கொன்று ஆதாரமாய், ஒன்றிணைந்து அமைவதே இலட்சிய நிலையாகும். அத்தகைய இலட்சியத்தை எதிர்காலத்தில் எய்தக் கூடிய வகையில் ஆசிரியர்கள் இப்பாடங்களை மாணாக்கருக்குக் கற்பிப்பது வேண்டற்பாலது. பாட விதான அபிவிருத்தி நிலையம் இத்துறையில் ஆராய்ச்சி செய்து வருவது இங்கே குறிப்பிடத்தக்கது.

முடிவாக, இப்புதிய கல்வித் திட்டத்தின் முக்கியமான குறிக்கோளையும் இங்கே குறிப்பிடுவாம். இலங்கை நமது நாடு. இந்த நாட்டிலே சிங்களம், தமிழ், என்னும் இரண்டு முக்கிய மொழிகளைப் பேசும் மக்கள் வாழ்கின்றனர்; இவர்கள் பௌத்த மதம், இந்து மதம், கிறிஸ்தவ மதம், இஸ்லாம் மதம் என்னும் நான்கு முக்கிய மதங்களைப் பின்பற்றுகின்றனர். இவ்வாறு மொழி அடிப்படையிலும் சமய அடிப்படையிலும் பர்குபாடுகள் இருப்பினும், இலங்கை அன்னையின் மக்கள் என்ற முறையில் இந்நாட்டுக் குடிமக்கள் எல்லோரும் உடன் பிறந்தார் போல ஒருமித்து வாழ்தல் இன்றியமையாதது. இப்படி ஒருமித்து ஒன்றிணைந்து வாழவேண்டிய மக்களுக்குள்ளே பிறப்புப்பற்றி உயர்ந்த சாதியார் என்றும் தாழ்ந்த சாதியார் என்றும் வேறுபாடு கற்பிப்பதும், முதலாளிகள் என்றும் தொழிலாளிகள் என்றும் வர்க்க பேதம் இருப்பதும் முன்னேற்றத்துக்கு முட்டுக்கட்டைகளாம். நெடுங்காலமாக நிலைத்து விட்ட இச் சமூகப் பாகுபாடுகளை ஒழித்து, 'எல்லாரும் ஓர் நிறை, எல்லாரும் ஓர் விலை, எல்லாரும் இந்நாட்டு மன்னர்கள்' என்று எண்ணும் சமதர்ம சமுதாயத்தை உருவாக்குவதே புதிய கல்வித் திட்டத்தின் குறிக்கோளாகும். இஃது உடனடியாக அடையக்கூடிய இலட்சிய மன்று. ஆயினும் இப்போது புகுத்தப்பட்டிருக்கும் புதிய கல்வித் திட்டம் அந்த இலட்சியத்தைக் காலப்போக்கில் அடைவதற்கான மனப் பக்குவத்தை இளம் சந்ததியினரிடம் உண்டாக்கும் என்று நம்பலாம். ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்னும் பன்னூற்றாண்டு இனிது வாழ்க!

அன்னை புனிதமரி அம்மை கலைக்கூடம்
இன்னும்பன் னூற்றாண் டினிதாக—மன்னுமெழில்
வாழி உயர் ஆசிரியர் மாணக்கர் பெற்றோர்கள்
வாழி தமிழ் மொழியால் வாழ்ந்து.

வாழ்ந்து வளர்ந்தோங்க மற்றெவரும் வாழவழி
சூழ்ந்த தொழின்முன் னிலைப்பயிற்சி—ஆழ்ந்தகல்வி
வாழ்க வருங்கால மக்கள் வளம்பெருக
வாழ்க அடைக்கலமா தா.

மாதா அடைக்கலமா மேரி கலைக்கூடம்
வேதாவின் ஆக்க விளைநிலமாய்த்—தோதாக
ஏற்றத்தாழ் வேயற்ற இவ்வரசு தந்தகல்வி
போற்றத் தகுமே புகழ்ந்து.

புகழ்ந்துன்னைப் போற்றிப் புனிதமரித் தாயின்
திகழ்ந்த திருப்பெயரைத் தேடி—மகிழ்ந்தோடி
வந்தமக்கள் வாழ்க அவர் வாழ்வதற்குத் தக்ககல்வி
தந்தவரும் வாழ்க தழைத்து.

தழைத்துநிழல் தந்தொருநூற் றாண்டு தழைத் தாயே
அழைத்தாய் அடைக்கலந் தந்தாயே—உழைத்துழைத்து
வாடுகின்ற மக்களது மக்களுக்கு வாழ்வளித்தாய்
சூடுமணித் தாயே தொடர்ந்து.

அ. சி. நல்லையா
கல்வி அதிகாரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய கல்வித்திட்டமும் ஆசிரியர்களும்

திருமதி இ. ஆனந்தக்குமாரசாமி
அதிபர், அரசினர் பெண்கள் ஆசிரியர் கலாசாலை, கோப்பாய்

**பல** ஆண்டுகளாக நாம் மாணவர்களுக்கு ஒரேவிதமான கல்வியையே ஊட்டி வந்திருக்கின்றோம். காலத்துக்குக் காலம் ஒரு சில மாற்றங்கள் புகுத்தப்பட்டபோதிலும், அம்மாற்றங்கள் இலங்கைக் கல்விக் கொள்கையில் எவ்விதமான அடிப்படை மாற்றத்தையும் ஏற்படுத்திவிடவில்லை எனலாம். சென்ற ஆண்டிலிருந்து நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டிருக்கும் புதிய கல்வியமைப்பே, கல்வித்துறையில் எழுந்த பல்வேறு பிரச்சினைகளுக்கும் தீர்வுகாண்பதாயமைந்துள்ளது. இப் புதிய கல்வியமைப்பில் ஆசிரியர்களாகிய எமக்குள்ள பங்கு என்னவென்பதை நாம் அறிந்து கொள்ள வேண்டியது அவசியமாகும்.

ஆங்கிலேயர் ஆட்சி இலங்கையில் நிலை நாட்டப்பட்ட காலத்தில் அரசியற் சேவைகளைச் செவ்வனே நடாத்துவதற்கு எழுதுவினைஞர்கள் பலர் தேவைப்பட்டனர். அதனால் எழுதுவினைஞர்களை உருவாக்குவதற்கேற்ற கல்வித்திட்டத்தினை அவர்கள் வகுத்தனர். நூற்றைம்பது ஆண்டுகளாக அக்கல்வித்திட்டமே நடைமுறையிலிருந்து வந்தது. சுதந்திரமடைந்து இருபத்தைந் தாண்டு காலமாகியும் குறிப்பிடத்தக்க மாற்றமெதுவும் கல்வித்துறையில் ஏற்படவில்லை. ஆண்டுதோறும் மூன்று இலட்சத்துக்கும் அதிகமானோர் க. பொ. த. (சாதாரண) தேர்வுக்குத் தோற்றுகின்றனர். க. பொ. த. சாதாரண தரத்தில் சித்தியடைந்த இலட்சம்பேர் இன்று வேலையின்றித் திண்டாடுகின்றனர். அவர்கள் எவ்வித தொழிற்கல்வியும் பயின்றிராமையால் அரசாங்க உத்தியோகத்தைத் தவிர வேறு துறைகளில் ஈடுபடமுடியாதவர்களாகப் பரிதவிக்கின்றனர். பல்லாயிரக் கணக்கான பட்டதாரிகளும் வேலையின்றிப் பல ஆண்டுகளாகத் திண்டாடுகின்றார்கள். இவர்களுக்கு வேலைவாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்கமுடியாது அரசாங்கமும் திண்டாடுகின்றது. இந்நிலை ஏற்பட்டமைக்குக் காரணம் நடைமுறையிலிருந்து வந்த கல்வியமைப்பே எனலாம்.

இதுவரை காலமும் எட்டாம் வகுப்புவரை மாணவர்கள் ஒரேவித கல்வியைப் பெற்றனர். அதன்பின்னர் கலை, விஞ்ஞானம், வர்த்தகம் என்று ஏதாவது ஒரு பிரிவிற் சேர்ந்து கல்வி பயின்று க. பொ. த தேர்வுக்குத் தோற்றினர். இதனால் கலைப் பிரிவு மாணவன் விஞ்ஞான விஷயங்களையறியாதவனாகவும், விஞ்ஞான மாணவன் இலக்கியம், புவியியல், வரலாறு, அரசியல் போன்ற விஷயங்களை அறியாதவனாகவும், வர்த்தகமாணவன் இவ்விரு பிரிவுப் பாடவிஷயங்களையும் அறியாதவனாகவும் இருக்க வேண்டியேற்பட்டது. இவ்வாறு எட்டாம் வகுப்பில் மாணவர்களைத் தரம்பிரிக்கும் திட்டம் புதிய கல்வியமைப்பில் கைவிடப்படுகின்றது. மாணவர்களெல்லோருக்கும் ஒரேவித கல்வி ஏற்பாடே ஏற்படுத்தப்பட்டுள்ளது. இதனால் பலதுறையறிவும் நிரம்பியவனாக எதிர்கால மாணவன் விளங்குவான் என்பதற்கையமின்று.

க. பொ. த. வகுப்பில் இரு ஆண்டுகள் கழித்த நிலையும் மாறி ஓராண்டிலேயே தேர்வுக்குத் தோற்றவேண்டும் என்ற ஏற்பாடும் புதிய கல்வித்திட்டத்திற் காணப்படும் சிறந்த அம்சங்களுள் ஒன்றாகும். ஒன்பதாம் வகுப்பில் 'தேசிய தராதரப்பத்திரம்' மாணவர்களுக்கு வழங்கப்படும். இன்றுள்ளது போன்று அப்பத்திரத்தை வைத்துக்கொண்டு வேலைவாய்ப்பை மாணவர் பெற முடியாது. அதன் பின்னரும் ஈராண்டு காலம் கல்வி பயின்ற பின்னரே அவர்கள் உயர் கல்வி கற்கப் பல்கலைக் கழகங்களுக்கோ, தொழில் நுட்பக் கல்லூ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரிகளுக்கோ, ஆசிரிய பயிற்சிக்கலாசாலைகளுக்கோ பிரவேசிக்கலாம். அல்லது எழுதுவினைஞர் போன்ற துறைகளில் ஈடுபடலாம்.

இப்புதிய கல்வித் திட்டம் தொழிற் கல்விக்கு முக்கிய இடமளிக்கின்றது. தொழில் முன்னிலைப் பாடநெறி மூலம் மாணவர்பலதொழிற்றுறைகளையும் அறிந்துகொள்ளும் வாய்ப்பைப் பாடசாலைகளிற் கல்வி கற்கும்போதே பெறுகின்றனர். அதனால் தம்முடைய ஆற்றல்களுக்கும், உளப்போக்குக்கும் பொருத்தமான தொழிலை எதிர்காலத்தில் மாணவர் மேற்கொள்ளச் சந்தர்ப்பம் அளிக்கப்படுகிறது. பாடசாலையைவிட்டு வெளியேறியபின் தன்னம்பிக்கையுடன் வாழ்க்கைக்கேற்ற ஒரு தொழிலை மேற்கொள்ளவும், வாழ்வில் வெற்றியடையவும் இம் முறை வழிவகுக்கின்றது. வலிந்து வேலை வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டிய நெருக்கடியும் அரசாங்கத்துக்கு ஏற்படாதுபோகின்றது. ஒருபாடசாலையில் ஒன்றாகக் கல்வி கற்றோர் பல்வேறு தொழில்களில் ஈடுபடும்போது தொழில்களுக்கிடையில் உயர்வு தாழ்வு கற்பிக்கும் மனப்பான்மை தானாகவே நீங்கிவிடும். தொழில் மகத்துவம் பற்றிய உணர்வும் யாவருக்கும் ஏற்படும்.

பாட ஒன்றிணைப்பும் இப்புதிய கல்விக் கொள்கையிற் காணப்படும் சிறப்பம்சங்களுள் முக்கியமானதொன்றாகும். ஐக்கியப் படுத்தப்பட்ட இப்பாட ஏற்பாட்டில் இரசாயனம், பௌதிகம், தாவரவியல், விலங்கியல் என்பன போன்ற பாடப் பிரிவுகள் இடம்பெறா. விஞ்ஞானம் என்ற ஒரு பாடமாகவே இவை போதிக்கப்படும். அவ்வாறே புவியியல். அரசியல், பொருளியல், மானுடவியல், வரலாறு போன்ற பாடங்கள் யாவும் சமூகக் கல்வி என்ற ஒரு பாடமாக ஒன்றி இணைந்து விடும் இவ்வாறே மொழி, கணிதம் முதலிய பாடங்களும் பிற பாடங்களுடன் தொடர்புறுத்திக் கற்பிக்கப்படும். இவ்வாறு பாடங்களை ஒருங்கிணைத்து மாணவர்களுக்குப் போதிக்கும் முறை மிகச் சிறந்ததோர் கல்விக் கோட்பாடு என்று கல்வி நிபுணர்கள் பலரும் பாராட்டுகின்றனர்.


எல்லோருக்கும் சமமான கல்வியளிக்கும் இப்புதிய கல்வித்திட்டம், பல பிரச்சினைகளுக்கும் தீர்வு காண்பதற்கேற்ற சிறந்த பல அம்சங்களைத் தன்னகத்தே கொண்டுள்ளதெனினும் ஒரு சில குறைபாடுகளும் உடையதெனச் சிலர் சுட்டிக் காட்டுகின்றனர். பல துறைகளையும் ஒருங்கே கற்க வேண்டியிருப்பதால் ஒரு துறையிலேனும் பூரண அறிவைப் பெற வாய்ப்பு ஏற்படமாட்டாதென்பது அவர்கள் சுட்டிக்காட்டும் முக்கிய குறைபாடாகும். நன்மைகளின் அளவோடு ஒப்பு நோக்கும்போது இக் குறைபாடுகள் மிக அற்பமானவை என்றே கூறலாம்.

பல அறிஞர்கள் சேர்ந்து தயாரித்த இத்திட்டம் வெற்றிபெறுவது ஆசிரியர்களது கையிலேயே தங்கியிருக்கின்றது. தாம் கற்றுவந்த முறைக்கும், கற்பித்து வந்தமுறைக்கும் முரணானதாகப் புதிய முறையில் பாடங்களைத் தொடர்புறுத்திக் கற்பிப்பது இன்றுள்ள ஆசிரியர்களுக்கு ஒரு சுமையாகவும் தோன்றலாம். பலர் எதைப் படிப்பிப்பது, எப்படிப் படிப்பிப்பது என்று தெரியாமல் மலைக்கவும் நேரிடலாம். கலை பயின்ற ஆசிரியர் விஞ்ஞான பாடங்களையும், விஞ்ஞானம் பயின்ற ஆசிரியர் கலைப்பாடங்களையும் ஒருங்கிணைத்துக் கற்பிக்க முடியாது திகைக்கலாம். அவ்வாறே வர்த்தக ஆசிரியரும் திண்டாடலாம். ஆரம்பத்தில் இக்கஷ்டங்கள் எதிர்பார்க்கப் படுவனவும் தவிர்க்க முடியாதனவுமாகும்.

ஆசிரியப் பணியின் மகத்துவத்தையும், புதிய கல்வித்திட்டத்தின் சிறப்பம்சங்களையும் உணரும் நல்லாசிரியர்கள் தாம் அறிந்திராத புதிய துறைகளை முயன்று கற்றல் வேண்டும். தம்மை எதிர்நோக்கும் கஷ்டங்களை வென்று புதிய பாதையில் கல்வி போதிக்கத் துணிந்து முன்வர வேண்டும். புதிய துறையில் ஆசிரியர்களுக்குப் பயிற்சி அளிப்பதற்காகக் கல்வி வட்டாரங்களில் ஏற்படுத்தப்படும் கல்விக் கருத்தரங்குகளில் தவறாது பங்குபற்ற வேண்டும். தெரியாதவிஷயங்களைத் தெரிந்ததாகக் காட்டிக்கொள்ளும் போலி மனப்பான்மையை உதறித்தள்ளிப் பல விஷயங்களையும் பலரிடமும் கேட்டு அறிவைத் தேடுதல் வேண்டும். இவ்வாறு ஆசிரியர்களாகிய நாம் ஆர்வத்தோடு உழைத்தாற்றான் பல அறிஞர்களின் சிந்தனையில் உருவாகிய புதிய கல்வித்திட்டம் பூரண வெற்றி பெறமுடியும்.

★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திரேசியன் இல்லம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யோசவ் இல்லம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குமரப் பருவக் கல்வி

எ.ச. வேலாயுதபிள்ளை
அதிபர், கொழும்புத்துறை அரசினர் ஆசிரிய கலாசாலை

சிக்கலும் அமைதியின்மையும் பொதிந்தது குமரப் பருவமென்பது உளவியலறிஞர்தம் ஆய்வாகும். நோய் எத்தன்மையது, எத்தகைய ஏதுக்களை அடிப்படையாகக் கொண்டதெனும் தெளிந்த அறிவு ஏற்படும் வரை சரியான மருந்தை வழங்குவதாக எந்த மருத்துவனுலும் கூறவியலாது. எனவே, கல்வியின் இரு கூறுகளான கற்றலும் கற்பித்தலும் செம்மையாக நடைபெற வேண்டுமாயின் தனது கையில் ஒப்படைக்கப்படும் மாணவனைப் பற்றிய திட்டவட்டமான அறிவு ஆசிரியனுக்கு இருத்தல் இன்றியமையாததாகும். அதனைக் கருத்திற் கொண்டே குமரப் பருவக் கல்வியை மையமாக்கி குமரப் பருவமும் சமூகச் சூழலும், குமரப்பருவப் புறவயநோக்கு நடத்தையை உருவாக்கும் சக்திகள், பள்ளியின் செல்வாக்கு, சமூகத் தொடர்பென்னும் தலைப்புக்களில் கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன.

## குமரப்பருவமும் சமூகச் சூழலும்:

பதினென்று அல்லது பன்னிரண்டு வயதில் தொடங்கிப் பல்கலைக்கழகக் கல்வி வரை நீடிக்கும் இப்பருவம் ஒரு உயிரியின் திறன்கள் பூரண வளர்ச்சி பெற்று முழுமையடையும் பருவமெனலாம்.

சூழலோடு பொருத்தப்பாடு காண்பதில் தோல்வியுற்றுத் தனிமையில் மனங் குமுறும் பலரை நாம் அறிவோம். இவ் அவல நிலைக்கான காரணத்தை ஆராய்வோமாயின் அவரது குமரப்பருவம் ஆரோக்கியமான சூழலில் கழிக்கப்படவில்லை என்ற முடிவிற்கேவர நேரும்.

"வாழ்க்கையின் தேவைகளுக்கும் தேர்வுகளுக்கும் ஏற்ப ஒரு குழந்தையை உருவாக்குவது சுலபம்; ஆனல், சுயநலம் மிகுந்த, விட்டுக்கொடுக்கும் மனப்பான்மையற்ற, உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசும் சூழலில் வாழத்தக்க வகையில் அக்குழந்தையை உருவாக்குவது மிகக் கடினம்." என்னும் உளவியலறிஞரின் (*Rudolf Allers*) கூற்று சிந்தனைக்குரியதாகும்.

இன்றைய குமரப்பருவத்தினரின் போக்கும்—நோக்கும் முற்றிலும் புதியதோர் திசையில் செல்வதை நாம் அறிவோம். பயன் மதிப்பு மிக்க அரிய பண்புகள் பல எள்ளப்பட்டும் தள்ளப்பட்டும் இகழப்பட்டும் வருகின்றன. இதன் காரணம் யாதெனச் சிந்திப்போமாயின் பூசையறையில் மட்டும் பக்தனுகவிருக்கும் வளர்ந்தோரின் போக்கென்பதை மறுக்கவியலாது.

நடைமுறைச் சாத்தியமற்ற கொள்கைகளையும், கோட்பாடுகளையும் பண்பாடு கலாச்சாரமென்னும் பெயரில் பாதுகாத்து வருவதாக நடிப்பதிலும் பார்க்க, ஆக்கபூர்வமான சிந்தனையோடு குமரப்பருவத்தினரின் கவர்ச்சிகளையும், மனவெழுச்சிகளையும் கருத்திற் கொண்டு காலவெள்ளத்தின் வேகத்திற்கு ஈடு கொடுக்கத்தக்க, நெகிழ்ச்சி பொருந்திய வழிவகைகளைக் கண்டறிந்து கையாள்வது சாலவும் பொருந்தும்.

குற்றம் புரிவதற்கான வாய்ப்புக்களை ஏற்படுத்திய பின் குற்றவாளியாகி விட்டதற்காக வருந்துவது பேதைமையாகும். எனவே, வருங்காலத்தின் சொத்துக்கள் முத்துக்கள் எனப் புனைந்துரைக்கப்படும் குமரப்பருவத்தினர், உயர்தனிச் சிறப்பு வாய்ந்த பொருத்தப்பாடடைதலெனுங் கல்வியின் பிரதான இலக்கை அடைய வழிவகுக்கும் ஆரோக்கியமான சூழலை ஏற்படுத்திக் கொடுப்பது எமது கடனுகும்.

## புறவய நோக்கு :

குமரப்பருவம் மாற்றங்கள் பல நிகழும் கட்டமென்பதை நாம் அறிவோம். பூப்பும் அதன் பயனுக உள்ளுறுப்புக்களின் வளர்ச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சியும் இப் பருவத்தில் இடம் பெறும் மாறுதல்களுக்கான மூலகாரணிகளெனலாம்.

முதிர்ச்சியடைந்தவன் தன்னையும் புறவுலகினையும் இருவேறு பொருள்களாகக் கருதுவது கிடையாது. தானும் உலகின் ஒரு பங்கென எண்ணுகின்றான். ஆனால் குமரப் பருவத்தினனின் நோக்கு இதனிலும் வித்தியாசப்படுகின்றது. இவ்வித்தியாசம் ஏற்படும் பருவம் 'தன்னைக் கண்டுணரும் பருவம்' எனலாம். எவ்விடயத்திலும் தீர்க்கமானதொரு முடிவினுக்கு வரவியலாத் தடுமாற்றம், தனக்கென ஓர் இடத்தை ஏற்படுத்திக்கொள்ளும் அவா, என்பனவற்றோடு பாதுகாப்பில்லாதது போன்ற உணர்வு, அபாயமும் புதுமையும் நிறைந்த அனுபவங்களைப் பெறும் ஈடுபாடு என்பன குமரப்பருவப் புறநோக்கில் பிரதிபலிப்பன.

## நடத்தையை உருவாக்கும் சக்திகள் :

நடத்தையை உருவாக்கும் சக்திகளாக நேர் ஊக்கிகள், புறவுலகின் சமூகக் கோட்பாடுகளும் நியதிகளும் வரையறுக்கும் கட்டுப்பாடுகள், பயன்மதிப்புள்ளவையெனத் தீர்மானிக்கப்பட்டவைகளில் கொள்ளும் பிணைப்பு என்பன கொள்ளப்படுகின்றன.

குமரப்பருவ நடத்தையை உருவாக்குவதில் இங்கு கூறப்பட்ட சக்திகளுள் இரண்டாவதன் செல்வாக்குக் குறைவெனலாம். ஆரம்பத்தில், போலச் செய்தல், பின்பற்றுதல் என்பன மூலம் நடத்தை உருவாகின்றதெனினும் குமரப்பருவத்தில் பெற்றோரின் விருப்பம், சமூகச் சூழலின் தன்மைக்கேற்ப நடக்கும் இயல்பு குன்றி காரண காரியங்களைத் தொடர்புபடுத்திச் சிந்தித்து உண்மையுருவைக் காணும் வேட்கையே ஓங்குகின்றது. விஞ்ஞான விரிவாக்கம் இத்தகைய தொடர்புபடுத்திக் காணும் திறனை மேலும் வளர்த்துள்ளதெனலாம்.

## பள்ளியின் செல்வாக்கு :

நடத்தையை உருவாக்குவதிலும், திறன்களை வெளிக்கொணர்வதிலும் பள்ளியின் பங்கு குறைவெனினும் முக்கியம் வாய்ந்ததெனலாம். சமூக உணர்வின் விரிவாக்கத்திற்குகந்த கருவிகளாகப் பாடசாலையும் வகுப்பறையும் திகழ்கின்றனவெனினும், அவற்றால் ஏற்படும் தீமைகளும் உளவென்பதை மறுப்பதற்கில்லை. விடுதியோடு கூடிய பாடசாலையோடு மாணவனைத் தொடர்புபடுத்திப் பார்ப்போமாயின் அங்கு நடைபெறும் நாளாந்த வாழ்க்கை உண்மைக்குப் புறம்பான இயந்திரரீதியான செயற்கைத் தன்மை கலந்ததெனலாம். நேரசூசிக்கு அமையவே எல்லாக் கடமைகளும் நடைபெறவேண்டியுள்ளதால் சுதந்திரமாகத் தொழில்படும் சக்தி அற்றுவிடுகின்றது.

பரஸ்பர நம்பிக்கை பள்ளி வாழ்க்கையின் அடித்தளமெனலாம். பெரிய பள்ளிகளில் ஆசிரிய-மாணவர் தொடர்பு தெளிவாக இருக்குமென்றோ, ஒவ்வொரு மாணவனைப்பற்றிய பூரண அறிவு ஆசிரியருக்குக் கிட்டுமென்றோ கூறுவதற்கில்லையெனினும், ஒவ்வொரு பருவத்திலும் மாணவனிடம் ஏற்படும் மாற்றங்களுக்கான காரணங்களைப் பற்றிய அறிவைக் குழந்தை உளவியல் ஆசிரியனுக்கு நல்குமெனப் பூரணமாக நம்பலாம்.

பள்ளியின் செல்வாக்கு என்னும் சொல்லின் பெரும் பகுதி ஆசிரியனில் அடங்கி உள்ளது. எனவே முறைமைப் படுத்தப் பட்ட பாடசாலைக் கல்வியோடு மாணவனைப் பொருத்தப்பாடடையச் செய்யும் முயற்சியில் ஈடுபடும் ஆசிரியன் தன்னைத் தகுந்ததொரு எடுத்துக்காட்டாக ஆக்கிக் கொள்ளக் கடமைப்பட்டுள்ளான். அவ்விதம் நிகழாத வரை வகுப்பறையில் இடம் பெறும் போதனைகள் யாவும் புற்றீயல் போல உதிருமேயன்றி அதன்பயனாக எழும் முயற்சியோ, பயிற்சியோ, பயன் விளைவோ சாத்தியமென எதிர்பார்ப்பதற்கில்லை.

## சமூகத் தொடர்பு :

ஒருவன் சமூகத்தோடு கொள்ளும் தொடர்பு அவனது உள்ளுணர்வுகளால் மட்டுமின்றிப் புறச் செயல்களாலும் நிர்ணயிக்கப்படுகின்றது. உடன் வாழ்வோரிடம் கொண்ட அச்சம் அவர் தம் நோக்கில் நல்லவனாக இருக்கமுடியவில்லை யெனும் மனக் குமுறல், தீவிர உணர்ச்சிகளுக்கு ஆளாதல், வெட்கம் என்பன ஒருவன் சமூகத்தோடு கொண்ட தொடர்பை அறுத்துவிடுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமூக இயல்பினனின் முக்கிய இலக்கணங்களிலொன்று சிறந்த தொடர்புடைய வளுதல். இச் சமூகத் தொடர்பின் எல்லை வீடு, பாடசாலை, அயல் எனப் படிப்படியாக விரிவடைகின்றது. இவ்விரிவாக்கத்தோடு பொருத்தப்பாடடையும் பக்குவத்தை ஏற்படுத்துவது பாடசாலையின் தலையாய கடமையாகும்.

விட்டுக்கொடுத்தல், சகிப்புத் தன்மை, மற்றவர் உணர்ச்சிகளுக்கு மதிப்பளித்தல் ஒத்துழைத்தல், நலனுய்தல் என்பன சமூகத் தொடர்பினை நிறுவத்தக்க ஏதுக்களாகும். விளையாட்டுப் போட்டிகள், இல்ல நிகழ்ச்சிகள், உல்லாசப் பயணங்கள், கல்விச் சுற்றுலாக்கள், சாரணர் இயக்கம், இலக்கிய மன்ற நடவடிக்கைகள் என்பன மேற்கூறும் பண்புகளை மாணவரிடம் தோற்றுவிக்கத் தக்கன.

சமூகத் தொடர்பு வாழ்க்கையில் சுறுசுறுப்பையும், உயிர்த்துடிப்பையும், ஜீவகளையையும் ஏற்படுத்துவது; பிரச்சினைகளை எளிதில் தீர்த்துச் சிக்கலின்றி வாழ வைப்பது. எனவே, இத் தொடர்பு நலன் பயப்பதாக அமையத் துணைபுரிவதன் மூலம் கல்வியின் குறிக்கோளின் பெரும் பங்கைப் பூர்த்தியாக்க உதவுகின்றோம்.

உதவாதவன் என்று சிலரை பள்ளி, வகுப்பறை நடவடிக்கைகளினின்று ஒதுக்கி வைப்பதை நாம் அறிவோம். இத்தகைய புறக்கணிப்பு தான் வேண்டப்படாதவன் என்ற எண்ணத்தை வலுப்பெறச் செய்து அவனது ஆளுமையைப் பலவீனப்படுத்தும். எனவே, ஒவ்வொரு மாணவனும் வேண்டப்பட்டவன் என்னும் உணர்வைத் தோற்றுவித்து நேரடியாகவோ மறைமுகமாகவோ அவனுக்குரிய பங்கை அளிப்பதுவே சாலச் சிறந்ததாகும். பதினேழாம் நூற்றாண்டின் தொடக்கம் முதல் உளவியல் ஆய்வுகள் கல்வித்துறையில் வெற்றிக்குப் பெரிதும் உதவி வருகின்றன. இங்கிலாந்து, அமெரிக்கா, இத்தாலி, சுவிச்சர்லாந்து, ரஷ்யா, பிரான்ஸ், போன்ற நாடுகளைச் சார்ந்த பாவ்லவ் *(Pavlov)* வாட்சன் *(Watson)* தார்ண்டைக் *(Thorndike)* லாஷ்லி *(Lashley)* வில்லியம் மெக்டுக்கல் *(William McDougall)* போன்ற உளவியலறிஞர்களும் டாக்டர் மரியா மண்டிசோரி, ஜோன்டூயி, மகாத்மா காந்தி, ரூஸோ, பெஸ்ரலாஸி, புரொபெல் போன்ற கல்வியாளர்களும் இத்துறையில் ஆய்வுகள் பல நிகழ்த்தியுள்ளனர்.

அவ்வாய்வுகள் கற்றல் சிறப்புற எவ்விதம் உதவுகின்றதென ஆதாரத்தோடு நிறுவியுள்ளனர். அவை பற்றிய அறிவு எமது நாட்டின் கல்வி சிறப்புறப் பெரிதும் துணை புரியுமெனத் திடமாகக் கொள்ளலாம். ★

*With Compliments from :*

**KENNEDY WATCH WORKS**

85, MAIN STREET JAFFNA

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கற்றதனாலாய பயனென் கொல்...?

ஆ. தேவராசன்
கல்வித் திணைக்களம், சிலாபம்

மதபீடங்களே போதனை நிலையங்களாக முன்பு இருந்தன. ஆரம்பத்தில் மதபோதனையுடன் இயங்கிய இந்நிலையங்கள் பின்பு பொதுப் போதனைகளையும் வழங்கின. எனவே, கல்வி என்பது ஆன்ம சுத்தி, உளநெறிப்பாடு, ஒழுக்கவமைதி ஆகியவற்றை மையமாகக் கொண்டதே என்றகருத்து நிலவியது.

"கற்றதனா லாயபய னென்கொல் வாலறிவன்
நற்றாள் தொழாஅ ரெனின்"

என்ற வள்ளுவர் கருத்தும் இந்தச் சூழலிலும் பின்னணியிலும் எழுந்ததேயாகும்.

காலம் போகப்போக நிலைமைமாறி நாட்டின் அரசு இயங்க உதவி செய்யக்கூடிய பல்துறை நிபுணத்துவம் தேவைப்பட்டது. எனவே, பல்வேறு துறைகளையும் தனித்தனி விருத்தி செய்யக்கூடிய விதத்தில் போதனைகள் மாற்றியும் விரித்தும் அமைக்கப்பட்டன. இலங்கையைப் பொறுத்தவரையிலும் இதே நிலைதான் நிலவியது.

ஆங்கிலேயர் வருகையுடன் கல்வியில் ஒரு திருப்பம் ஏற்பட்டது. இந்நாட்டின் பொருளாதாரத்தைச் சுரண்டுவதிலேயே கண்ணாயிருந்த இவர்கள், நாட்டு நிர்வாகத்துக்கு இந்நாட்டவரையே பயன்படுத்தி நிர்வாகச் செலவைச் சுருக்கினர். நாட்டு நிர்வாகத்துக்கு ஏற்ற ஒரு கல்வியைப் புகுத்தினர். நாட்டு வளம் பெருக்க உதவும் கல்வியன்று அது. நாடு சுதந்திரம் பெற்றுக் கால் நூற்றாண்டு கழிந்தும் நிலைமை இப்படியே இருக்கிறது.

நாட்டு வளம் பெருக்கி, மக்களுக்கு வாழ்வளிக்கும் புதிய கல்வித் திட்டமொன்றை 1940 ஆம் ஆண்டிலும் 1941 ஆம் ஆண்டிலும் அப்போதைய கல்விப் பணிப்பாளர் திரு. எம். மக்- டி. ஜெபீசன் கொண்டுவர முயன்றார். நாட்டில் அப்போது அமைக்கப்பட்டுவந்த மத்திய கல்லூரிகளை இக்கல்வியின் விளைநிலமாக்கத் திட்டமிட்டார். இந்தத் திட்டத்தின் மூலம் பிரதேச வாரியாக இருக்கும் தொழில்களை அவ்வப் பிரதேசங்களில் அமைந்த மத்திய கல்லூரிகளின் பாடத் திட்டத்தில் சேர்த்து, அவ்வப்பிரதேச மாணவர்களை ஏற்ற தொழிற்திறம் பெற்றவராக்கித் தமக்கும், தம் நாட்டுக்கும் பயனுள்ளவர்களாக்க முயற்சி செய்தார். ஆனால் தீர்க்கதரிசனமற்ற சுயநல அரசியல், இத்திட்டத்தைக் கருவிலேயே அழித்துவிட்டது.

சமூக பொருளாதார மாற்றங்கள் வெகுவாக முன்னேற்றம் அடைந்துவந்த அதே வேளையில், மனித தேவைகளையும், நிதி நிலைமைகளையும் புறக்கணித்துக் கொண்டு ஆங்கிலேயரின் 'நாட்டு நிர்வாகக் கல்வி' விரிந்து பரந்தது, இதன் விளைவாக வேலைதேடிக் கொள்ள முடியாத இளைஞர்கள் எண்ணிக்கை அதிகரித்தது. இன்று 550,000 பேர் வேலையற்றவர்களாக இருக்கின்றனர். ஆண்டுதோறும் இத்தொகைக்கு மேலும் 110,000 பேர் சேர்கின்றனர்.

1946/47 இல் இருந்து நமது பொருளாதார நிலையையும் நோக்குவது நன்று. இரண்டாவது உலக மகாயுத்தம் முடிந்த பின் நமது வெளிநாட்டுச் செலாவணி தளப்பமில்லாத நல்ல நிலையில் இருந்தது. இதே காலகட்டத்தில் மலேரியாத் தடுப்பு வெற்றியளித்து சனத்தொகை அதிகரிக்கத் தொடங்கியது. கல்வி தேடிவரும் சிறார்கள் எண்ணிக்கை இதிலிருந்து ஆண்டுதோறும் பெருகிவந்தது. இது நமது பொருளாதாரத்தைத் தாக்கத் தொடங்கியது. வெளிநாட்டுச் செலாவணி நிலைமை நன்றாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்ததால் வெளிநாட்டுப் பொறியியல், மருத்துவ, தொழில்நுட்ப உதவிகளையும் அப்போது பெற முடிந்தது. இப்போது தேசிய வருவாயில் 5% கல்விக்கே செல விடப்படுகிறது. அதாவது கிட்டத்தட்ட 66 கோடி ரூபாய் செலவாகிறது. இருந்தும் 40% மக்களே பயன்தரு தொழில்களில் ஈடுபட்டுள்ளனர்.

இன்று இந்த நாட்டின் பொருளாதாரப்பிரச்சினை என்பதும், வேலையில்லாப் பிரச்சினை என்பதும் இளைஞர் பிரச்சினையாகவே இருக்கிறது. இன்று வேலையற்றவர்களுள் 76% மாஞேர் 15—24 வயது எல்லைக்குட்பட்டவர்கள். அவர்களுள்ளும் 60% மாஞேர் எட்டாம் வகுப்புக்கு மேல் படித்தவர்கள். நாட்டுக்குத் தேவை தொழில்நுட்பப் பயிற்சிபெற்ற இளைஞர்களே! அந்தப்பயிற்சி இல்லாத இளைஞர்கள் நாட்டுக்குச் சுமையாகவுள்ளனர். இந்த நிலைமையிலே பழைய கல்வித் திட்டத்தையே முன் கொண்டு செல்வது தற்கொலைக்கு ஒப்பாகும். கல்விமுறை மாற்றி அமைக்கப்படாத பள்ளிக்கூடங்கள் இளைஞர்களின் பலிக்களங்களாகும்.

இதன் விளைவாக நாட்டு வளத்துக்கு ஆக்கம்தரும் தொழிற்துறைக் கல்விக்கு ஊக்கமளிக்கும் புதிய கல்வித்திட்டம் சுதந்திரம் பெற்றுக் கால் நூற்றாண்டு விரயத்தின் பின்னர், 1972 ஆம் ஆண்டிலிருந்து உருவாக்கப்பட்டுள்ளது. இது வரலாற்றில் ஒரு முக்கிய திருப்பமாகும். தேசிய வருவாயில் 5% கல்விக்குச் செலவிடப்படுகிறது. இதில் 85% கலைத்துறைப் படிப்புக்குச் செலவாகிறது. 15% மட்டுமே விஞ்ஞானக் கல்விக்குப் பயன்படுத்தப்படுகிறது. அதிலும் 1% மட்டுமே தொழில் நுட்பக் கல்விக்கு பயன்படுத்தப்படுகிறது. நமது நாட்டின் பொருளாதார நிலையை எண்ணிப் பார்க்கும்போது இது ஒரு அபாயகரமான நிலை என்பதை நாம் ஏற்றுக்கொள்ளவேண்டும். நமது நாட்டின் ஐந்தாண்டுத்திட்டத்தின் கீழ் விஞ்ஞான தொழில்நுட்பக் கல்வி விகிதாசாரத்தை 65% முதல் 85%வரை உயர்த்தத் திட்டமிடப்பட்டுள்ளது. இதன் முன்னேடியாகவே 1972 ஆம் ஆண்டில் 6 ஆம் வகுப்பிலிருந்து பாடத்திட்டம் மாற்றி அமைக்கப்பட்டதுடன் தொழில் முன்னிலைப் பாடமும் புகுத்தப்பட்டது.

இன்றைய கல்வித்திட்டத்தின் கீழ் 11ஆம் 12 ஆம் வகுப்புகளில் மனிதசக்தியும், பணமும் விரயமாகிறது. 10 ஆம் வகுப்பில் சித்தி அடையும் மாணவர்கள் பல்கலைக் கழகத்துள் நுழைவதற்காக 11 ஆம், 12 ஆம் வகுப்புகளில் இரண்டு ஆண்டுகளைச் செலவு செய்கின்றனர். இதற்காக அரசும் பல்லாயிரக்கணக்கில் ஆசிரியர் சம்பளம், பிற செலவினங்கள் என்று செலவு செய்கிறது. இறுதியில் 1% மாணவர்களே பல்கலைக் கழகம் செல்கிறுர்கள். இது மிக வேதனைக்குரிய நிலைமை என்று நமது கல்வி அமைச்சர் மாண்பு மிகு கலாநிதி அல்ஹாஜ் பதியுதீன் மஹ்முத் அவர்கள் கூறியுள்ளார். 11 ஆம் 12 ஆம் வகுப்புப் படிப்பையே பல்கலைக் கழக முதலாண்டில் படிப்பிப்பதால், வேண்டுமானல் பல்கலைக்கழகப் படிப்பை ஒரு ஆண்டால் கூட்டி புதிய திட்டத்தின்படி 9 ஆம் வகுப்புடன் நிறுத்திக்கொள்வது நல்லதென்ற கருத்தையும் அவர் தெரிவித்து இருக்கிறுர். அதன் பிரகாரம் 9 ஆம் வகுப்புப் படித்த மாணவர்கள் தத்தமது தொழில் துறைக்கு ஏற்ற தொழிற் கல்லூரிகட்குச் சென்று தமது திறமையை விருத்தி செய்து அத்தொழில்களைச் செய்யலாம். ஏனைய தகுதியான மாணவர்கள் பல்கலைக் கழகம் செல்லலாம். இதனுல் செலவும் குறையும்; பயனும் கூடும்.

சோவியத்து ஒன்றியத்தில் 12 வயது மாணவன் உள் தகன எத்திரத்தை (*Internal Combustion Engine*) இயக்கக் கூடியவனுக இருக்கிறுன். அந்த அளவுக்கு கல்வி தொழிற்பயிற்சியுடன் கூடியதாக இருக்கிறது. மக்கள் சீனுவில் தொழிற்பேட்டை கல்வி நிலையமாகவும், கல்வி நிலையம் தொழிற்பேட்டையாகவும் ஆசிரியர் தொழிலாளராகவும், தொழிலாளர் ஆசிரியராகவும் ஐக்கியப்பட்டு பரஸ்பர உதவியர்கக் கல்வியை வளர்க்கிறுர்கள். எனவே தொழிற் பயிற்சி வேறு வாழ்க்கைப்பயிற்சி வேறு என்ற நிலை இல்லை. சோஷலிஸ நாடுகளில் கல்வித்துறை அவ்வளவு முன்னேற்றம் அடைந்துள்ளது. ஜப்பான், ஜேர்மன் குடியரசு போன்ற நாடுகளிலும் நிலைமை இதுதான். நமது நாடு முன்னேற இத்தகைய தொழிற்றுறைப் பயிற்சியும் கல்வியும் மிக அவசியம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளர்ந்துவரும் நாடுகளில் கல்வி ஒரு பெரும் பிரச்சினையாகிவிட்டது. ஏன் உலக அரங்கிலேயே கல்வி என்று இதுகாறும் அழைக்கப்பட்ட பயிற்சி தன் தேவையை தகைமையை இழந்துவிட்டதா என்ற வினு எழும்பியுள்ளது. அமெரிக்க நிபுணர்களான எவறெற் றெய்மர், போல் குட்மன், பெல்ஜிய நிபுணரான மார்செல் ஹிக்ரர், யூகோஸ்லாவிய நிபுணரான ஸ்டீவன் பெஸ்டனேவ் ஆகியோர் கல்வியும் கல்விக்கூடமும் பயனற்றுவிட்டன என்ற புரட்சிகரமான கருத்துக்களையே தெரிவிக்கின்றனர்.

எந்தமுதலீடும் பிரதிபலனைத் தர வேண்டும். அந்தவகையில் கல்வியில் செலவிடப்படும் முதலீடும் பிரதிபலனைத்தர வேண்டும். அன்றேல் அது பயனற்ற முயற்சி என்ற கருத்தை சிறந்த கல்வி நிபுணரான எம். புளோக் கூறுகிருர். இந்தக் கூற்று நமது நாட்டைப் பொறுத்தவரையிலும் முற்றிலும் உண்மையாகவுள்ளது.

ஆகவே, கல்வி பற்றிய முன்னைய சித்தாந்தம் இன்று செல்லுபடியாகாத நிலைக்கு மனித சமுதாயமும் அதன் தேவைகளும் வெகுதூரம் மாறிவிட்டன. எனவே,

''கற்றதனு லாயபய னென்கொல் வாலி
பர்கள்
நன்றுடனே வ(ா)ழா ரெனின்''

என்று குறளை மாற்றிப் போற்ற வேண்டும்.

ஒருவன் இருபது குதிரைகளைத் தண்ணீர்த் தொட்டிக்கு இட்டுச் செல்லலாம். ஆனுல் இருபதுபேர் ஒரு குதிரையைத்தானும் தண்ணீர் குடிக்கச் செய்ய முடியாது. நமது நாட்டின் வருங்கால வளம் கருதி அமைக்கப்பட்ட புதிய கல்வித் திட்டத்தின் கதியும் அப்படியே. இதனைப் பொதுமக்கள் ஏற்றுச் செயற்படுத்தத் தவறினுல் புதிய சந்ததி பாழடையும். பெற்றூர் ஆசிரியர் சங்கங்கள் இந்தத் திட்டம் வெற்றியடைய நன்கு ஒத்துழைக்க முடியும். ★

*For repairs to*

Cinema Amplifiers — Tape Recorders
Radios — Transistorized equipments

and all electrical apparatus

**MICHAEL RADIO SERVICE**

173. HOSPITAL ROAD — JAFFNA

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அன்ரனிஸ் இல்லம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



எமது பாலர் கழகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்வி, சமுதாயம், சோஷலிஸம்

**கலாநிதி க. கைலாசபதி**
தமிழ் விரிவுரையாளர், இலங்கைப் பல்கலைக் கழகம், கொழும்பு

**நா**கரிக வளர்ச்சி தோன்றிய கால முதல் மனிதன், யாவும் நிறைவான உலகினைக் கற்பனை செய்து வந்திருக்கிறான். மனுக்குலத்தின் அபிலாஷைகளே இத்தகைய கற்பனையுலகுகளில் பெரிதும் இடம் பெற்றிருக்கின்றன. கற்பனை உலகுகளைச் சிருட்டித்தவர்களில் தத்துவஞானிகளும் இலக்கிய கர்த்தாக்களும் முன்னிற்கின்றனர். பண்டைய கிரேக்க தத்துவவாதி பிளேட்டோவிலிருந்து. பத்தொன்பதாம் நூற்றாண்டிலே வாழ்ந்த கற்பனா சோஷலிஸ்டுகள் வரை பற்பல சிந்தனையாளரும் இலட்சியவாதிகளும் ''வேண்டுதல் வேண்டாமை இலாத'' பரிபூரண சமுதாயங்களைக் கற்பனையில் கண்டு விவரித்துள்ளனர். இவர்களிற் சிலர் தாம் கற்பனையிற் கண்ட சமுதாயத்தைச் சிறிய அளவிலேனும் உருவாக்கவும் முயன்றனர்.

இவ்வாறு முயன்றவர் அனைவரும் தமது அமைப்பிலே கல்விக்கு முதன்மைத் தானம் அளித்திருக்கின்றனர். உதாரணமாக, வரலாற்றிலே முதலாவது கற்பனையுலகான குடியரசு என்னும் இலட்சிய அமைப்பில், சிறுபிராயத்திலிருந்தே குழந்தைகளின் கல்வியில் அதிக கவனஞ் செலுத்தப்படுகிறது. இருபது வயதுவரை அனைவருக்கும் ஒரேவகையான கல்வி புகட்டப்படல் வேண்டுமென்று கூறுகிறான் குடியரசு ஆசிரியன் பிளேட்டோ. அவன் கண்ட குடியரசை ஆளுபவர்கள் தலையாய கல்விமான்களாய தத்துவவாதிகள். தத்துவவாதியின் இதயவேட்கையே குடியரசு என்னும் நூலில் இழையோடுகிறது.

தமிழிலக்கியத்திலே, சிறப்பானவொரு கற்பனையுலகினைக் கண்டவன் கவிச்சக்கரவர்த்தி கம்பன். பால காண்டத்திலே கோசல நாட்டு வளப்பத்தை வருணித்துவிட்டு, அயோத்திமா நகரின் சிறப்பினைக் கூறுகையில், செல்வமும் கல்வியும் சிறந்து விளங்கும் போக மாநகராக அது உள்ளது என்கிறான் கவிஞன். இது உற்று நோக்கத்தக்கது. நகரப்படலத்து ஈற்று இரு பாடல்களும் பிரசித்தம்.

162591

கல்லாது நிற்பார் பிறர் இன்மையின், கல்வி முற்ற
வல்லாரும் இல்லை; அவை வல்லவர் அல்லாரும் இல்லை;
எல்லாரும் எல்லாப் பெருஞ் செல்வமும் எய்தலாலே,
இல்லாரும் இல்லை; உடையார்களும் இல்லை மாதோ

பொருட் செல்வத்தையும் கல்விச் செல்வத்தையும் பூரணமாக யாவரும் பெற்றுள்ளனர் என்று கூறும் கம்பன், இறுதிப்பாட்டிலே, பொருட்சிறப்பால் நன்கு அமையக் கூடிய தவம், தருமம், அன்பு, அருள், போகம் முதலியவற்றுக்குக் கல்வியை அடித்தளமாகக் கொள்கிறான்.

ஏகம் முதல் கல்வி முளைத்து எழுந்து, எண் இல் கேள்வி
ஆகும் முதல் திண்பணை போக்கி, அருந்தவத்தின்
சாகம் தழைத்து அன்பு அரும்பி தருமம் மலர்ந்து
போகங்கனி ஒன்று பழுத்தது போலும் அன்றே

இணையில்லாத அடியில் கல்வி என்னும் முளை முளைத்து கேள்விகளாகிய அடிச்சுவடுகளை விட்டு,தவமாகிய கிளைகளைப் பரப்பி, அன்பாகிய அரும்பு அரும்பி, தருமமாகிய மலர் மலர்ந்து, போகமாகிய கனி ஒன்று பழுத்தது என்று முற்றுருவமாகக் கவிஞன் கூறுகையில் கல்வியின் முக்கியத்துவம் தெளிவாகி விடுகிறதல்லவா?

தொன்றுதொட்டு வந்துள்ள மெய்யியலாளரைப் போலவே சோஷலிஸ தத்துவத்தின் மூலபிதாக்களும், அதனை நடைமுறைப்படுத்தியவர்களும் கல்விக்குப் பிரதானமான இடத்தை அளித்தனர். இதன் பயனாகிய சோஷலிஸக் கல்வி என்னும் கோட்பாடு உருப்பெற்றது. சோஷலிஸக் கல்விக் கோட்பாடு என்பதுசிந்தனையிலும் கற்பனையி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லும் முகிழ்த்தது ஒன்று அன்று. அது சோஷலிஸத்தைக் கட்டியெழுப்பும் மாபெரும் பணியின் உடனிகழ்ச்சியாகவும் காரணமாகவும் காரியமாகவும் வளர்ச்சியுற்றதொன்றாகும். உலகப் புகழ்பெற்ற ருஷ்ய எழுத்தாளர் மாக்ஸிம் கார்க்கி 1925 இல் எழுதியது இவ்விடத்திலே பொருத்தமாயிருக்கிறது.

''மிகவும் வில்லங்கமான காலப்பகுதியிலே—1919, 1920 ஆம் வருடங்களிலே—ருஷ்ய விஞ்ஞானிகளுடன் தொடர்புகொள்ளும் பெருவாய்ப்பு எனக்குக் கிட்டியது, எத்தகைய அடக்கத்துடனும் வீரத்துடனும், நடுநிலையுணர்வுடனும் மனஉரத்துடனும், குளிர், பசிஎன்னும் கடும் வேதனைகளைத் தாங்கி, அவற்றை வென்று, அவர்கள் ருஷ்ய விஞ்ஞானத்தை வளர்த்தனர் என்பதை நான் கண்டறிந்தேன். அந்நியரது தலையீடும், முற்றுகையும் நிறைந்திருந்த அக்காலகட்டத்தில் உயிர் கொடுத்தும் உழைத்து, விஞ்ஞானத்தை அபிவிருத்தி செய்த வீரமிகு விஞ்ஞான தியாகிகளை நாம் என்றுமே மறக்கவியலாது.''

சோஷலிஸக் கல்விக் கொள்கையும், அதன் ஓர் அம்சமான விஞ்ஞான அபிவிருத்தியும் சோஷலிஸ நிர்மாணத்தின் பிரிக்கவியலாத அங்கமாக அமைந்தமையையே கார்க்கி மேற்கண்டவாறு விவரித்துள்ளார். ஆகவே சோஷலிஸக் கல்விக் கோட்பாடு என்பது சோஷலிஸ சமுதாயத்தை அமைப்பவர்களின் அநுபவங்களிலிருந்து பிறந்த தொன்றாகும்.

முதலாளித்துவ சமூக அமைப்பிலே கல்வியைப் பற்றி முரண்பட்ட கருத்துக்கள் இரண்டு உண்டு. ஒவ்வொரு படிநிலையிலும் மாணாக்கருக்குக் குறிப்பிட்ட அளவு அறிவை வழங்குவதா, அல்லது தாமாகவே அறிவைப் பெற்றுக் கொள்ளக் கூடிய வழிவகைகளைப் பயிற்றுவிப்பதா சிறந்தது என்னும் ஐயமே முதலாளித்துவ அமைப்பில் கல்வியாளரை அலைக்கிறது. இது வாழ்க்கைக்கும் கல்விக்கும் உள்ள முரண்பாட்டின் பிரதிபலிப்பேயாகும். இரண்டில் எது சிறந்தது என்பது வேண்டாத விவாதம். இரண்டும் வேண்டும் என்பதே சோஷலிஸ சித்தாந்தமாகும். செய்முறைத் திறமைகளை வேறாகவும் அறிவை வேறாகவும் போதித்தல் சமுதாயத்தில் முரண்பாடுகளை மேலும் வளர்ப்பதற்கே ஏதுவாக அமையும். எனவேதான், 1918 இல் நடந்த அகில ருஷ்ய ஆசிரியர்கள் - சர்வதேசியவாதிகள் மாநாட்டில் உரையாற்றிய லெனின் பின்வருமாறு குறிப்பிட்டார். ''புதிய கல்விக்கொள்கையின் பிரதான பணி, போதனை முறைகளையும் சோஷலிஸ சமுதாய நிர்மாணத்தையும் ஒன்றிணைப்பதாகும்.''

சோஷலிஸ நாடுகளில், அநுபவ ரீதியாக நிறுவப்பட்டுள்ள கல்வி அமைப்பின் சிறப்பியல்புகளை மேல்வரும் "ஆறு கோட்பாடுகளின் அடிப்படையில் விவரித்து விளக்குதல் சாலும்.

## (அ) கல்வி, அரசின் பொறுப்பு:

பள்ளிக்கூடங்கள், ஏனைய கல்விநிலையங்கள் அனைத்தும் அரசாங்கத்தினாலேயே நிறுவப்பட்டு, பராமரிக்கப்பட்டு, வழிநடத்தப்படுகின்றன. இதனால் ஒருமுகப்பாடும், உள்ளியைபும், திட்டமிடப்பட்ட வளர்ச்சியும் சாத்தியமாகின்றன. தனிநபர்களுடைய இரக்க உணர்வினாலும் அவர்களது மனச்சாய்வுகளினாலும் கல்விக்கூடங்கள் பாதிக்கப்படாமல் இருக்க அரச ஆதரவு வகைசெய்கிறது. அதைப்போலவே வணிக நோக்கு கல்விக்குக் குந்தகம் விளைவிப்பதையும் இது நீக்குகிறது. சுருங்கக் கூறுவதாயின், பள்ளிக்கூடங்கள் சுமுகமாகவும் முறையாகவும் நடைபெறுவதற்கு அவை அரசாங்கத்தின் பராமரிப்பில் இயங்குவது இன்றியமையாததாகும்.

## (ஆ) மக்கள் அனைவருக்கும் சம சந்தர்ப்பம்:

எத்தகைய வேறுபாடுமின்றி நாட்டின் பிரஜைகள் அனைவருக்கும் கல்விக் கூடங்களிலே சமவாய்ப்புக்கள் வழங்கப்படுகின்றன. தாய்மொழியிலே ஒருவர் கல்வி கற்க உரிமையும் வாய்ப்பும் இருக்கின்றது. ஒன்றுக்கு மேற்பட்ட மொழிகள் வழங்கும் நாட்டிற்கு சோஷலிஸம் உத்தரவாதப்படுத்தும் உன்னதமான ஏற்பாடுகளில் இதுவும் ஒன்றாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(இ) ஆண்—பெண் சமத்துவம் :

சோஷலிச நாடுகளிலே, கல்வி நிலையங்கள் அனைத்திலும் இருபாலாரும் சேர்ந்தே பயிலுகின்றனர். ஆரம்பக்கல்வியிலிருந்து, உயர் கல்விவரை சகல பல நிலைகளிலும் இரு பாலாருக்கும் சம சந்தர்ப்பம் இருக்கிறது. இதன் தருக்கரீதியான விளைவாகத் தொழில் பார்க்கும் பொழுதும், ஓய்வு காலச் சம்பளம் பெறும்பொழுதும் ஆண்களுக்கும் பெண்களுக்கும் எத்தகைய ஏற்றத்தாழ்வும் இருப்பதில்லை, சோஷலிசக் கல்விக் கோட்பாட்டு அடிப்படைகளில் இது ஒன்று எனலாம்.

(ஈ) ஒரு சீரான பள்ளிக்கூடங்கள் :

வர்க்க, சமூக வேறுபாடுகள் எவற்றுக்கும் இடமளிக்காத வகையில் நாடு முழுவதும் ஒருங்கிணைக்கப்பட்ட, ஒரு சீரான, பள்ளிக்கூடங்களே உள்ளன. 'நல்ல' பள்ளிக்கூடங்கள், 'பெயர்பெற்ற' பள்ளிக்கூடங்கள் என்று விதந்து கூறவியலாத விதத்தில் ஒரே சீரான பள்ளிக்கூடங்கள் இருப்பதால், சம சந்தர்ப்பம் நடைமுறையில் காணப்படுகிறது. சோஷலிஸத்தின் வலிமைக்கும் முதிர்ச்சிக்கும் இத்தகைய அமைப்பு சிறந்த அளவுகோல் என்று கொள்வதில் தவறில்லை.

(உ) மதஸ்தாபனங்களுக்கும் கல்விக் கூடங்களுக்கும் எதுவித தொடர்புமில்லை:

சோஷலிஸ நாடுகளிலே திருச்சபை, மடாலயம் முதலிய சமய நிறுவனங்களின் பிடியிலிருந்தும் செல்வாக்கிலிருந்தும் கல்வி நிலையங்கள் யாவும் பிரிக்கப்பட்டுள்ளன. வழிபாட்டுச் சுதந்திரம் வேறு, சமயச் சார்புள்ள கல்விவேறு. பகுத்தறிவுசார்ந்த, விஞ்ஞானபூர்வமான, பொருள் முதல் வாத நோக்கிலமைந்த கல்வியை விருத்தி செய்வதற்கு, சமயத்தைத் தனித்து வேருக்குவது இன்றியமையாதது. ருஷ்யாவிலும் சீனவிலும் இப்போக்கு நுட்பமாகக் கையாளப்பட்டுள்ளது.

(ஊ) பள்ளிக்கூடத்திற்கும் சமூகத்திற்கும் நெருங்கிய தொடர்பு :

கல்வி சம்பந்தமான சகல விஷயங்களிலும் பிரச்சினைகளிலும் பொது மக்கள் ஆழ்ந்த அக்கறை கொள்கின்றனர். பெற்ருேர் சங்கங்களே அன்றி, தொழிற்சங்கங்கள், வாலிபர் கழகங்கள், போன்ற பொது ஸ்தாபனங்களும் கல்வி நிலையங்கள் தொடர்பான சித்தாந்த — நடைமுறைப் பிரச்சினைகளில் சிரத்தை எடுக்கின்றன. சில நிபுணர்களின் ஏகபோக உரிமையன்று கல்விக் கொள்கை. அதற்கு நிச்சயமான சமுதாயப் பண்பும் பணியும் இருப்பதனுல் வெகுஜனம் உரிமையுடன் அதன் உருவாக்கத்திற்பங்கு கொள்கிறது. ஒரு சந்தர்ப்பத்தில் (1918) லெனின் சொன்னுர்: ''வாழ்க்கைக்குப் புறம்பான, அரசியலுக்குப் புறம்பான பள்ளிக்கூடம் ஒன்று இருக்க முடியும் என்பது பொய்; போலி நடிப்பு.''

சுருங்கச் சொன்னுல், சோஷலிஸ அமைப்பிலே, அறிவை அறிவுக்காக மட்டுமல்லாது, அதனை ஆக்கபூர்வமான வழிகளில் பிரயோகிப்பதற்கும், அப்பிரயோகம் முழுச் சமுதாயத்திற்கும் பயன் தரும் வகையில் அமைவதற்கும் ஏற்றவாறு கல்வி புகட்டுகின்றனர். இதனுல், கல்விக் கூடங்களில் மட்டுமன்றி, பின்னரும் வாழ்க்கையில் தொடர்ந்து கல்வியை விருத்தி செய்வதற்கு வாய்ப்புக் கிடைக்கிறது. தொடர்ச்சியான கல்வி *Continuing education* என்று இக்காலத்தில் இக்கருத்தை வழங்குவர். கல்வி நாளடைவில் நடைமுறையனுபவத்துடனும், இடைவிடாத கற்றலின் பயனுகவும் நிறைவுபெறுகிறது.

இவ்வாறு, அறிவு, பிரயோகம் ஆகிய இரண்டினதும் ஒருங்கிணைப்பால் முழுமையான கல்வியைச் சோஷலிஸ சமுதாயம் கட்டிவளர்க்கிறது. சிறுவயதிலிருந்தே, மாணுக்கருக்கு, ஒழுக்கம், அழகுணர்ச்சி, உடற்பயிற்சி என்ற மூன்றையும் படிப்படியாக அறிவுறுத்த முனைகிறது. இவை மனித ஆளுமையை வளர்க்கவும் பூரணப்படுத்தவும் ஏதுவாகின்றன.

''சிந்தையின் செம்மை'' என்று கம்பன் கூறிய உயர்நிலை, சோஷலிசக் கல்வியிலேயே சாத்தியமாகும். ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ் நகர் நங்கையின் நயனத் திலகம்

போற்றுதல் கடனே! போற்றுதல் கடனே!
வாழ்த்துதல் கடனே! வாழ்த்துதல் கடனே!
சாற்றருஞ் சிறப்புகள் சால்புக ளமைந்து
நாற்றிசை நல்லிசை நாட்டிடுங் கல்விச்
சாலையாம் புனித மரியாள் கூடம்
கோலமா யிலங்கித் திகழுந் தன்மையிற்
பெருமித மடைந்து பெருமகிழ் வுற்றுப்
போற்றுதல் கடனே! போற்றுதல் கடனே!
உருக்கொண் டியங்கிய ஒருநா ருண்டின்
பெருவிழாக் காணும் பெற்றியும் பெரிதே!
அடைக்கல நாயகி அருங்கலைக் கோவிலின்
நடமுறை வளர்ச்சியின் முடியென இன்று
வசதிகள் வாய்ப்புகள் வளமுள சித்திகள்
இசைவொடு இணைந்து இலங்குதல் இனிதே!
பழமையின் மரபும் புதுமையின் பொலிவும்
வளமுறக் கொண்டு மதிப்புகள் கண்டு
யாழ்நகர் நங்கையின் நயனத் திலகமாய்
நீள் புக முடைந்து நிலைபெற வுயர்ந்து
வாழ்வுற விளங்கும் வண்மையும் பெரிதே!
உயர்நிலை யோடு உயர்நிலை யமைய
அயர்விலா துழைத்த ஆசார் திறமையும்
அதிபராய்த் தலைவராய் அமைந்தவர் தகைமையும்
சகலமு முணர்ந்து சாலவே புகழுதல்
தகவுளார் தம்மின் தனிப்பெருங் கடனே!
இக்கலைக் கோயிலை எழுப்பமாய் இயக்கிய
நற்றலை ஆசார் நலம்போற் றிடுவோம்
நாற்ப தாண்டாய் நாயக னெனவே
பொற்புறு சேவை புரிந்தனன் யோண் எனும்
பெயரினன் இவன்புகழ் பெரிதே! பெரிதே!
பின்னுற வந்த பேருறு தலைமை
ஆசார் பல்லோர் அவரவர் ஆற்றலால்
மேலோங் கியதுவே! பேரோங்கியதுவே!
றெபேட் டுடனே ஞானப்ர காசம்
ஒப்புறத் தலைமைப் பணியினை யாற்றினர்
தூய்மை பெறவே துறவுக் கன்னியர்
தாய்மைத் தலைமையைச் சிறப்புற நடத்தினர்
அரிய நல் லாசான் மரிய நா யகமும்
பண்புக ளமைந்த பண்டிதப் பெருமகன்
கந்தையா அருட்பிர காசன், வில்லியம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனுமிவர் தலைவராய் இயற்றிய சேவையால்
தன்பெயர் சிறந்து வளர்ந்தது சாலை
அதன்பின் பாக ஆண்டிரண் டதன்முன்
இதமுறு மதிபராய் இங்குற் றவர்தாம்
ஆசார் பரம்பரைக் குடும்பத் துதித்தோன்
ஆளுமை ஆட்சி முழுமையாயப் பெற்றோன்
கலைவள வளர்ச்சியின் கைவன்மை கண்டோன்
பல நிலைப் பயிற்சியிற் பக்குவ மடைந்தோன்
காரிய சித்திகள் கைவரப் பெற்றோன்
நேரிய வழிகளில் சிறப்புகள் கண்டோன்
எத்தகைத் தகைமையும் மெத்திடப் பெற்றோன்
ஞேகேசன் யோசெவ் எனும் பெய ருற்றோன்
தலைவராய் அதிபராய்ப் பதவியே யுற்ற
அந் நாட் டொட்டு அனைமரிக் கழகம்
நாளொரு வண்ணம் பொழுதொரு தோற்றமாய்
பொலிந்து வளர்ந்து புதுவளங் கண்டு
வளர்பிறை யொப்ப வையம் போற்ற
வளர்ச்சியும் மலர்ச்சியும் வாய்க்கப் பெற்று
யாழூர்க் கல்விச் சாலைகள் தம்முள்
முன்னணி நின்று முதன்மைகள் பெற்று
மின்னி விளங்குந் தகைமையும் பெரிதே!
ஒழுக்கம் அறிவு ஒழுங்குக் கிரமம்
பழக்கம் வழக்கம் கல்விப் பேறு
சமயப் பக்தி சமூக மதிப்பு
கூட்டுக் கல்விச் சங்கப் பணிகள்
போட்டித் துறையிற் புதிய சாதனை
காட்டிய திறமையால் ஈட்டிய பரிசு
வீட்டுப் பயிற்சி வெளிக்கள முயற்சி
கட்டிட அமைப்பு கையுப கரணம்
மன்ற இயக்கம் மாணவர் கழகம்
ஒன்றிய சீருடை ஒப்பிய சாரணம்
ஒவ்வொரு துறையிலும் ஓங்கிய சித்தி
செவ்விதிற் றுலங்கும் சோபித நிலைமை
அத்துணைச் சிறப்பெலாம் அமையப் பெற்ற
அனைமரி அடைக்கல நாயகி மரியாள்
நினைவுக் கல்விச் சாலையே வாழி!
ஆசார் அதிபர் மாணவர் வாழிய!
வாழிய! வாழிய! வளம்பல பெறுக!
மேனிலை மேலும் மிகுந்து
வாழிய இறைவன் இன்னரு ளாலே!

பண்டிதர் க. யோ. ஆசிநாதர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய கல்வித் திட்டத்தில் விஞ்ஞானம்

இ. முருகையன்
பதிப்பாளர், கல்விவெளியீட்டுத் திணைக்களம்

இலங்கையின் கல்வி முறையில், விஞ்ஞான பாடங்கள் நெடுங்காலமாகவே இடம் பெற்று வந்துள்ளன; ஈழத்துப் பாடசாலைகளுக்கு விஞ்ஞானம் முற்றிலும் புதிதான ஒன்று அன்று. ஆயினும் விஞ்ஞானக் கல்வியின் நோக்கமும், பொருட் பரப்பும் அதனை அணுகும் முறையும் காலத்துக்குக் காலம் மாற்றம் பெற்று வந்துள்ளன.

அந்நியர்கள், நம்மை ஆண்டு வந்த அந்தக்காலத்தில் ஆங்கிலம் அறிந்தவர்கள் மாத்திரமே விஞ்ஞானத்தைப் படிக்கலாம் என்ற நிலைமை இருந்தது. அன்றைய நிலைமையில், சில பாடசாலைகள் தமிழ்ப் பள்ளிக்கூடங்கள் என்றும், சிங்களப் பள்ளிக்கூடங்கள் என்றும் இருக்க, ஒரு சில பள்ளிக்கூடங்களே புறம்பாக 'ஆங்கிலப் பள்ளிக்கூடம்' என்ற தனிச்சிறப்புடன் மிளிர்ந்து வந்தன. இவை மாணவர்களிடம் சம்பளக்காசு வசூலித்த நிறுவனங்களாகையால், பணவசதி படைத்த ஒரு சிலர் மட்டுமே ஆங்கிலக்கல்வி பெற்றனர்கள். விஞ்ஞானம் படிக்க முற்பட்டவர்களும் அந்த வர்க்கத்தினரே. இவ்வாறு நிலைமை இருந்தபடியால், இந்தநாட்டின் பெரும்பாலான பொதுமக்களிடையே விஞ்ஞானப் படிப்பின் பலன் எதுவும் சென்று சுவறவில்லை. விஞ்ஞானம் என்றதுமே அது ஏதோ மூடுமந்திரம் என்று கருதும் மனப்பான்மை கூட ஒரு காலத்தில் இருந்தது. மந்திர வித்தைகளோடும் பூத பைசாசங்களோடும் சேர்த்து எண்ணப்படக்கூடிய மர்மமான சங்கதியாகவே அது இருந்தது.

ஆனல், இன்று நிலைமையோ வேறு. காலம் மாறிவிட்டது. மக்கள்தம் மனப்பாங்குகளும் எவ்வளவோ மாறிவிட்டன. இன்று, பாலர் வகுப்பிலிருந்து பல்கலைக் கழகம் வரைக்கும் விஞ்ஞானக் கல்வியைத் தமிழிலே பெறும் வாய்ப்பு நம் ஈழத்துத் தமிழ்மாணவர்களுக்கு உண்டு. தமிழ்ப்பற்ருளர் எனப்படும் தி. மு. க. வினர் ஆளும் தென் தமிழ் நாட்டிலே கூட, இந்த வசதி தமிழ் மாணவர்களுக்கு இன்னும் வழங்கப்படவில்லை. இங்கு விஞ்ஞானக் கல்வி தாய்மொழி மூலம் நடைபெறுவதனுல், அக்கல்வி, நம் பண்பாடு — கலாசாரங்களுக்குப் புறம்பான ஒன்று — அன்னியமான ஒன்று — என எண்ணும் போக்கு எவ்வளவோ குறைந்து விட்டது. மனித குலம் முழுமைக்கும் பொதுவான உலகப் பெரு நிதியமே விஞ்ஞானம் என்ற உணர்வு பரிபூரணமாக எம்மிடையே இன்னும் உண்டாகிவிடவில்லையாயினும், ஓரளவுக்கேனும் அந்த உணர்வு அரும்பியிருக்கிறது. இந்த உண்மையை எவரும் மறுக்கத் துணியார்.

நமது மக்களின் வாழ்விலே விஞ்ஞான அறிவினையும், அதன் பிரயோகங்களையும் மட்டுமல்லாமல், விஞ்ஞான நோக்கினையும் பரவ விடுதல் அவசியமாகும். விஞ்ஞான நோக்கு என்பது என்ன? பௌதிக உலகின் தன்மையையும் அதன் இயக்க முறைமையையும், காரண காரிய நியாய வழிப்படி- தர்க்கரீதியாக, பகுத்தறிவுக்கு இசைய- நோக்கும் பழக்கமே அது. நடைமுறை உலகிலிருந்து கொள்கைகளையும் கோட்பர்டுகளையும் பிரித்தெடுப்பதோடு, அதே கொள்கைகளும் கோட்பாடுகளும் உலக நடைமுறைகளுக்கு முரணுகத் தோன்றினுல், அம் முரண்பாடுகளுக்கு விளக்கம் காண்பதும், முரண்பாடுகள் உண்மை எனில் ஏற்கெனவே உருவாக்கப்பட்ட கொள்கைகளையும் கோட்பாடுகளையும் புதுக்குவதும் இந்த விஞ்ஞான நோக்கின் பாற்படும். சுருக்கமாகச் சொல்வதானுல், செயல்களிலிருந்து எண்ணங்களை உருவாக்கி, அவ்வெண்ணங்களைத் துணைக்கொண்டு எதிர்காலத்துச் செயல்களை வழி நடத்தும் நோக்கே விஞ்ஞான நோக்கு எனலாம்.

இந்த விஞ்ஞான நோக்கினை மாணவர்களிடம் வளர்த்தெடுப்பதற்கு, கல்வியூட்டும் மொழியினை மாற்றுவது மட்டுமே போதியதன்று. ஆங்கிலத்திற் கற்ற கல்வி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யைத் தமிழிற் பெறுவதனுல் மாத்திரமே விஞ்ஞான நோக்கு வளர்ந்து விடாது. விஞ்ஞானம் என்பது வாழ்வின் சகல துறைகளிலும் வியாபித்துப்படரும் ஒன்று என்ற தெளிவை மாணவரிடத்து உண்டுபண்ணுதல் அவசியமாகிறது. இந்தத் தெளிவை உண்டு பண்ணுவதற்கு இடையூருன சில அம்சங்கள், கடந்தகாலத்துக் கல்வித் திட்டத்தில் இருந்தன. அந்த இடையூறுகளைக் களைந்தெறிவதே புதிய கல்வித் திட்டத்தின் பிரதான அம்சமாக உள்ளது எனலாம்.

கடந்த காலத்தில், எட்டாம் ஒன்பதாம் வகுப்புகளிலேயே விஞ்ஞானத்தை இரசாயனம், பௌதிகம், தாவரவியல், விலங்கியல், தூய கணிதம், பிரயோக கணிதம் என்றெல்லாம் பலபடப் பிரித்து அவ்வத் தனிச்சிறு பாடங்களின் ஒடுக்கமான வரம்புகளுக்குள்ளே நின்று சில தகவல்களை மாணவர்களின் தலைக்குட் புகுத்தும் நடைமுறையே வழக்கில் இருந்தது. மேற்படி தனிச்சிறு • பாடங்களுக்குப் பொதுவாக உள்ள அடிப்படைக் கோலமோ, அவற்றுக்கிடையிலுள்ள தொடர்புகளோ, வித்தியாசங்களோ மாணவர்களுக்கு உணர்த்தப்படுவதில்லை. இந்த நிலையில், மாணவர்களுக்கு ஊட்டப்பட்ட விஞ்ஞானக் கல்வி தனித்தனியாக ஒடுங்கிநிற்கும் செய்தித் துணுக்குகளாக — தகவல் தொகுதிகளாக அந்தரத்திலே தொங்கின.

ஆனுல், புதிய கல்வித்திட்டத்தில், விஞ்ஞானக் கல்வியைச் சிறு சிறு சிறப்புத் துறைகளாகப் பிரிக்கும் நிகழ்ச்சி, மிகவுயர்ந்த வகுப்புகளிலேதான் நடைபெறும். பத்தாம் வகுப்புக்குக் கீழ்ப்பட்ட பொதுக் கல்வி நெறியில், விஞ்ஞானம் ஓர் ஒருங்கிணைந்த தொடர்பியல் முழுமை பெற்ற பாடமாகக் கற்பிக்கப்படும். இங்ஙனம் செய்யும்போது, மற்றுமொரு பிரதான அம்சமும் கவனிக்கப்படும்.

பள்ளிப் படிப்புக்கும் தினசரிச் சமுதாயச் செயற்பாடுகளுக்குமிடையே இருக்க வேண்டிய நெருங்கிய சம்பந்தமே அந்த அம்சமாகும். இதுவரை காலமும் எங்கள் பள்ளிக்கூடங்களிற் பயிற்றப்பட்டு வந்த விஞ்ஞானக் கல்விக்கும் மக்களின் வாழ்க்கைக்குமிடையே நெருக்கமான நேரடிப் பிணைப்பு இருந்தது என்று சொல்லிவிடுவதற்கில்லை. ஆய்கூட அலுமாரிகளுக்குள் வைத்துப் பூட்டி முடக்கப்பட்டிருக்கும் சில சோதனைக் குழாய்கள், கண்ணுடிக் குடுவைகள், முகவைகள், வெப்பமானிகள் போன்ற சில உபகரணங்கள் சம்பந்தப்பட்ட விவகாரங்களாகவே விஞ்ஞான பாடங்கள் அமைந்தன. அதே ஆய்கூட அலுமாரிகளிலிருந்து எடுக்கப்படும் திராவகங்கள், தூள்கள், மருந்துகள் போன்றவற்றையே செய்முறை வகுப்புகளின்போது கையாண்ட மாணவர்களுக்கு, விஞ்ஞானம் என்பது ஆய்கூடத்தின் நான்கு சுவர்களுக்குள் அடங்கிய ஒன்று என்ற மனப்படம் உண்டானதில் வியப்பில்லை.

ஆனுல், புதிய கல்வித்திட்டத்தின்படி, விஞ்ஞானக் கல்வியை அணுகும் முறை முற்றிலும் வேறுபட்டதாய் அமையும். மாணவனின் சுற்றுடலுடன் நெருங்கிய பிணைப்புள்ள ஒன்ருக விஞ்ஞானப்பாட நெறி அமைக்கப்படும். ஈழத்தின் தேசிய மூலவளங்கள் பற்றியும், அவற்றின் இயல்புகள் பற்றியும் உணர்த்துவதுடன், இந்நாட்டில் இடம்பெறத்தக்க தொழில் விருத்தி வாய்ப்புகளுக்குத் துணை நிற்கும் வகையில் விஞ்ஞானக் கல்வியும் திசை திருப்பப்படும். புதியபாட விதானத்தில் தொழில் முன்னிலைக் கல்வி இடம்பெறுவது இத்தகைய மறுசீரமைப்புக்குப் பெரிதும் உதவியாகும். கல்வியின் மிகச் சிறந்த பலன் உத்தியோகம் பெறுதல் ஒன்றே என்ற மனப்பாங்கு விரிவடைந்து, 'நூதனமாய் நூதனமாய் வருவாய் ஈட்டும் நூறு விதத் தொழில்களை நாம் ஆற்றல் வேண்டும்' என்ற மனப்பாங்கு மலர்வதற்கும், அந்தத் தொழில்களையெல்லாம் திருந்திய முறையில் நெறிப்படுத்துவதற்கும், விஞ்ஞானக் கல்வி பேருதவி புரியும்.

இவ்வாறெல்லாம் திட்டமிட்டு நாம் விஞ்ஞானக் கல்வியினை அபிவிருத்தி செய்யும்போது, அந்த அபிவிருத்தி சமுதாயம் முழுவதிலும் விஞ்ஞான நோக்கினை விரிவாகப்பரப்பும் என நாம் எதிர்பார்க்கலாம். அந்நோக்கு விரிவடையும்போது, தேங்கி நிற்கும் பிற்போக்குச் சிறுமைகள் யாவும் பலமிழந்து ஆற்றல் குன்றும் அன்ருே! ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வியர்வை மணி சிந்தும் உயிர்க்கல்வி வேண்டும்!

எண்ணறிவைப் பெற்றிருந்தும் விஞ்ஞானத்தின்
ஏற்றமெலாங் கற்றுணர்ந்து மிலக்கியத்தில்
எண்ணுகை யிலினிக்கின்ற குறளின் பாவும்
இலக்கணமும் நன்காய்ந்தே யின்பங் கொஞ்சும்
பண்ணிசையும் பன்மொழியும் பயின்றுங் கல்விப்
பட்டங்கள் தாஞ்சுமந்தும் பயனுண்டாமோ?
மண்ணகத்துத் தொழிலறிவு மலராவிட்டால்
மற்றவைதா மேடெழுதுஞ் சுரைக்காய் போலாம்.

பல்கலையின் கழகத்தே பயின்று ரேனும்
பயிரிடவு முழுதிடவும் பட்டடைக் கண்
வல்லதொழி லியற்றிடவுந் தொழிலாளர் போல்
வாழ்ந்திடவு மறியாதார் வாழ்வு பாறைக்
கல்லிடையே புதைத்தவிதை போலாங் காண்மின்
கலைத்திறனு னுற்பத்தி பெருக்கத் தேடும்
நல்லறிவே யருஞ்செல்வம் ஏட்டுக் கல்வி
நமது தொழிற் கல்வியுட னிணைதல் வேண்டும்.

உயர்கல்வித் தரம்பெற்று ளுத்தியோகம்
ஒன்றேதான் மிகுபெருமை தகுதியென்போர்
அயலவரிற் றனிப்பிறவி தாமே யென்போர்
அறியாமை மனோபாவம் அகம்பாவங்கள்
பெயரவழி வகுப்பதுதான் கல்விப் பேறு
பெருமையெலாந் தொழின்மகிமை பேணிக்காத்தல்
வியர்வை மணி சிந்துமுயிர்க் கல்விமானே
விலைமதிக்க முடியாத நாட்டின் சொத்து.

அறம் பொருளோ டின்பசுக மனைத்துங் காண
அமலனடி தொழுதான்ம நலத்தைப் பேண
உறுங் கவலைக் குறுதுணைபெற் றுயர்வு தேட
உயர்வொன்றே தொழிலென்றே யுணர்ச்சி யோங்கப்
பிறந்தநிலப் பீடுலகு பேசிப் போற்றப்
பெறற்கரிய நிறைக்கல்வி பெற்று வாழ்வோம்
வெறும் புகழைத் துரும்பெனவே வெறுத்துழைப்பின்
வேந்தரென வாழ்ந்தழியா வெற்றிகாண்போம்!

யாழ். ஜெயம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ் மாவட்ட உடற்பயிற்சிப் போட்டி B பிரிவு—முதலிடத்துக்கான
வெற்றிக்கிண்ணம் பரிசுபெற்ற வீரர்கள் 1973

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ். வட்டார மெய்வல்லுநர்ப் போட்டியில்
பங்குபற்றிய வீரர்கள் 1973

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆக்கப்பணிக்கு விஞ்ஞானம்

ம. சி. பிரான்சிஸ்
ஆசிரியர், இந்துக்கல்லூரி, யாழ்ப்பாணம்

விஞ்ஞானம் எந்நாட்டவருக்கோ அல்லது ஒரு குழுவினருக்கோ சொந்தமானதன்று. சாதி சமய பேதங்களுக்கும் மனித சமூகங்களின் உயர்வு தாழ்வுக்கும் அப்பாற்பட்டதுவிஞ்ஞானம். ஒருஅரசியல்வாதி அல்லது ஒரு சமூகவாதி தான் ஒரு நாட்டவன் என்பதில் பெருமை கொள்ளக் கூடும். ஆனால் ஒரு விஞ்ஞானி தான் செய்யும் சேவையால் மனித சமுதாயம் முன்னேற வேண்டுமென்றே கருதுவான். தான் கண்டு பிடித்த தத்துவத்தால் மனித சமுதாயம் கஷ்டத்துக்குள்ளாக விரும்பமாட்டான். எனவே ஒருநாட்டிலுள்ள ஒவ்வொருவரும் விஞ்ஞான உண்மைகளை அறிவதுடன் விஞ்ஞான மனப்பாங்கைப் பெறுவதும் முக்கியமாகும்.

இலங்கையில் கல்வி விருத்தி மற்றைய கீழைத் தேசங்களிலும் பார்க்க முன்னேற்றமானதென்றே நாம் பெருமைப் படுகின்றோம். எமது நாட்டிலிருந்து ஒவ்வொரு வருடமும் நூற்றுக்கணக்கான படித்த அறிஞர்கள் வெளிநாடு சென்று பொருளும் பேரும் நமக்குத் தேடித்தந்துள்ளார்கள்.

கல்விக்கு அதிகமுக்கியத்துவம் கொடுக்கப்பட்ட போதிலும், கடிதம் எழுதவும் கணக்குக் கூட்டிக் கழிக்கவுமே இக்கல்வி மூலம் பெரும்பாலான மக்கள் பயன் பெற்றனர். இந்நிலைமையில் விஞ்ஞானக் கல்வியைக் கற்றோர் மிகச் சிலராகும்.

இலங்கையில் உயர் கல்விபடித்தவர்கள் ஆயிரத்தில் ஒன்றாகவே இருக்கும். இவர்களில் கணிசமானோர் விஞ்ஞானக் கல்வி பயின்றவராவர்.

விஞ்ஞானக் கல்வியைப் பயின்றவர்களின் ஒரு நோக்கம், மேற்பார்வை செய்யும் சொகுசான உயர் ஊதியம் தரும் வேலைகளைப் பெறுதலாகும். பயின்ற கல்வியை நாட்டின் உயர்ச்சிக்காக விவசாயத்திலோ உற்பத்தியைப் பெருக்குவதிலோ ஈடுபடுத்தவில்லை.

விஞ்ஞானத்தைக் கற்றவர்கள் மூட நம்பிக்கைகளைத் தகர்த்தெறியத் துணியவில்லை. வைத்தியர்களாகிய விஞ்ஞானிகள் தமது வாழ்க்கையில் சாதிப்பாகுபாட்டிலுள்ள நம்பிக்கையைக் கைவிட வில்லை. பௌதிக அறிவியலில் முன்னேறியவர்கள் நாட்பார்த்து நாளாந்த காரியங்களில் ஈடுபடுகின்றனர். கடவுள் ஒருவரே என நம்பியவர்கள்நாம். ஆனால் அதே கடவுளின் பேரால் ஒருவரை ஒருவர் தாக்கப் பின்நிற்கவில்லை. இத்தனையும் நமக்கு எதை எடுத்துக் காட்டுகின்றது? விஞ்ஞானக் கல்வி தொழிலுக்காக படிக்கப்பட்டது. ஆனால் முறையான மனப்பாங்கை ஏற்படுத்தவில்லை. மக்களின் சேவைக்கும் பயன்படுத்தப் படவில்லை.

விஞ்ஞானக் கல்வியின் முக்கிய நோக்கம் மக்களிடையே புதுமையான மனப்பாங்கை ஏற்படுத்துதலாகும். இம்மனப்பாங்கைப் பெற்ற மக்கள் தங்களுக்கும் தாம் புரியும் வேலையின் மேம்பாட்டுக்கும், தம் நாட்டுக்கும் புதிய வழியைத் தீட்டுவர்.

விஞ்ஞானக் கல்வி மக்களில் ஏற்படுத்த வேண்டிய மனப்பாங்குகளில் எதையும் சீர்தூக்கி ஆராய்ந்து செய்வதும், மக்களின் நாளாந்த வாழ்க்கையில் விஞ்ஞானத்தைப் புகுத்தி ஈடுபடும் தொழில்களை அல்லது செய்யும் கருமங்களைச் சீராகச் செய்வதும், தனி ஒருவரின் நன்மை கருதாது பலரின் நன்மையை அடிப்படையாக வைத்துச் செயல் புரிவதுமாகும். கமச்செய்கை, விலங்குவளர்ப்பு முதலியவற்றை இலாபகரமாகச் செய்வதும், தனதும் பிறரினதும் உடனலத்தை காக்கும் வழிகளைப்பின்பற்றுவதுமாகும். உதாரணமாக எமது நகரங்களில் விநியோகிக்கப்படும் நன்னீர் குடிநீருக்கு அல்லாத பல தேவைகளுக்கு விரயமாக்கப்படுவதைத் தெருவோரங்களில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காண்கிறோம். வைத்திய சாலைகளில் அனுமதிக்கப்படும் பிள்ளைகள் பெரும்பாலானோர் வயிற்றோட்டம், நெருப்புக்காய்ச்சல், போஷாக்கில்லா உணவின்விளைவு முதலிய தடுக்கக்கூடிய நோயினால் பீடிக்கப்பட்டுள்ளனர். படித்த பெற்றோர்கூடப் பிள்ளைகளுக்கு தடுப்புமருந்து கொடுக்கத் தவறுகின்றனர்.

எமது அன்றாட வாழ்க்கையில் பல மூடநம்பிக்கைகளும் மலிந்து கிடக்கின்றன. கனத்த நாட்களில் மழை பெய்யும்; வியாழக் கிழமைகளில் ஒரு வீட்டுக்குச் செல்பவர் பானம் பண்ணுதல் கூடாது; என்பனபோன்ற கொள்கைகள் எம்மிடையே வழக்கத்திலுள்ளன. யாராவது மறுதலையாக இதை ஆராய்வதுண்டா? மழை பெய்யும் நாட்களெல்லாம் கனத்த நாட்களா? சண்டையிட்டுக் கொண்ட குடும்பங்களெல்லாம் வியாழக் கிழமையில் பானம் அருந்தினார்களா?

இது போன்று ஏராளமான மூடக் கொள்கைகள் எமது வாழ்க்கையில் பின்னிப் பிணைந்து கிடக்கின்றன. இவற்றைக் களைந்தெறிந்து சிந்தித்து தொழிலாற்றும் ஆற்றல் நமக்கு வேண்டும். புதிய விஞ்ஞானக் கல்வித் திட்டத்தின் முக்கிய நோக்கம் மேற்கூறியவற்றை வாழ்க்கையில் புகுத்துமுகமாக விஞ்ஞான உண்மைகளைச் சிந்தித்துக் கண்டு பிடிக்கும் வழிகளை மாணவர்கள் மனத்தில் பதிப்பதாகும். இம்மனப்பாங்கை ஏற்படுத்தல் ஆசிரியர்களின் கடமையாகும். சோதனையில் புள்ளிகளை மாணவர்கள் பெற வேண்டுமென்பதற்காக கேள்விக்கு விடையாக விஞ்ஞானத்தைப் படிப்பித்தால் விஞ்ஞான மனப்பாங்கை ஏற்படுத்துவதற்குப்பதிலாக மழுங்கிய சிந்தனையே கிடைக்கும்.

புதிய விஞ்ஞானக் கல்வி இதைத் தரும் என நாம் எதிர்பார்க்கும் வேளை, பாட அபிவிருத்திக் குழுவினரின் செயல்களை நாம் அப்படியே ஏற்றுக்கொள்ள முடியாத நிலையும் உண்டு. ஒரு பழைய கேள்வியைத் திரும்பக் கேட்கின்ற நிலை ஏற்படுகின்றது.

பாடத்திட்டத்திற்காக மாணவர்களா, அல்லது மாணவர்களுக்காகப் பாடத் திட்டமா?

இலங்கையிலுள்ள ஆயிரக்கணக்கான மாணவர்களை ஒரே தரமுள்ளவர்களாகக் கருதி ஒரேவிதமான பாடத்திட்டத்திற்கு உட்படுத்துவது முற்போக்கான செயலாகாது. மாணவர்களின் விவேகத்திற்கேற்ப குறைந்தது மூன்று தரப்படுத்தப்பட்ட பாடத்திட்டம் அவசியமாகும். பல ஆசிரியர்களின் கருத்தும் இதுவாகும். 6-ம் 7ம் வகுப்பில் புகுத்தப்பட்ட சில விஞ்ஞான உண்மைகள் பல மாணவர்களின் சிந்தனைக்கு அப்பாற்பட்டதாகும். உபகரணங்களும் பயிற்றப்பட்ட ஆசிரியர்களும் இல்லாக் குறை வேறு. எனவே அரசினர் எதிர்பார்க்கும் நோக்கம் கைகூடுமா என்பது கேள்விக்குரியதாகும். நாம் படித்தோம் நாம் வெற்றி கண்டோம் என்று தன்னம்பிக்கையுடன் சொல்லக்கூடிய மாணவர்களை நாம் உருவாக்கினால், நாம் எதிர்பார்த்த பலன் கிடைத்ததெனப் பெருமைப்பட முடியும். ★

'அன்ன சத்திரம் ஆயிரம் வைத்தல்
ஆலயம் பதினாயிரம் நாட்டல்
அன்ன யாவினும் புண்ணியம் கோடி
ஆங்கோர் ஏழைக்கு எழுத்து அறிவித்தல்'

—பாரதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பின்தங்கிய மாணவர்கள்

எம். எம். மன்சூர்
கல்வி அதிகாரி

படிப்பித்தற்றொழிலைப்பற்றிப் பொதுவாக இரண்டு கருத்துக்கள் நிலவி வருகின்றன. என்ன பாடத்திலேனும் ஒருவனுக்குப் பாண்டித்தியமிருப்பின் அவன் ஆசிரியனாகிவிடலாம் என்பது ஒரு கருத்து. படிப்பித்தல் ஆற்றல் ஒருவனுடன் கூடப்பிறந்த தாகையால் ஆசிரியர்கள் ஆசிரியர்களாக சிருஷ்டிக்கப்பட்டார்களேயொழிய, அவர்கள் காலப்போக்கினால் சிறந்த ஆசிரியர்களாகவில்லை என்பது இரண்டாவது கருத்தாகும்.

இவ்விரு கருத்துக்களையும் இப்பொழுது ஏற்றுக்கொள்வதற்கில்லை. உளநூல் ஆராய்ச்சியின் முக்கிய நோக்கமே ஆசிரியர்களைச் சிறந்த ஆசிரியர்களாக்குவதும் அவர்கள் படிப்பித்தலினால் மாணவர்கள் பூரண நன்மையை அடையச் செய்வதுமாகும். எனவே, ஓரளவு உளநூலை அறிந்து கொண்ட ஆசிரியன் அதை அறியாத ஆசிரியனிலும் பார்க்கச் சிறந்த ஆசிரியனாகி விடுகின்றான். ஆசிரியனாகவுள்ளவன் மனித உள்ளத்தின் தன்மை, மாணவனின் தன்மை, மாணவர்களிடையே காணப்படும் பலதரப்பட்ட ஏற்றத் தாழ்வுகள் முதலியனவற்றை அறிந்து கொள்வதனால் அவன் இன்னும் மேம்பாடுடைய ஆசிரியனாகிவிட முடியும் என்று கூறுவதே மிகப் பொருத்தம்.

பொதுவாக உலகிலுள்ள நாடுகளெல்லாம் இளஞ்சிறார்களுக்குக் கல்வி புகட்டப்பட வேண்டியதை அரசின் ஒரு அடிப்படைக் கொள்கையாக ஏற்றிருக்கின்றன. அத்தோடு கல்வியை சமத்துவப்படுத்துவதாயிருந்தால் (*Democratisation of Education*) ஒவ்வொருமாணவருக்கும் அவரவர் இயல்புக்கேற்ற, அவரவர் தன்மைக்கேற்ற கல்வியைப் புகட்டவேண்டும். (*The Right Education for the Right child.*) அப்படியாயின் ஆசிரியன், வகுப்பறையில் மாணவர்களுக்கிடையே காணப்படும் பலதரப்பட்ட வித்தியாசங்களை நன்கு உணர்ந்து கொள்ளவேண்டும். மாணவர்களின் வயது அந்தந்த வயதுக்கான விசேட தன்மைகள், தான் கற்பிக்கவிருக்கும் மாணவர்களின் குணதிசயங்கள், மனோபாவங்கள், அவர்களிடையே உள்ள மற்றும் தனிப்பட்ட வித்தியாசங்கள் போன்றவற்றையெல்லாம் நன்கு அறிந்திருத்தல் வேண்டும்.

இவற்றையெல்லாம் உணர்ந்த பிற்பாடே ஆசிரியர்கள் படிப்பித்தல் முறைகளை அதற்கேற்றவாறு அமைத்துக் கொள்ள வேண்டும். ஒரு வகுப்பறை இக்காலத்திலே 35-45 மாணவர்களைக் கொண்டதாயிருக்கின்றது. அவ்வளவு மாணவர்களையும் ஒரு வகுப்பைச் சேர்ந்தவர்கள் என்ற அடிப்படையிலே வைத்து அவர்களுக்குக் கல்வி புகட்டினாலும் அவர்களில் ஒவ்வொரு மாணவனும் தனித்துவம் வாய்ந்தவன், தனித்தனி இயல்புகள் உடையவன் என்பதை ஆசிரியர் மறந்து விடலாகாது. இதன் காரணத்தினாலேயே மாணவர்களில் சிலர் முன்னேற்றமாயிருப்பதையும், சிலர் பின்தங்கியிருப்பதையும் காண்கிறோம். பொதுவாகப் பின் தங்கிய மாணவர்களுக்கு ஆசிரியர்கள் 'மடையன்', 'மட்டி', 'மூடன்', என்றெல்லாம் மற்றைய மாணவர்கள் மத்தியில் நாமஞ் சூட்டி அவர்களுக்குத் தாழ்வு மனப்பான்மையை ஏற்படுத்திவிடுவதுமல்லாமல் அவர்களது வாழ்நாள் முழுவதற்குமே பங்கம் ஏற்படுமளவிற்குச் செய்தும் விடுகிறார்கள்.

மாணவர்களிற் சிலர் பின்தங்கியிருப்பதற்குப் பல காரணங்களைக் கூறலாம்.

1. பிறந்தது முதல் சில முக்கியமான மூளை நரம்புகள் (*Cortieal Connections*) போதியளவு விருத்தியடையாமை. இது ஒரு இயற்கையான காரணம். ஆனால் இக்குறை மிகச் சிலரிலேயே காணப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. எல்லா மாணவர்களது சூழலும் உற்சாகமுள்ளதாக அமைவதில்லை. வாழ்க்கை வசதிகள் குறைந்த சூழலில் பிறக்கும் மாணவர்கள், வாழ்க்கை வசதிக்குறைவினாலும், படித்தவர்கள் மத்தியில் வளரும் வாய்ப்பின்மையாலும், பல புதிய கருத்துக்களையோ, சிந்தனைகளையோ, அனுபவங்களையோ பெற்றுக்கொள்ளும் சந்தர்ப்பக் குறைவினாலும், வசதியான சூழலில் பிறந்த மாணவர்களிலும் பார்க்க குறைவாக இருக்கின்றனர். சேரிகளில், குச்சு வீடுகளில் இருளுக்கும், அறியாமைக்கும் மத்தியில் பிறந்து வாழும் மாணவர்களுக்கு துடிப்புள்ள உற்சாகமுள்ள சூழல் எவ்வாறு கிட்ட முடியும்?

3. பெற்றோர் மத்தியில் கல்வியில் ஆர்வமும், தம் பொறுப்பென்ன, மாணவர் கடமை என்ன என்பவற்றைப் புரிந்து கொள்ளும் தன்மையில்லாமையாலும், பொருளாதாரக் கஷ்டமும் சில சந்தர்ப்பங்களில் தம் பிள்ளைகளே தமக்கு அன்றாடத் தொழிலில் உதவ வேண்டிய நிலையில் மாணவர்களைப் பாடசாலைக்கு ஒழுங்காக அனுப்ப முடியாமலிருக்கும் காரணங்களும் மாணவர்களில் சிலர் பின் தங்குவதற்குக் காரணமாகும்.

4. தவிர்க்க முடியாத காரணங்களினாலும், பெற்றோரது தேவையின் பேரிலும் சில மாணவர் அடிக்கடி வீடு வாசல் மாறுவதால், பாடசாலையும் மாறவேண்டி ஏற்படுகின்றது. இதனால் சிலமாணவர்களின் கல்வி தொடர்பற்றதாகி விடுவதையும் அம்மாணவர் பின்தங்கும் நிலையை அடைவதையும் உருவாக்குகின்றது. ஒரு அனுபவம் குன்றிய மாணவன் அடிக்கடி தன் சூழலை, தன் ஆசிரியர்களை தான் கூடித்திரியும் நண்பர்களை இழந்து புதுப்புது முகங்கள் மத்தியில் பழகப் பல மாதங்கள் செல்லுவதால், அவ்விடைப்பட்ட காலங்களெல்லாம் அவனுக்கு வீழ்ச்சியான காலங்களாகி விடுகின்றன.

5. ஆசிரியனது படிப்பித்தல் முறை கவர்ச்சியானதாக, மாணவர்கள் யாவரது கவனத்தையும் ஈர்க்கவல்லதாக அமையாவிடத்தும் சில மாணவர்களது முன்னேற்றம் தடையாகிவிடும். எல்லாமாணவருக்கும் ஒரே போதனாமுறை எதிர்பார்த்த பலனைக் கொடுப்பதில்லையே.

6. எழுத்து, வாசிப்பு, எண் ஆகிய அடிப்படைப் பாடங்களை மாணவர் உளவளர்ச்சியடையாதநிலையில், மிகச் சிறிய வயதிலே, அவர்களது சக்திக்கு மீறிய நிலையிலே புகுத்தியமையால் மாணவர்கள் வளர வளர அதன் தாக்கத்தினால் பின்தங்குகின்றனர் என்பதும் ஒரு காரணமாகும்.

7. சமூக, பொருளாதாரச் சூழல் வசதியற்றதாக அமையுமிடத்துக்கூட மாணவர் பின்தங்கியவர்களாவதைக் காணலாம். வறுமையினால் வயிறு வாடிய உடல் நிலை குன்றிய மாணவனுக்குக் கல்வியில் ஆர்வமும் ஊக்கமும் எவ்வாறு ஏற்படமுடியும்?

8. பாடசாலைக்கும் பெற்றோருக்கும் நெருங்கிய தொடர்பும் பூரண விளக்கமும் நிலவாவிடத்தும், பிள்ளைகளின் முன்னேற்றம் தடைப்படலாம். ஆசிரியர் தமக்கு இசைவில்லாத பெற்றோரது பிள்ளைகளைப் புறக்கணிப்பதும், அவர்களில் கடினமாக நிற்பதும், அதே வேளையில் தமக்குப் பிரியமுள்ள பெற்றோரதுபிள்ளைகளில் அதிக அக்கறை காட்டுவதும் நாமறிந்ததே. இவற்றையெல்லாம் மாணவர் புரிந்து கொள்ளாமலல்ல. மாணவர்கள் அறிய வேண்டுமென்றும் அதைப் பெற்றோர்களுக்கு அறியக் கொடுக்க வேண்டுமென்றும் செயல்படும் ஆசிரியரே நம்மிற் பலர். இதனால் பாதிக்கப்படும் மாணவர்கள் தன்னம்பிக்கை இழந்து தோல்வி மனப்பான்மையுடன் படிப்பில் பின் தங்க வேண்டிய நிலைக்காளாகிவிடுகின்றனர்.

9. மாணவர்களில் சிலர் செவிப்புலனும் கட்புலனும் பேச்சுவன்மையும் குறைந்தவர்களாயிருப்பதாலும் பின்தங்கியவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களாயிருக்கின்றனர். இவற்றை யுணர்ந்து ஆசிரியர் தக்க பரிகாரம் தேடாவிடத்தும் மாணவர் பாதிக்கப் படுவர்.

10. சில மாணவரது உணர்ச்சி நிலையும் அவர்களது கல்வி விருத்திக்குத் தடையாயிருக்கும். அச்சம், அதிர்ச்சி, பகற் கனவுகாணுதல், வகுப்பில் தனியே ஒதுங்கி இருந்து மௌனம் சாதிக்கும் நிலை போன்ற உணர்ச்சிக்குழப்பங்கள் சில மாணவர்களில் இருப்பதால், இவை அவர்களின் கல்வி முன்னேற்றத்தைப் பாதிக்கின்றன.

11. மாணவர்கள் பாடசாலையிலும், பாடங்களைப்படிப்பிக்கும் ஆசிரியர்களிலும் காட்டும் மனோபாவமும் அவர்கள் பின்தங்கிய நிலையில் இருப்பதற்கும் காரணமாகின்றது. ஒரு ஆசிரியரின் தோற்றத்தையும், அவரின் குணாதிசயங்களையும் வெறுக்கும் ஒரு மாணவன் அவ்வெறுப்புக்களையெல்லாம் அவ்வாசிரியன் படிப்பித்துவரும் பாடங்களிலோ, பாடத்திலோ செலுத்தி விடுகின்றான். இதன் காரணத்தினால் அவன் அவ்வாசிரியரது பாடங்களில் பின்தங்கி விடுகின்றான்.

மேற்கூறியனவற்றிலிருந்து மாணவர் தவிர்க்கமுடிந்த, தவிர்க்க முடியாத சில காரணங்களினால் பின்தங்கியிருக்கின்றனர் என்பது தெட்டத்தெளிவாகும்.

இவற்றையெல்லாம் உணர்ந்து ஆசிரியர்கள் மாணவர்கள் தன்மைக்கேற்ப படிப்பித்தல் முறைகளை, வகுப்பறை அமைப்புகளை அதற்கேற்றவாறு அமைத்து தனித்தனியே மாணவர்மீது கருணையோடு சேர்ந்த அக்கறை காட்டுமிடத்து பின் தங்கிய மாணவர்களையும் ஓரளவு நல்ல நிலைக்குக் கொண்டுவரலாம். புதிய கல்விக் கோட்பாட்டின்படி மாணவன்தான் மையமாகின்றான் என்பதை மறந்து விடலாகாது. (*Child Centred Education*) ✱


சுவை இருப்பின்
நண்பர்களிடம் கூறுக.
குறை இருப்பின்
எம்மிடம் கூறுக!

சுவையான சிற்றுண்டி வகைகளுக்கும்
உணவு வகைகளுக்கும்
சிறந்த இடம்

மலாயன் கபே

36-38, பெரிய கடை, யாழ்ப்பாணம்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாறி வரும் கல்வி முறை

எனதருமைத் தாயகத்தில் இருந்து வந்த கல்வி முறை
எனது அயலில் உள்ளவரை எவ்வாறு பாதித்து
எத்திசையில் வளர்ந்தெழுந்து இசகு பிசகு ஆனதென்றும்
இனிமேலும் எவ்வழியில் இது வளரப் போகுதென்றும்
என்னுள்ளே சிந்தித்தேன், இனம் கண்டேன் பரிணுமம்.

என்னுடைய கிராமத்தில் இரண்டே பள்ளி
இன்றைக்கு முப்பத்து இரண்டாண்டின் முன்
என்னுடைய கிராமத்தில் இரண்டே பள்ளி
இரண்டுமே தமிழ்ப்பள்ளிக் கூடம் ஆகும்.

ஒரு பள்ளிக் கூடத்தில் உயர்ந்த சாதி,
நான் படித்த பள்ளியிலோ பலரும் உண்டு.
என்னுடைய ஐயா ஓர் தலைமை வாத்தி,
என்றதொரு காரணத்தால் இளமை நாளில்
ஆரம்பக் கல்விக்காய் அரிவரிக்காய்,
ஐயாவின் வேட்டியினை இறுகப்பற்றி
அழுதழுது திரிந்ததனை எண்ணிப் பார்ப்பேன்.

அரசனுடன் ஆண்டியினை அருகில் வைக்கும்
அரிய கல்வி மகிமையினைக் கதையாய்க் கேட்டேன்.
"சரி இதில்லை", என்பதற்கு சாட்சியாக
எமதுலகம் இயங்கியதை அன்றே கண்டேன்.

என்னுடைய வகுப்பினிலே முதலாம் பிள்ளை
எப்பொழுதும் பறைக்குட்டி பேரன் தானே.
அப் பொடியன் அன்றிருக்கத் தனியாய் ஸ்ரூலும்
அதற்காக ஓரிடத்தில் ஒதுக்கி வைத்தார்.
இதைத் தாண்டி இரண்டொருவர் ஏறிப் போனுர்
என்றளவில் அன்று கண்டேன் எங்கள் கல்வி.

வெள்ளையனின் ஆட்சியிலே விரைந்து முந்தி
வெள்ளை உடை உத்தியோகம் வேண்டி வேண்டி
இங்கிலீசு படிக்க என எங்கள் முன்னேர்,
வெண்ணீறு நெற்றியிலே எச்சில் பூசி
வெளிவேஷம் போட்டார்கள் சில பேரென்றும்
தம்முடைய சமயமதை மாற்றிக் கொண்டு
பாதிரிகள் முன்பின்னுய்த் திரிந்தார் என்றும்
எத்தனையோ பழங்கதையும் அறியலானேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படித்தவர்கள் ஒரு சிலரே வாக்குப் போடும்
உரிமையுள்ள பழங் காலம்; அன்றே என்றால்
பணமுடையோர் படித்தார்கள், பதவி பெற்று
உயர்வுடையோர் தாம் எனவும் உயர்ந்து கொண்டார்.

இலவசமாய்க் கல்வி வந்த காலத்தோடு
எம்முடைய பள்ளிகளின் இயல்பைக் கேட்டால்,
கல்வி வசதிகள் பல்கிப் பெருகிடக்
காற்சட்டை போட்டனர் போட்டியிட்டு.

"இப்பொழுது சிலநாளாய் எங்கள் றேட்டில்
இனம் புரியாச் சில பேர்கள் உலவுகின்றார்.
சிக்காராய் வெள்ளுடையிற் சைக்கிள் ஓடிச்
சிரித்து உலவும் ஒரு வாத்தி கனகன் வீட்டு
நளக்குடிக்கு மருமோனாய் வந்ததாலே
நாங்கள் எல்லாம் 'பவர்' குறைவாய் நலிந்து போனோம்"
என்று எங்கள் ஊரிலுள்ள சாதி வாத்தி
அப்பொழுதும் புறுபுறுத்தே புலம்பி நின்றார்.

இப்பொழுதோ,

நான் பெரிது நீ சிறிது என்று பேசும்
நகர நிலை பொடி படவோர் நிலைமை தோன்றி
அவர் இவர் என்றில்லாமற் கல்வி கற்றோம்.
ஆனாலும் நிறைவு எமக்குக் கிடைக்கவில்லை.

ஆங்கிலேயன் வகுத்து வைத்த கல்வித் திட்டம்
அணுவளவும் நிசவுலகில் இசைவாய் இல்லை.
தேங்கியுள்ள பட்டங்கள் பூண்ட பின்னர்
தெருத்தெருவாய்த் தொழில்கள் இன்றித் திரிகின்றோமே.

நாட்டிலுள்ள நல்ல வளம் கூட்டி ஆக்கி
நன்னிறைவைக் காண உழைத்து உய்ய வேண்டின்
ஏட்டிலுள்ள எமது கல்வி முறையை மாற்றிக்
காட்டிடுவோம் புதிய கல்வி நெறியிற் சென்றே
ஆக்கிடுவோம் புதிய பல பண்டம் தேடும்
அரிய தொழிற் கல்விமுறை; அதனோடொட்டிப்
புதியதொரு கல்வி நெறி வகுத்த நாங்கள்
புதுயுகத்தை உடன் இனிமேல் இணைக்க வேண்டும்.

இ. சிவானந்தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் வளர்த்த கிறிஸ்தவத் தொண்டர்கள்

சங். சகோதரி புஷ்பம்
ரஃபாயல் கன்னியர் மடம், யாழ்ப்பாணம்

உலகிலே காலத்துக்குக் காலம் பல மொழிகள் தோன்றுகின்றன. வளர்கின்றன. இறுதியில் சில எழுத்து மொழியாக மட்டும் நிற்கின்றன. சில அருகிப் போகின்றன. ஆனால் திராவிடமொழிக் குடும்பத்தைச் சேர்ந்த திருந்திய மொழியாகிய தமிழ்மொழி,இனிமை, மென்மை, எளிமை, தூய்மை, வாய்மை, முறைமை, தனித்தியங்கும் வன்மை, தொன்மை என்பவற்றுடன் என்றும் இளமை குன்றாது பொலிவுடன் திகழ்கின்றது. இதற்குக் காரணம் தமிழ்மீது பற்றுடைய பண்டைத் தமிழர் மட்டுமல்ல, தம்மை இறைவனின் வாழ்க்கைக்கென அர்ப்பணித்துக் கடல் கடந்து இறையரசைப் பரப்புவதற்கெனத் தமிழகம் வந்தடைந்த பிறநாட்டுக் கிறிஸ்தவ சமயத் தொண்டர்கள் தமிழுக்குச் செய்த அரும்பெரும் தொண்டுகளுமே காரணம் என ஐயமின்றிக் கூறலாம். அவர்கள் தமிழைத் திறம்படக் கற்றுத் தோய்ந்து, அதிலே இன்புற்று அதன் வளர்ச்சிக்குத் தொண்டு செய்து புகழ் பெற்றுத் தலைசிறந்து விளங்கியமைக்குப் பல வரலாறுகள் சான்று பகர்கின்றன.

இத்தாலி தேசத்தைச் சேர்ந்த தகஸ்கனி மாகாணத்தின் ஓர் உயர்ந்த பிரபுகுடும்பத்தில் பிறந்த றொபேட் டி நோபிலி என்னும் குரவர் தமிழன்னையின் வளர்ச்சிக்குத் தொண்டாற்றி அவளை அணிசெய்ய முன்வந்தார். தமிழிலே உரைநடை நூல்களின்றி இலக்கணம், இலக்கியம், நிகண்டு, சோதிடம், மருத்துவம் முதலிய எல்லா நூல்களும் செய்யுளிலே இயற்றப்பட்டு வந்த அக்காலத்தில், பல உரைநடை நூல்களைத் தமிழில் இயற்றித் தமிழின் வளர்ச்சிக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்துள்ளார். இவர் ஞானோபதேச காண்டம், மந்திரமாலை, ஆத்தும நிர்ணயம், தூஷண திக்காரம், சத்தியவேத லக்ஷணம், சகுண நிவாரணம், பரம சூட்சுமாபிப்பிராயம், கடவுணிருணயம், புனர்ஜென்ம ஆட்சேபம், நித்திய ஜீவன் சல்லாபம், தத்துவக் கண்ணாடி, யேசுநாதர் சரித்திரம், தவசுச்சதம், ஞான தீபிகை, நீதிச்சொல், அநித்திய நித்திய வித்தியாசம், பிரபஞ்ச விரோத வித்தியா வித்தியாசம், தமிழ் போர்த்துக்கீச அகராதி ஆகிய பதினெண் நூல்களை இயற்றித் தமிழிலே உரை நடையை ஊக்குவித்தார்.

இவரையடுத்துக் கற்றவர்களேயன்றி மற்றவரும் தமிழ்ப்பதங்களை எளிதாக உணருவதற்கு மேல்நாட்டு அகராதியே சிறந்தது எனக் கருதிய வீரமாமுனிவர் பண்டை நிகண்டுகளில் அமைந்த பதங்களை வரிசைப்படுத்திச் சதுரகராதி என்னும் அரியதோர் நூலை வெளியிட்டு, அகராதியின் தந்தை எனப் போற்றப்படுபவரானார். திருக்குறளின் தெள்ளிய நயமும், சிந்தாமணியின் செழுஞ்சுவையும், கம்பராமாயணத்தின் கவியின்பமும் தோன்றப் பல நூல்களை ஆக்கித் தமிழ்த்தாயை அழகுபெறச் செய்தார். தேம்பாவணி தமிழன்னையின் மார்பில் வாடாத மாலையாகத் திகழ்கின்றது. காவலூர்க் கலம்பகம் கதம்ப மாலையாகக் காட்சியளிக்கின்றது. தொன்னூல் பொன்னூலாக இலங்குகின்றது. சதுரகராதி முத்தாரமாக மிளிர்கின்றது. இவற்றுடன் நின்றுவிடாது குற்றெழுத்துக்கும் நெட்டெழுத்துக்குமிடையில் வேறுபாட்டை உணர்த்திவைத்தார். மேலும் அடைக்கலமாலை, கலிவெண்பா, அன்னை அழுங்கல் அந்தாதி, கித்தேரியம்மாள் அம்மானை முதலிய செய்யுள் நூல்களையும் வேதியர் ஒழுக்கம், வேத விளக்கம், பேதகமறுத்தல், ஞானம் உணர்த்தல், திருச்சபைக் கணிதம், வாமன் கதை, பரமார்த்த குரு கதை போன்ற வசன நூல்களையும் இவர் இயற்றித் தமிழன்னையை அழகுசெய்த பெருமையைத் தனதாக்கிக் கொண்டார்.

தமிழன்னை தன்னகத்தே கொண்டிருந்த கலைச்செல்வங்களை மேலை நாட்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டார்க்குக் காட்டிய பெருமை போப்பையரையே சாரும். நீதிநூல் வகையில் சிறந்து விளங்கிய திருக்குறளையும் நாலடியாரையும் ஆராய்ந்து, நன்ருக மொழிபெயர்த்து ஆங்கிலத்தில் வெளியிட்டார். படித்தோர் மனத்தை உருக்கிப் பத்தியை விளைவிக்கும் பான்மையில் ஒப்பற்ற நூலாக விளங்கிய திருவாசகம் என்னும் அருள்நூலையும் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து அருங்கலைவாணர் என்னும் பரிசிலையும் பெற்ருர்.

''நான் இந்தியருள் ஒருவனுகிவிட்டேன்'' எனக் கூறிப் பெருமையடைந்த கால்டுவெல் ஐயர் திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் என்னும் நூலை ஆங்கிலத்தில் எழுதி, அம்மொழிகளின் பழமையையும் பண்புகளையும் மேலை நாட்டார்க்குச் செப்பமாகக் காட்டித் திராவிட மொழிக்குப் புத்துயிர் அளித்தார். நற்கருணைத் தியானமாலை, தாமரைத் தடாகம் என்னும் நூல்களையும் ஞானஸ்நானம், நற்கருணை என்னும் நீண்ட கட்டுரைகளையும் தமிழில் எழுதி வெளியிட்டிருக்கிருர்.

•

பல ஏட்டுச் சுவடிகளைத் தேடிச் சேர்ப்பதில் அபிலாஷை கொண்டிருந்த எல்லிஸ் துரையவர்கள் தமிழ் நூல்களை அழியாவண்ணம் காப்பாற்றியமையோடு வீரமாமுனிவரின் வாழ்க்கை வரலாற்றினைத் தமிழிலும், ஆங்கிலத்திலும் எழுதினுர். இராமச்சந்திரக் கவிராயரின் கல்வித்திறமையைப் புகழ்ந்து ஒரு பாடலும் பாடியிருக்கிருர். தமிழ் மொழிக்குப் பேச்சாலும், எழுத்தாலும் பெருந்தொண்டு புரிந்தவருள் இரேனியுசும் ஒருவராவர். தமிழிற்றேர்ந்த அறிஞன் எனப் புகழப்பட்ட இவர், தமிழிற்சொற்பொழிவு நிகழ்த்துவதில் நாவன்மையும், நூல் எழுதுவதில் கைவன்மையும் பெற்று, பிழையற்ற தெளிவான தமிழ்நடையில் பல நூல்களை இயற்றியிருக்கிருர். தன்னேரிலாத தமிழ் வேத நாயகன் என்னும் பெருமைப்பெயர் பெற்ற வேதநாயகம்பிள்ளை, பிரதாப முதலியார் சரித்திரம், ஞான சுந்தரி என்னும் நாவல்களையும், சத்திய வேத கீர்த்தனை என்னும் இசைப்பாட்டினையும் இயற்றியுள்ளார். கிறிஸ்துநாதர் பெருமையை விளக்கும் பெருங்காவியமாகிய இரட்சணிய யாத்திரிகமும், அவரைப் போற்றி மனமுருகுதற்கேற்ற திருப்பாசுரங்களும் இயற்றித் தமிழ்நாட்டார்க்குத் தொண்டு செய்தார், கவிஞர் கிருஷ்ண பிள்ளை. ஞானதீபக் கவிராயர் என்ற பட்டத்தைப் பெற்ற வேதநாயக சாஸ்திரியார் அவர்களும், சென்னபட்டணப்பிரவேசம் என்னும் நாடகத்தை எழுதினுர். மேலும் பெர்ஸிவல், தெட்லர், கிளார்க், ராட்லர், உவின்ஸ்லோ, துரு போன்ருேரும் தமிழ் வளர்ச்சிக்குத் துணை புரிந்த மதப் போதகராவர்.

தமிழ்மொழியின் வளர்ச்சிக்கு ஐரோப்பிய கிறிஸ்தவ சமயத்தொண்டர்கள் மட்டுமல்ல. தமிழ்ப்புலமை வாய்ந்த நம் நாட்டுக் கிறிஸ்தவர்களும் அரும் பெரும் தொண்டாற்றியிருக்கின்றனர். அந்தோனிக்குட்டி அண்ணுவியார் யேசுநாதர்மீது பல பாடல்களைப் பாடியிருக்கிருர். அரிகிருஷ்ண பிள்ளை இரட்சணியயாத்திரிகம் என்னும் காவியநூல் இயற்றியுள்ளார். இன்பகவி முத்துக்கிருஷ்ணு என்பவர் மேல் குறவஞ்சி நாடகம் இயற்றியுள்ளார். கனகசபைப் புலவர் அழகர் சாமிமடல், திருவாக்குப் புராணம் முதலிய நூல்களை இயற்றியுள்ளார். சதாசிவம்பிள்ளை மெய்வேதசாரம், திருச்சதகம், நன்னெறி மாலை, நன்னெறிக்கொத்து, சத்பேர்தசாரம், இல்லற நொண்டி போன்ற பல நூல்களை எழுதியுள்ளார். இன்னும் பவர் ஐயர், சற்குணம் உவின் பிரேட், சாமுவேல் பவுல், சிதம்பரப்பிள்ளை, நயனப்ப முதலியார், பிலிப்பு—தெ-மெல்லோ, முத்துசாமிப்பிள்ளை, வித்துவான் சாமிநாதபிள்ளை, வேதநாயகம் பிள்ளை, வேதநாயகசாஸ்திரி, சாமுவேல் பிள்ளை, போன்ருேரும் தமிழ் மொழியில் பலநூல்களை எழுதி, தமிழின் வளர்ச்சிக்குத் தொண்டாற்றியுள்ளனர்.

ஆகவே கிறிஸ்தவமதம் தமிழ் மொழிக்காற்றிய தொண்டினைக் கண்டு நாம் பெருமை கொள்வதோடு நில்லாது, நாமும் தமிழை வளர்க்க முன்வருவோமாக. ★




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விடிவெள்ளி ஆகிடுவோம்!

பட்டப் படிப்பு
படித்தோரே வீதிகளில்
நெட்டி முறித்து
நெடு மூச் செறிகையிலே ...
கொழும்புப் பெருங் கந்தோர்
"குஷன் சீட்"டில் உட்கார்ந்து
எழுதும் தொழி லெண்ணி
இருக்கின்ற மாணவரே!
நாங்க ளொரு விதி செய்வோம்
நாளுமதைக் காத்திடுவோம்
தூங்கிக் கிடப்பவர்க்கே
துடிப்பு வரச் செய்திடுவோம்
வெள்ளையர்கள் வைத்த
விதிமுறைக் குட் கல்விதனை
அள்ளியுண்ட காரணத்தால்
அந்தரித்து நிற்கின்றோம்.
அவர்கள் எமைச் சுரண்ட
ஆக்கி வைத்த எல்லைகளின்
சுவர்கள் உடைத்திடுவோம்.
சுதந்திரமாய்ப் பறந்திடுவோம்
விண்ணை இடித்து
விரைகின்ற ஊர்திகளும்
எண்ணெய் எரிபொருட்கள்
எடுக்கின்ற யந்திரமும்
தொழில்கள் அனைத்தும்
புரக்கும் கருவிகளும்
எங்கள் பலங்கொண்டு
இயற்றி எழுதிடுவோம்.
எல்லைகளைத் துர்ந்தெறிந்து
இருவர்க்க முரண் பாட்டுத்
தொல்லைகளைப் போக்கிடும்மா
சூட் சுமங்கள் யா வினையும்
இங்கே நாம் செய்திடுவோம்.
இதற்கான கல்விதனை
எங்கே இருந்தாலும்
ஏறிப் படித்திடுவோம்
ஆற்றைத் தடுத்து
அணையிட்டுத் தேக்கிடுவோம்
காட்டை அழித்து, மணிக்
கழனிகளே செய்திடுவோம்
கூட்டு முறையினிலே
குலம் கோத்திரம் விடுத்து
நாட்டை வளர்த்திடுவோம்
நாமரசு செய்திடுவோம்
கழனி விவசாயக்
கல்விதனைக் கற்றிடுவோம்
விழலுக் கிறைப்பதையே
வீழ்த்தி உயர்ந்திடுவோம்
நாளைக் கிந் நாடு
நமக் கென்று வந்து விடில்
ஏழைகளே இல்லை
எனும்படிக்குச் செய்திடுவோம்
அந்தச் சமதர்ம
ஆட்சியினை ஏற்படுத்த
இந்தத் தலைமுறையே
இதற்கான கல்விதனை
கற்றுத் தெளிந்திடுவோம்
கற்றதையே, காரியத்தில்
வெற்றியுடன் செய்திடுவோம்
விடிவெள்ளி ஆகிடுவோம்!

புதுவை -இரத்தினது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சேவையால் உயர்ந்த ஜோண் சட்டம்பியார்

நூற்றாண்டு விழாக் கொண்டாடும் ஒரு வித்தியாலயத்தில் 38 ஆண்டுகள் தொடர்ச்சியாக ஒருவர் கல்விப்பணி புரிந்திருக்கிறார் என்றால் அது பெருமைக்குரிய செயல் அல்லவா? 38 ஆண்டுகள் என்பது ஒரு சகாப்தத்தின் மூன்றிலொரு பகுதிக்கும் அதிகமான காலமாகும். இக்காலகட்டத்தில், இந்தமனிதர், ஒரு குடும்பத்தின் மூன்று தலைமுறையினருக்கு ஆசானாக விளங்கியிருப்பார் என்பது அவருக்குப் பெருமை தரும் விஷயம். அந்தப்பெருமைக்குரிய மனிதர் பணியாற்றியமையால், அது அந்த வித்தியாலயத்துக்கொரு பெருமை; வித்தியாலயத்தில் கல்விகற்ற மாணவர்களுக்கு ஒரு பெருமை; வித்தியாலயம் அமைந்திருக்கும் ஊர்மக்களுக்கு ஒரு பெருமை!

இப்படி தூயஉள்ளத்தோடு ஆசிரிய சேவைபுரிந்து, பெருமை பெற்ற நல்லாசான் வேறுயாருமல்லர்; ஜோண் சட்டம்பியார் என்று எல்லோராலும் செல்லமாக அழைக்கப்பட்ட ஜோண் வைத்திலிங்கம் அவர்கள்தான். இவர், தனது பத்தொன்பதாவது வயதில் ஆசிரிய சேவையை மேற்கொண்டார். ஐந்து வருடங்கள் யாழ்ப்பாணம் கரையூரில் சென். ஜேம்ஸ் பாடசாலையில் படிப்பித்தார். அதன்பின்னர் எமது புனித மரியாள் வித்தியாலயத்தின் தலைமை ஆசிரியர் பொறுப்பை ஏற்று, ஒய்வு பெறும்வரை உழைத்தார். திறமையும் பண்பும் நிறைந்த ஜோண் சட்டம்பியார் மாணவர்களை அன்புடன் அணைத்து அவர்களுக்குக் கல்வி புகட்டினார்; வித்தியாலய வளர்ச்சியில் இரவும் பகலும் கண்ணும் கருத்துமாயிருந்தார்; வித்தியாலயச் சூழலிலும், பட்டினத்திலும் வாழ்ந்த மக்களோடு அன்பாகப் பழகி, அவர்களது இன்பதுன்பங்களில் இரண்டறக் கலந்து அன்புக்குரியவரானார்; சமூக சேவை செய்தார். அக்காலங்களில், அடைக்கலநாயகியின் பங்குக் குரவர்களாயிருந்த வண. பரன், வண. பெருசால், வண. சேவியர் முதலிய சுவாமிமாரோடு இணைந்து தெய்வப் பணியும் புரிந்தார். குரவர்களின் அன்புக்கும் பெருமதிப்புக்கும் உரியவராய்ச் சிறந்து விளங்கினார்; சேவைக்கே பெருமை தேடித் தந்தார். 81 ஆண்டுகள் வாழ்வாங்கு வாழ்ந்த இந்த மனிதர் 1896 லிருந்து — 1933 வரை தன் சீவிய காலத்தில் கிட்டத்தட்ட அரைவாசிக் காலத்தை இந்த வித்தியாலயத்தின் கல்வி வளர்ச்சிக்காகவும், நிறுவன உயர்ச்சிக்காகவும் செலவிட்டார்.

சித்தன்கேணியில், புகழ்பெற்ற இராஜகெம்பீர முதலியாரின் வழித்தோன்றலான குணரத்தினம் என்பவர் இவரது தந்தையாராகும். தாய் பெயர் தெய்வானை. பரம்பரையான சைவக் குடும்பம். இவருக்கு, பெற்றோர் இட்ட பிள்ளைத் திருநாமம் வைத்திலிங்கம். ஆரம்பக் கல்வியை சித்தன்கேணியில் முடித்துக்கொண்டு, தொடர்ந்து கல்வி கற்பதற்குக் கொழும்புத்துறைக்கு வந்தார். ஆர்வத்தோடு திறமையாய்க் கல்வி கற்றார். கத்தோலிக்க சமயத்தின் பாற் கவரப்பெற்று, ஞானதீட்சை பெற்றார். மிக இளம் வயதிலேயே ஆசிரியகலாசாலையிற் சேர்ந்து பயிற்றப்பட்ட ஆசிரியரானார்.

இவர் பிறந்தது 1873இல். சற்றுக் கவனித்துப் பாருங்கள்! எமது வித்தியாலயம் ஆரம்பிக்கப்பட்டதும் 1873இல் தான். எமது வித்தியாலய வளர்ச்சிக்குப் பாடுபடவே அனுப்பப்பட்டவரோ என்று பிரமை ஏற்படுகிறதல்லவா? இல்லையென்றால் அதே ஆண்டில் சித்தன்கேணிச் சைவக் குடும்பத்தில் பிறந்த இந்த வைத்திலிங்கம், கத்தோலிக்க சமயத்தைத் தழுவி, ஜோண் என்று பெயர் கொள்ளவும், ஆசிரியத்தொழிலை மேற்கொள்ளவும் வேறு என்னதான் காரணம் இருக்க முடியும்?

க. அருளப்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பளிப்பு


ஏ. கே. எஸ். அண்ட் சன்ஸ்

நகை மாளிகை


63-65 கன்னாதிட்டி யாழ்ப்பாணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தொழில் முன்னிலைப் பாடநெறி I



அடைக்கல மாதா
கோயிலைச் சேர்ந்த
தர்மச் சீமாட்டிகள்,
எமது மாணவர்கள்
தும்புத் தொழிலைக்
கற்பதற்கு உதவியாக
கயிறு திரிக்கும்
ராட்டைகளை
அதிபரிடம் அன்பளிப்புச்
செய்கின்றனர்.

தர்மச் சீமாட்டிகளின் அன்பளிப்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தொழில் முன்னிலைப் பாடநெறி II



விஞ்ஞான பரிசோதனை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமது வித்தியாலயத்தில் கடமையாற்றிய அதிபர்கள்

| | |
|---|---|
| 1873 — 1896 | |
| 1896 — 1933 | திரு. ஜோண் வைத்திலிங்கம் |
| 1933 — 1939 | திரு. எஸ். கே. ஷெருபேட் |
| 1933 — 1942 | திரு. எஸ். யோசப் ஞானப்பிரகாசம் |
| 1-5-42 — 30-4-44 | சங். சகோ. சென் மோறிஸ் |
| 1-5-44 — 31-12-44 | சங். சகோ. அகத்தா |
| 1-1-45 — 31-12-45 | சங். சகோ. ஜான்மேரி |
| 1-1-46 — 30-4-46 | சங். சகோ. பொலின் |
| 1-5-46 — 30-4-49 | சங். சகோ. அன்ருவனற் |
| 1-5-49 — 31-12-51 | சங். சகோ. மேரி அஞ்சலா |
| 1-1-52 — 31-12-54 | சங். சகோ. மேரி மக்டலின் |
| 1-1-55 — 31-12-57 | சங். சகோ. மேரி அகத்தா |
| 1-1-58 — 31-12-59 | சங். சகோ. மேரி மொனிக்கா |
| 1-1-60 — 31-12-62 | சங். சகோ. மேரி இமாக்குலாற்ரு |
| 1-1-63 — 31-12-63 | சங். சகோ. மேரி எமிலி |
| 1-1-64 — 31-1-67 | திரு. பி. மரியநாயகம் |
| 1-2-67 — 31-12-70 | திரு. மு. க. க. அருட்பிரகாசம் |
| 1-1-71 — 14-9-71 | திரு. வெ. வில்லியம் |
| 15-9-71 — | திரு. ஜெ. யோசேப்பு |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெற்றோர் ஆசிரியர் சங்கம்

நூற்றாண்டுவிழா கொண்டாடப்படும் இவ்வருந்தருணத்தில் கடமையாற்றிய எமது வித்தியாலயத்தின், பெற்றோர் ஆசிரியர் சங்க உத்தியோகத்தர் விபரம் பின் வருமாறு.

**தலைவர்:**

திரு. ஜெ. யோசேப்பு (அதிபர்)

**உபதலைவர்:**

திரு. ஈ. ஆர். திருச்செல்வம்

**செயலாளர்:**

திரு. என். கே. ரகுநாதன்

**உபசெயலாளர்:**

திரு. ஜே. பி. இம்மானுவல் குறூஸ்

**பொருளாளர்:**

திரு. அ. யோசேப்

**செயற்குழு:**

திரு. க. சி. கிருஷ்ணன்
,, ம. வஸ்தியாம்பிள்ளை
,, எம். முகம்மது உண்ணி
,, ஏ. எல். சக்கூர்
திருமதி புனிதசீலி செல்வராஜ்
,, பார்பரா பெர்ணண்டோ
,, ஞானமணி சடாட்சரம்
,, அ. சிவலிங்கம்
,, ம. கணபதிப்பிள்ளை
,, ம. மா. ஆசீர்வாதம்
,, மே. யோ. ஆசீர்வாதம்
,, ஜே. இராசேந்திரம்

---

## இலட்சியங்கள் பலவிதம்

எங்கள் அதிபர் திரு. ஜெ. யோசேப்பு அவர்களுக்கும் அடைக்கலமாதா கோயில் பங்குக் குரவராயிருந்த அருள் திரு. சூசைப்பிள்ளை அடிகளுக்கும் நன்றாக ஒத்துப்போகும். இருவரும் கோயில் வளவுக்குள் அடிக்கடி சந்தித்துப் பேசும் போது, அவர்களின் முகபாவம், எதையோ இழந்துவிட்டது போலவும், எதையோ அடையத் தெண்டிப்பது போலவும் படும். அடிகள், சிலகாலம் ஆசிரியசேவை செய்தவர்; அதிபராகவும் இருந்தவர். பாடசாலைக் கண்மையில் அவர் நின்று பேசும்போது, முன்னைய கல்விப்பணியால் கவரப் பெற்று 'அட, ஒரு பாடசாலைக்கு அதிபராயிருக்க முடிய வில்லையே!' என்று ஏங்குவது போலவும், கோயிற்காரியங்களில் அதிக சிரத்தையுள்ள அதிபர், கோயிலை அண்டிநின்று பேசும் போது, ஒரு சுவாமியாராகித் தன்னை முழுவதும் அர்ப்பணித்துச் சமயத்தொண்டு செய்யக்கிடைக்கவில்லையே என்று அங்கலாய்ப்பது போலவும் கற்பனையில் தோன்றும். உயரக்குறைவான அதிபர், நிமிர்ந்து தலையை உயர்த்திப் பேசுவதும், சற்றே உயரமான அடிகள் குனிந்துகொண்டு பேசுவதும் பார்ப்பவர்களுக்கு வேடிக்கையாயிருக்கும்.

இப்படியிருந்துவரும் நாளில், அண்மையில் ஒரு நாள், சூசைப்பிள்ளை அடிகள், ஊர்காவற்றுறை அர்ச். அந்தோனியார் கல்லூரி அதிபர் பதவியைப் பொறுப்பேற்க அழைக்கப்பட்டார். அதிபர், அடிகளுடன் ஊர்காவற்றுறைவரை சென்று வழியனுப்பிவிட்டு வந்தார். விட்டுப் பிரிந்தது துக்கமாயிருந்தாலும், அடிகள் விரும்பிய இலட்சியத்தை எட்டிவிட்டாரே என்பதில் அதிபருக்குச் சந்தோஷம். ஆனால்? .. கத்தோலிக்க மதத்தவர்களுக்கு மறுபிறப்பில் நம்பிக்கையில்லை. மறுபிறப்பு இருக்குமானால், அப்பிறவியில்தான் அவருடைய ஆசை நிறைவேறவேண்டும்போலும்!

என். கே. ஆர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 99 ஆவது ஆண்டிலேயே முன்ருயத்த விழாக்கள்

பெருமையோடும், உள்ளக்களிப்போடும் நாம் எடுக்கும் நூற்ருண்டு விழாவுக்கு முன்ருயத்தமாக, கட்டியங்கூறவந்த நிகழ்ச்சிகள்போல எமது வித்தியாலயத்தில் சென்ற ஆண்டு சில முக்கிய கொண்டாட்டங்கள் நடைபெற்றன.

யாழ்ப்பாணத்துக்கு உத்தியோக பூர்வமாக விஜயஞ்செய்த மாண்பு மிகு கல்வி அமைச்சர் கலாநிதி அல்ஹாஜ் பதியுதீன் மஹ்மூத் அவர்களை, 15-5-72ல் நாம் மகிழ்வுடன்வரவேற்று உபசரித்ததும், கல்வி அமைச்சர், ஒரு புதியகட்டடத்துக்கான அடிக்கல் நாட்டியதும் வித்தியாலய வரலாற்றில் மிக முக்கியமான நிகழ்ச்சியாகும். அன்று கல்வி அமைச்சருடன், கல்வி அமைச்சின் நிரந்தரச் செயலாளர் கலாநிதி பிரேமதாச உடகம, மேலதிகச் செயலாளர் கலாநிதி கே. எச். எம். சுமதிபால, பிரதம உதவிச்செயலாளர் திரு. ஆர். பாஸ்கரலிங்கம், உதவிக்கல்வி மாபணிப்பாளர் திரு. யூ. டி. ஐ. சிறிசேன, கல்விப்பணிப்பாளர் திரு. ஜோர்ஜ் மெண்டிஸ் அன்றைய வடபிராந்திய கல்விப்பணிப்பாளர் திரு. விஜிதா அபயசேகரா, கல்வித்திணைக்கள அதிகாரிகள் ஆகியோருடன், தேசியப் பேரவைஉறுப்பினர் திரு.சி.எக்ஸ்.மாட்டின், திருமதி மாட்டின், காலஞ்சென்ற யாழ். ஆயர் அதிவந். கலாநிதி ஜே. எமிலியானுஸ்பிள்ளை, யாழ். திருக்குடும்பக்கன்னியர்களின் மாகாணத்தலைவி அதி சங்.சகோ. யூளாலி, யாழ் நகரமுதல்வர் திரு. அல்பிறட் தங்கராசா துரையப்பா ஆகியோரும் மற்றும் பிரமுகர்களும் சமுகங் கொடுத்திருந்தமை கண்கொள்ளாக் காட்சியாகவிருந்தது. நூற்ருண்டுகாலம் கல்விப்பணிபுரிந்த இவ் வித்தியாலயத்தை வாழ்த்திச் செல்வதற்கு வந்ததாகவே தென்பட்டது. இவர்கள் எல்லோரையும் அதிபர், ஆசிரியர், மாணவர் பெற்ருேர் அனைவரும் வெகு கோலாகலமாக வரவேற்றனர். அமைச்சர் மகிழ்ச்சியுடன் அடிக்கல் நாட்டி முடித்ததும் வித்தியாலய வளர்ச்சியைப் பாராட்டினுர்; மேலும் வளர்ந்தோங்க வேண்டுமென்று வாழ்த்துத் தெரிவித்தார்.


கைராசிக்காரரான அமைச்சரின் வாழ்த்தும், எமது வித்தியாலய வளர்ச்சியில் கண்ணுங் கருத்துமாயுள்ள திரு. மாட்டீனுடைய நல்லாசியும் ஒன்று சேர்ந்தால் கேட்கவேண்டுமா? அடிக்கல் நாட்டப்பட்டு மூன்றே மூன்று மாதங்களில் புதுக் கட்டடம் கம்பீரமாக எழுந்து நின்றது. கட்டடத் திறப்புவிழா 15-9-72ல் நடைபெற்றது. உள்ளக்களிப்பு முகத்திலே பொங்கிவழிய, திரு. சி. எக்ஸ். மாட்டீன், நாடாவைக் கத்தரித்துக் கட்டடத்தைத் திறந்து வைத்தார். இந்தக் குறுகிய கால இடைவெளிக்குள் ஒரு துக்ககரமான சம்பவம் நடந்துவிட்டது. கல்வியமைச்சரை வரவேற்க வந்த யாழ். ஆயர் அதிவந். கலாநிதி எமிலியானுஸ்பிள்ளை அவர்கள் அமரரான செய்தியை இங்கு குறிப்பிடுகின்ருேம். யாழ்ப்பாணத்திலுள்ள கத்தோலிக்கப் பாடசாலைகளின் பாதுகாவலனுய் விளங்கிய யாழ் ஆயர். ஒரு அகல் விளக்குப்போன்ற எமது வித்தியாலயத்தைச் சுடர் அணையாமற் காத்துவந்த வள்ளலுமாவார். அவரின் கல்விச்சேவையை நாமும் நமது சந்ததியும் கௌரவிக்கவும் நினைவிலிருத்தவும் புதிய கட்டடத்தில் கல்வி அதிபதி திரு. க. கனகசபாபதி அவர்களால் அவருடைய உருவப்படம் திரைநீக்கம் செய்து வைக்கப்பட்டது. ஆயரின் நினைவாக, இக்கட்டடத்துக்கு எமில் மண்டபம் என்று பெயர் சூட்டப்பட்டுள்ளது.

புதிய கட்டடம் திறந்துவைக்கப்பட்டு இரு மாதங்களில் மற்ருேர் கட்டடத்துக்கான வாய்ப்பு நமது வித்தியாலயத்துக்குக் கிடைத்தது. வேம்படி மகளிர் கல்லூரியில் முதலாம்தரம் மூடப்பட்டதன் விளைவாக அங்கு அனுமதி கோரிவந்த பிள்ளைகளை எமது வித்தியாலயம் அணைத்தது. புதிதாக ஏற்பட்ட இட நெருக்கடியைத் தவிர்க்கும் முயற்சியும் திரு. மாட்டீனுலேயே நிறைவேறியது. ஆடம்பரமற்ற முறையில் 25-10-72ல் வட்டாரக் கல்வி அதிகாரி ஜனுப் எம். எம். மன்சூர், எமது ஆசிரியர், மாணவர் மத்தியில், பங்குக்குரவர் வண. சூசைப்பிள்ளை அடிகளாரின் ஆசீர்வாதத்துடன் வடமாநிலக் கல்விப் பணிப்பாளர் திரு. விஜிதா அபய சேகரா இக் கட்டடத்திற்கான அடிக்கல்லை நாட்டினுர். இக் கட்டடமும் விரைவில் பூர்த்தியாயிற்று. இதற்கு நூற்ருண்டு நினைவு மண்டபம் என நாமம் சூட்டப்பட்டுள்ளது. இந்த மண்டபத் திறப்பு வைபவம், நூற்ருண்டு விழாவில் ஒரு முக்கிய நிகழ்ச்சியாகும்.

மேலே கூறப்பட்ட நிகழ்ச்சிகளையொட்டி எமது மாணவ மாணவியர் நடத்திய கலை நிகழ்ச்சிகள் வந்திருந்தவர்களுக்கு விருந்தாக அமைந்து, எல்லோரது பாராட்டையும் பெற்றன. முன்ஞேடியான இந்த விழாக்களையொட்டி எடுக்கப்பட்ட புகைப்படக் கோவையை அடுத்து வரும் பக்கங்களில் காணலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமது வித்தியாலயம்: ஆரம்பமும், வளர்ச்சியும்

சீரிய பெயருடனும், செம்மையுட னும் சிறப்புற்றேங்கும் எங்கள் புனித மரியாள் வித்தியாலயம் 1873-ம் ஆண்டு ஒரு சிறிய ஸ்தாபனமாக அடைக்கல அன்னையின் அரவணைப்பிலே உருவாகி யது. ஏறக்குறைய நாற்பது அடி நீள மும், இருபது அடி அகலமும் கொண்ட இரு கூடங்கள் ஒன்றையொன்று எதிர் நோக்கியபடி அன்னையின் ஆலயத்தின் இருமருங்கிலும் தோற்றமளித்தன. ஏறக் குறைய நாற்பது மாணவர்கள் தம் ஆரம்பக் கல்வியை முதன்முதலாக ஆரம் பித்தனர். ஆண், பெண் என்று பாட சாலை பிரிக்கப்பட்டபோதிலும், ஒரு தலை மையாசிரியரின் கண்காணிப்பிலேயே நிர் வாகம் அமைந்திருந்தது. பொருளா தார நெருக்கடியின் காரணமாக அன் றைய சூழ்நிலைகளின் தரத்திற்கேற்ப பாடசாலையில் இடவசதியோ அன்றேல் தளபாட வசதியோ இருக்கவில்லை. அக் காலத்துத் திண்ணைப் பள்ளிக்கூடங்கள் போன்று மாணவர் இருக்கைகள் அமைந் திருந்தன. எனினும் அயரா முயற்சியு டன் ஒத்துழைத்த தியாகிகளின் அரிய சேவையினுல் கல்வித்தரம் முன்னேற் றம் அடைந்திருந்ததென்றே கூறலாம்.

1874-ல் மாணவர் தொகை 117 ஆகியது. இன்னும் இருவருட எல்லையில் 133 ஆகப் பெருகியது. இட நெருக்கடி, பொருளாதாரக் கஷ்டம் இருந்தும் கரு மமே கண்ணுயிருந்த எம் ஆசிரியர்கள் சற்றும் சளைக்கவில்லை. முயற்சியுடன் சேவை புரிந்தனர். 19-ம் நூற்றுண்டுக் கால எல்லையில் யாழ் ஆசனக்கோவில், புனித ஜேம்ஸ் ஆலயம், எம் அன்னை மரியின் ஆலயம் என்பன வண. யூடேயி சுவாமிகளின் பரிபாலனத்தின்கீழ்இயங்கி வந்தன. இவரே அந்நாட்களில் கத்தோ லிக்க பாடசாலைகளின் முகாமையாள ராகவும் இருந்தார் எனத் தெரியவரு கிறது. இவரது சேவையின் பின் வண. மாசறஸ் சுவாமி அவர்கள் 1907-ம் ஆண்டில் எமது பங்குக்கும், பாடசாலைக் கும் பொறுப்பாளராக விளங்கினுர். இக் காலத்திற்முன் யாவரானும் நன்கு மதிக் கப்பட்டவரும், கல்விமானுமாகிய ஜோண் சட்டம்பியார் எம் தாபனத்தின் தலைமைப்பீடத்தை அலங்கரித்தார். ஏறக் குறைய 38 வருடங்கள் அதன் வளர்ச் சிக்காக அரும்பாடுபட்டு மாணவரின் கல்விநலன், ஒழுக்கம் என்பவற்றை பேணிக்காத்து பெற்றேருடன் தொடர்பு கொண்டு அவர்களின் அன்பையும், பெரு மதிப்பையும் பெற்ருர். இவர் தொண் டாற்றிய காலத்தில் எமது திருக்குடும் பக் கன்னியரும் இப்பாடசாலையில் இறை பணி புரிய இறைவன் சித்தம் கொண் டார். நிர்வாகம் ஓர் தலைமையாசிரிய ரின் கீழ் இருப்பினும் இக் கன்னியர்கள் அவர்களுடன் ஒத்துழைத்துச் சேவை புரிந்தமை பாராட்டத்தக்கது. பல வருடகாலமாக ஆரம்பப் பாடசாலை யாக இருந்த ஸ்தாபனம் வண. வேந்தர்க் கோன் சுவாமியின் காலத்தில் கனிஷ்ட பாடசாலையாக மாற்றமடைந் தது. ஓலையால் வேயப்பட்டிருந்த பாட சாலைகளில் ஒன்று முதன் முதல் ஓட் டால் வேயப்பட்டது. மற்றப் பாடசாலை இன்றுவரை தொன்மையின் பெருமையை யும் எளிமையையும் எடுத்துக்காட்டுதல் போல ஓலையால் வேய்ந்தபடி காட்சி அளிக்கின்றது.


வண. வேந்தர்க்கோன் அடிகளாரின் பின் விசாரணைப் பங்கின் பொறுப்பை ஏற்றுக்கொண்டவர், அண்மையில் காலம் சென்ற வண. உவில்லியம் யேசுதாசன் அவர்கள். இவரது உதார குணத்தினுல் தான் தற்போது பெரிய பாடசாலை யாக விளங்கும் கட்டடத்தின் விருந்தை கள் அமைக்கப்பட்டு, மாணவர்களின் நெருக்கடி தீர்த்துவைக்கப்பட்டது. இவர் காலத்தில் அடைக்கல அன்னையின் பங்கு மக்கள், கூட்டுறவு முறையிற் பாடசா லையைத் திருத்தி அமைத்தார்கள் எனக் கருதப்படுகின்றது. இவ்விதம் விசார ணைப்பங்கிற் தொண்டுபுரிந்து வந்த மறைத் தந்தையர்களுடன், பங்கு மக் களும் தோளோடு தோள் நின்று ஒத்து ழைத்து எம் பாடசாலையின் வளர்ச்சிக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## வித்தியாலயக் கட்டடங்கள்



1873



1942



1972



Donated by:-
PROF. K. KAILASAPATHY

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரும்பாடுபட்டார்கள். இவர்களின் அரிய சேவைகள் அனைத்திற்கும் நாம் என்றும் நன்றி கூறக்கடமைப்பட்டிருக்கின்றோம்.

ஆலமரம் பெரிதாகி அரிய கிளைகளைப்பரப்பி தண்ணளி அளிப்பது போன்று எமது சிறிய ஸ்தாபனமும் நாளொரு வண்ணமும், பொழுதொருமேனியுமாக உயர்ச்சியுற்று தற்போது பெரிய பாடசாலையாக மிளிர்கின்றது. ஏறக்குறைய 600 மாணவர்களையும், 20 க்கு மேற்பட்ட ஆசிரியர்களையும் கொண்டுள்ளது. சிறப்பாகக் கடந்த சில வருடங்களாக எமது பாடசாலை பெருமைப்படத்தக்க முறையில் கல்வித்துறையிலும், விளையாட்டுத்துறையிலும், கலைநிகழ்ச்சிகளிலும் சிறப்படைந்துள்ளது. அரசாங்கம் பாடசாலைகளைப் பொறுப்பேற்ற பின் எமது பாடசாலைக்குக் குறிப்பிடத்தக்க அளவு நன்மை புரிந்துள்ளமையை நாம் பாராட்டுகின்றோம். சிறப்பாகச் சென்ற வருடம் மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களை, யாழ் நாடாளுமன்றப் பிரதிநிதி திரு. சி. எக்ஸ். மாட்டீன் அவர்கள் எமது பாடசாலைக்கு அழைத்து வந்து, ஒரு புதிய கட்டடத்துக்கு அத்திவாரக் கல் நாட்டி, கட்டடம் ஒன்றை உருவாக்குவதற்கு காரணகர்த்தாவாக விளங்கினார். மீண்டும் இன்னோர் புதிய கட்டடமும் குறுகிய கால எல்லையில் அமைத்துக் கொடுத்து, மாணவர் சுமுகமாக கல்வியில் உயர்ச்சி பெற வழி வகுத்தமை மறக்கற்பாலதாகும்.

வேலையில்லாப் பிரச்சினை உருவாகி வரும் இக்காலத்திலே மாணவர் தம் எதிர்காலத்தைச் சீரிய முறையிற் செலவழிக்க தொழிற்பாடம் மிகவும் முக்கியமானதாகக் கருதப்பட்டுப் போதிக்கப்படுவது வரவேற்கத்தக்க வரப்பிரசாதமாகும். துவிச்சக்கர வண்டி திருத்துதல், கயிறுதிரித்தல், தும்புத்தடி செய்தல் போன்ற தொழில்கள் மெச்சப்படத்தக்க முறையில் இங்கு முன்னேற்றம் அடைந்துள்ளன. கடந்த சில வருடங்களாக ஆரம்ப கணிதமும், விஞ்ஞானமும் படிப்பிக்கப்பட்டு, ஏனைய உயர்தரப் பாடசாலைகளுடன் போட்டி போட்டுக் கொண்டு வருகின்றது. இங்குள்ள ஆசிரியர்கள் அனைவரும் ஒரு தாய் மக்கள்போன்று இன்பத்திலும், துன்பத்திலும் இணைந்து வித்தியாலய வளர்ச்சிக்கு உழைத்து வருகின்றனர்.

கடந்த ஒரு நூற்றாண்டுக்கால எல்லையில் எமது சிறிய ஸ்தாபனத்தில் கல்வி கற்று, தற்போது அரசியல்வாதிகளாக, தன்னலமற்ற சமயவாதிகளாக பணியாற்றி வரும் அனைவருக்கும் எமது அன்புகனிந்த பாராட்டுக்கள் உரித்தாகுக! எமது பாடசாலையின் வளர்ச்சிக்காக அருந்தொண்டாற்றி இறைவனின் நிழலில் இளைப்பாறச் சென்றிருக்கும் அனைவரதும் ஆன்மா சாந்தி அடைவதாக.

வண. சகோதரி மரிய கிளாரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'கல்லில் சமைத்த கீதம்'

அருள் திரு. எம். சூசைப்பிள்ளை அடிகள்
அதிபர், அர்ச் அந்தோனியார் கல்லூரி, ஊர்காவற்றுறை

யாழ்ப்பாணப் பட்டினத்தின் நடுவே, இருதயம்போல அமைந்து, வனப்பும் கம்பீரமும் சாந்தமும் பொலியத் திகழ்வது எமது அடைக்கலமாதா ஆலயம். இந்த ஆலயத்தின் திருப்பணி சம்பந்தமான வரலாற்றை அறிவதன் மூலம், அதனோடு தொடர்புடைய எமது சமய குருமார்களின் மகத்தான பணிகளையும் தியாகவுணர்வையும் அறிகின்றோம்.

அடைக்கலமாதா கோவில் வளவில் அமைந்துள்ள வியாகுலமாதா கெபியின் ஒரு பக்கத்தில் வண. பெருசால் சுவாமியின் திருநாமம் பொறிக்கப்பட்டுள்ளதைப் பார்த்திருக்கிறீர்களா? கடும் உழைப்பாளரான இந்தச் சுவாமியின் அயராத முயற்சியால்தான் அடைக்கல மாதா கோவில் கட்டி முடிக்கப்பட்டது. அவரின் சேவையை நாம் மறக்காதிருக்கவும், அவரைக் கௌரவிக்கவுமாகவே வியாகுல மாதா கெபியின் பக்கலில் அவரின் பெயர் பொறிக்கப்பட்டிருப்பதைக் காண்கின்றோம்.


இந்த வியாகுலமாதா கெபியை அடுத்து முன்பக்கமாக, ஒல்லாந்தர் காலத்திலே ஒரு சின்னக் களிமண் கோயில் இருந்தது. இதுவே பழைய அடைக்கல நாயகி ஆலயமாகும் இந்த ஆலயம், காலப்போக்கில் ஒரு சிறிய கற்கட்டடமாக மாற்றம் பெற்றது. களிமண் கோயிலாயிருந்த அடைக்கலநாயகியின் திருவீட்டை சிறு கற்கோவிலாகக் கட்டியவர் வண. லோபோச் சுவாமியாராகும்- இந்த லோபோச் சுவாமியார் கொங்கண தேசத்தவர். 1783 - லிருந்து 1892 வரை பங்குக் குரவராகப் பணியாற்றினர். இந் நாட்டைத் தன் சொந்த நாடாக மதித்து, மக்களோடு நன்கு பழகி, அவர்களது இன்ப துன்பங்களில் பங்கு கொண்டு சமயப் பணி புரிந்தவர். மக்களும் அவர் மீது மிகுந்த அன்பும் மதிப்பும் கொண்டிருந்தார்கள். அவர் இறந்தபின், அவரது பூதவுடல் கூட கெபிக்கு முன்னுலேயே பூமதானம் செய்யப்பட்டது. அவர் மக்களுக்குச் செய்த சேவையை நினைவுகூருமுகமாக அந்நாட்களில் வருடா வருடம் புரட்டாதி மாதம் 9ஆம் திகதிகளில் லோபோச் சுவாமியார் திருநாள் கொண்டாடப்பட்டது குறிப்பிடத்தக்கது.

இன்றைய ஆலயம் இருக்கும் இடம் அக் காலத்தில் சேமக்காலையாக இருந்தது என்பது உங்களுக்கு ஆச்சரியமாக இருக்கும். அது ஒல்லாந்தர் காலம். அப்போது யாழ்ப்பாண மேற்றிராசனம் தோன்றவில்லை. ஒல்லாந்தரது வேதகலாபனைக் காலத்திலும் அதற்குப்பிறகு சிலகாலமும் கோவைக் குருமாரே இப்பகுதியின் மத சம்பந்தமான காரியங்களைப் பரிபாலித்து வந்தனர்.

யாழ்ப்பாண மேற்றிராசனம் தோன்றிய காலத்தில் அடைக்கல நாயகியின் களிமண் ஆலயம், லோபோச் சுவாமியின் முயற்சியால் கற்கோவிலாக மாறியிருந்தது. இக்கற்கோவில், சிலகாலம் யாழ்ப்பாண மேற்றிராசனமாக இருக்கும் பேறுபெற்றது. மகா வந். பெற்றக்கினி ஆண்டகை அவர்களே (1848) இக்கோவிலை ஆசனக்கோவிலாக்கினர்.

காலப்போக்கில் இக் கற்கோவில் பழுதடைந்து, மக்கள் தேவைக்குப் போதாமலும் போகவே, அதனைப் பெரிதாகக்கட்ட வேண்டிய அவசியம் ஏற்பட்டது. அதனால் இப்போதிருக்கும் கோயிலைக் கட்டுவதற்கு, 1907ஆம் ஆண்டு புரட்டாதி மாதம் 8ஆம் நாள், மேன்மைதங்கிய யூலன் ஆண்டகை அவர்கள் அத்திவாரக்கல் நாட்டினர்கள். அத்திவாரக்கல் நாட்டியதும் ஊர்மக்கள் இப்பணியைத் தங்கள் சொந்தப்பணியாக நினைத்து ஆயிரம் ரூபா சேர்த்து உதவினர்கள்; வேறு பல வழிகளிலும் தங்களால் இயன்ற உதவியைச் செய்தார்கள். அப்போது பங்குக் குரவராயிருந்தவர் வண. ஜோண் அலோசியஸ் அவர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வியாகுலமாதா கெபி

கோவிலைக்கட்டிமுடிப்பதற்குச் சரியாக 21 ஆண்டுகள் பிடித்தன. 1923ம் ஆண்டில் வண. பெருசால் சுவாமியார் பங்குக் குரவராக நியமிக்கப்பட்டார். இத்தெய்வப் பணியைப் பூரணப்படுத்திய பெருமை வண. பெருசால் சுவாமிக்கே உரியதாகும். அவரது விடா முயற்சியும், அயரா உழைப்பும் மறக்க முடியாதவை. இக்காலத்தில் சுவாமிக்கு பக்கத்துணையாக நின்று பெரும் பங்காற்றியவர்களில் மனுவேற்பிள்ளை இராசகாரியர், எம். பி. சுவாம்பிள்ளை இவர்களுடன் மற்ருெரு மனுவல்பிள்ளை முதலியோர் குறிப்பிடத்தக்கோராவர்.

ஆலயம் கட்டிமுடிக்கப்பட்டு, 1928ம் ஆண்டு புரட்டாதி மாதம் 8ந் திகதியன்று மகாவந்,கியோமர் ஆண்டகை அவர்களால் அபிஷேகம் செய்யப்பட்டது. ஊர் மக்களோடு சேர்ந்து பங்குக்குரவர் வண. பெருசால் சுவாமியார் உளம் பூரித்து நிற்க, இவ்வபிஷேகவிழாவில் பங்குபற்றிய செஞ்சொற் செல்வரான சுவாமி ஞானப்பிரகாசர் அவர்கள், இவ் ஆலயத்தின் அழகினை வியந்து கல்லில் சமைத்த கீதம் என்று பெருமையோடு போற்றினுர்.

அடைக்கலநாயகியின் பெயரால் நிறுவப்பட்டு அவர் நிழலில் செழித்து வளர்ந்துள்ள புனித மரியாள் வித்தியாலய நூற்ருண்டு விழா நடைபெறும் இந் நன்ஞளில், கல்லில் சமைத்த கீதமான எங்கள் கோயில் வரலாற்றை அறிவது சாலப் பொருத்தமானதும் மகிழ்ச்சிக்குரியதுமாகும். ★

அடைக்கலநாயகி ஆலயத்தில் வண. பெருசால் சுவாமிக்குப் பிறகு பங்குக் குரவராகப் பணியாற்றியவர்கள்: வண. சேவியர் சுவாமி, வண. வேந்தர்க்கோன் சுவாமி, வண. வில்லியம் யேசுதாசன் சுவாமி, வண. சுவாம்பிள்ளைச் சுவாமி, வண. யோசேப்புச் சுவாமி, வண. எம் சூசைப்பிள்ளைச்சுவாமி

இப்போது வண. கே. பி. சந்தியாப்பிள்ளைச்சுவாமி



புதிய பங்குச்குரவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புது உலக உயிர்

மாறி வரும் புதியதொரு உலகத்தோடு
மாணிக்க துவீபத்தை நடத்திச் செல்ல
ஏறிவரும் புதுக்கல்வித் திட்டம் தூக்கி
எழுகின்றோம்; எமதுமனை முற்றம் மீது
கீறிவிளை யாடுகின்ற பாலர் வாழ்வு
கிலி பிடித்த வேலையிலாத் திண்டாட்டத்தில்
நாறி விழ விடமாட்டோம்; நாளை நாடு
நலம் வாழப் புதுமாற்றம் நடனமாடும்!

பழைமைக்குள் பாய் விரித்துப் படுத்துக்கொண்டு,
பழம் நழுவிப் பாலில்விழும் கனவு கண்டு,
இளமைக்கு மயிர் வளர்க்கும் கோலம் எங்கள்
இலங்கைக்கு வேண்டாம் காண்! சமத்துவத்தை
அழைக்கின்ற தென்றலிலே புதிய கல்வி
அளைந்து வரும்; அக்கினிக்கும் வாடாப் பூக்கள்
விளைந்து வரும்; அற்புதங்கள் செயலிற் கூடும்;
விடிவிற்குத் துதிபாடும்; எழுச்சி நாடும்!

கற்றவரை உற்பத்தி செய்யும் ஆலை
கல்வி என இருந்திட்ட காலம் செத்து,
கற்பவரை உருவாக்கும் ஜீவதாது
கல்விஎன உணர்ந்திட்டோம்! காலமெல்லாம்
சொற்குழப்பி விளையாட வேண்டாம்; கல்வி
சுதந்திரமாய்க் குடியரசின் செஞ்ஞாயிற்று
பொற்கதிராய் ஈழத்தைச் சூடு காட்டும்!
புது உலக உயிர் தோன்றி நிமிர்ந்து நிற்கும்!

க. தங்கவடிவேல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நற்குடிகளை உருவாக்குவதில் புதிய சமூகக் கல்வியின் பங்கு

இ. சிவசுப்பிரமணியம்
சேவைக்காலக் கல்வி பயிற்றுநர்—சமூகக் கல்வி

இன்றைய இளைய மாணவ சமுதாயமே எதிர்கால சுபீட்ச வாழ்க்கையின் சிற் பிகள். நமது ஈழத்திருநாட்டின் வருங்கால வரலாறு சீரும் சிறப்பும் பெற்று விளங்க வேண்டுமானுல் அறிவும், ஆற்றலும் கொண்ட நற்குடிகள் தோன்றவேண்டும். மாட்சிமிகு மனப்பாங்குகளும், சமூக நற் பண்புகளும் சாலப்பொருந்திய நற்பிரசை கள் உருவாக வேண்டும். புதிய சமூகக் கல்வி என்னும் பாடம் இப்பணியை நிறை வேற்றுவதற்கு பெரியளவில் துணைபுரியும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

''வாழ்க்கை பற்றிய அழியாத, விரும் பத்தகு மனப்பாங்குகளின் உருவாக்கம், பயிற்சி மாற்றம், கற்றல், ஆதியன பற்றி நவீன உளவியல் ஆராய்ச்சியாளர் வெளி யிட்ட பல முடிவுகளுக்கிணங்கவே சமூகக் கல்வி என்னும் பாடம் அமைந்துள்ளது.'' என்று சேர் சிறில் பேர்ட் என்னும் பேரா சிரியர் கருத்துத் தெரிவித்துள்ளார். நற்குடி களை உருவாக்குவதற்கு சமூகக்கல்வி அளிக்கக்கூடிய துணையை கல்வி ஆலோசகர் கள் நன்குணர்ந்துள்ளனர். இந்த அடிப் படையிற்ருன் ''சமூகக்கல்வி ஒரு முக்கிய பாடமாக, 6ந் தரம் முதல் 9ம் தரம் வரை யுள்ள பாடவிதானத்திற் புகுத்தப்பட் டுள்ளது. 1972ம் ஆண்டில் அறிமுகப்படுத் தப்பட்ட கல்விச்சீர்திருத்தங்களில் இது ஒரு முக்கிய அம்சமாகும்.

இக்கல்விச் சீர்திருத்தங்கள், பொரு ளாதார சமூகத்துறையில் பல விரும்பத்தகு மாற்றங்களையும், சிறப்பான விளைவுகளையும் ஏற்படுத்தும் என்ற நம்பிக்கையில் அறி முகப்படுத்தப்பட்டுள்ளன. சமுதாயத்தில் மாற்றங்கள் ஏற்பட வேண்டுமாயின் நமது இளைஞர்கள், சமுதாயம் எப்படி இயங்கு கிறது என்பதை அறியவேண்டும். சமுதாய மக்களைப்பற்றி அறிய வேண்டும். வெவ் வேறு சமூகப்பிரிவுகளுக்கிடையே நிலவும் தொடர்புகளைப்பற்றி உணர வேண்டும்.

மனிதனைப்பற்றியும், மனிதனுக்கும் மனித னுடைய பௌதிகச் சூழல், சமூகச் சூழல் ஆகியனவற்றிற் கிடையேயுமுள்ள இணைப்பை விளக்குவதனுல் சமூகக் கல்வி, சமுதாயத்தில் சிறந்த விளைவுகளை உண்டாக் குவதற்குத் துணைபுரியும். மாணவர்கள், மக் களுக்கு ஏற்படும் பிரச்சினைகளை உணர்ந்து அவற்றிற்கு ஏற்ற தீர்வுகளைக் கண்டுபிடிப் பதற்கு இப்பாடம் வற்புறுத்தும்.

வரலாறு, புவியியல் என்று பிரிக்கப் பட்ட, தனித்தனிப்பாட நெறிகளின் பழைய முறைப் போதனையால், மாணவன் கணக்கிறந்த பல தரவுகளையும் விடயங் களையும் அறிந்துகொண்டானேதவிர தனது சமுதாயத்திலும், உலக சமுதாயத்திலும் தான் ஓர் உறுப்பினன் என்ற வகையில் தனது பங்கையும், முக்கியத்துவத்தையும் அவன் உணரவில்லையென்றே கூறவேண்டும். இக் குறையை இப்புதுப்பாடம் ஓரளவுக்கு நிவர்த்தி செய்யும்.

அறிவு விருத்தி, திறன்களை வளர்த்தல் ஆகிய நோக்கங்களையும் மனதிற்கொண்டு பாடத்தின் அலகுகள் உருவாக்கப்பட்ட போதிலும், வேருெரு முக்கிய இலட்சி யத்தை அடிப்படையாகக்கொண்டும் இப் புதிய பாடம் தயாரிக்கப்பட்டுள்ளது. ஒரு மாணவன் நற்பிரசையாக உருவாக வேண் டுமானுல் அறிவு திறன் மட்டும் போதாது. அதற்கிணையாக சமூக நற்பண்புகளும் வளர வேண்டும். மக்களுக்கிடையேயும், நாடுக ளுக்கிடையேயும் நிலவும் சார்பை, தொடர்பை இப்பாடம் எடுத்துக்காட்டும். மாணவரிடையே தமது சரித்திரப் பரம் பரையியல்பையிட்டு பற்றையும் உணர் வையும் இயல்பாக எடுத்துக்காட்டும். நாட் டிற்காக சிரத்தையுடன் சேவையாற்றுவ தற்குத் தயங்காத நற்குடிகளே இன்று நமது நாட்டுக்குத் தேவைப்படுகிருர்கள். மனித சமுதாயத்தின் முன்னேற்றம் ஒத் துழைப்பில் தங்கியுள்ளது. பல்வகை மக்கட்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொகுதியினர்க்கிடையே சகிப்புத் தன்மையை நிலை நாட்டி, நல்லெண்ணத்துடன் கூடிய பரஸ்பர தொடர்புகளைத் தெளிவாக்கும் நோக்கத்துடன் இப்பாட அலகுகள் தயாரிக்கப்பட்டுள்ளன மனித வர்க்கத்தின் ஒருமைப்பாடு, மனித வர்க்கத்தின் முன்னேற்றம் முதலியவற்றையும் அதற்கான காரணிகளையும் கற்று, மனிதன் எவ்வாறு தனக்கு ஏற்பட்ட பிரச்சினைகளைத் தீர்த்து வைத்தான் என்பதை உணரும் மாணவர்கள், நிச்சயமாக எதிர்காலத்தில் நற்குடிகளாக மாறுவர் என்பதில் சந்தேகமில்லை.

அறிவும் திறனும் மட்டும் சிறந்த நற்குடிகளை தோற்றுவிக்கும் என்று நம்ப முடியாது. அறிவும், ஆற்றலும் நிறையப் பெற்ற பலர், கீழான, தப்பான மனப்பாங்குகளின் காரணமாக சிறப்பற்ற வாழ்க்கை வழிகளிற் சென்று வாழ்வை வீணாக்கியுள்ளனர். வரலாற்றில் இதற்கான சான்றுகள் பல உண்டு. அதிசயிக்கத்தக்க அறிவையும், வியத்தகு ஆற்றலையும் பெற்ற ஹிட்லரும், அவனது போதனையின் மயக்கத்தில் கட்டுண்டிருந்த ஜேர்மனி மக்களும் உலகத்தையே கலக்கிய ஒரு மாபெரும் போருக்குக் காரணமானார்கள். குறுகிய மனப்பாங்குகளும், ஏனைய இன மக்களைப்பற்றிய தப்பான சார்பெண்ணங்களுமே இதற்கு ஏதுக்களாக விளங்கின.

இன்று உலகத்தில், பல்வேறு மக்கட் குழுவினரிடையே போட்டியும் பொறாமையும் பூசல்களும் மலிந்துள்ளன. இது ஈழமென்னும் நம் தாய்நாட்டையும் பீடித்திருக்கும் ஒரு பயங்கரவியாதி. நாட்டு முன்னேற்றத்திற்கு முட்டுக்கட்டையாக விளங்கும் இவ்வியாதியை ஒழித்துக்கட்ட வேண்டுமானால் இப்பொழுதே நம்மிளஞ் சந்ததிகளான மாணவர்களை சிறந்த நற்குடிகளாக மாற்ற முயற்சிக்கவேண்டும். ஏனைய மக்கட்குழுவினரைப்பற்றிய தப்பபிப்பிராயங்கள், சார்பெண்ணங்களை சமூகக் கல்வியின் துணைகொண்டு ஆசிரியர்கள் நீக்கமுடியும். பிறருடைய வாழ்க்கைமுறை, மதம், முதலியவற்றை அறிந்து, அதற்கு மதிப்புக்கொடுக்கும் மனப்பாங்கை ஏற்படுத்தும் முறையில் 6-ந் தரப்பாட அலகுகள் பல அமைந்துள்ளன.

மனித குலத்தின் ஒருமைப்பாடு, சமுதாய மாற்றத்தில் மக்கள் கொள்ளும் பங்கின் முக்கியத்துவம் ஆகியனவற்றைப் பற்றிக் கூறும் வகையில் 7-ந்தர சமூகக் கல்விப் பாடத்திட்டம் அமைந்துள்ளது.

சிறந்த மனப்பாங்குகள், சிறந்த நற்குடிகளின் உருவாக்கத்திற்கு மிகவும் இன்றியமையாதது என்பது எல்லோராலும் உணரப்படுகின்ற ஓர் உண்மையாகும். இச்சிறந்த மனப்பாங்குகளை வளர்ப்பதற்கு சமூகக் கல்விப் பாடம் பெரும் அளவில் உதவி புரியும் என்பதில் சந்தேகமில்லை. இப்பாடத்தை சிறந்த முறையில் போதித்தல் ஆசிரியர்களின் இன்றியமையாக் கடமையாகும். இளம் பிள்ளைகளின் எதிர்காலத்திற்கும், நாட்டின் எதிர்காலத்துக்கும் பொறுப்பாக உள்ள ஆசிரிய உலகும் இதை நன்குணர்ந்து செயலாற்றவேண்டும்.

சமூகக் கல்வி என்பது வெறும் பாடசாலைப்பாடம் மட்டுமன்று! நவீன உலகில் நனி சிறந்த வாழ்க்கையை வாழ்வதற்கு பயிற்சியளிக்கும் ஒரு ''முறை''யுமாகும் 6-ந் தரம் முதல் 9-ம் தரம் வரை நான்கு ஆண்டுகளுக்கு சமூகக்கல்வி கற்பிக்கப்படும். இதன் மூலம் நல்லொழுக்கமும் பொறுப்புணர்ச்சியுமுள்ள நற் பிரஜைகள் தோன்றுவார்கள். கலைஞானமும், அழகுணர்வும், அறிவும், திறனும் எல்லாவற்றிற்கும் மேலாக சமூக வளர்ச்சிக்குகந்த மனப்பாங்குகள் பெற்ற நற்குடிமக்கள் உருவாகுவார்கள் பிற்கால சமுதாய மாற்றங்களில் பயன்தருவகையில் பங்கு கொள்ளும் ஒரு நல்ல குடிமகனாக மாணவன் உயர்வான் என நம்பலாம். ★

சுய திருப்தி என்பது கற்றலின் விரோதியாகும். இந்தச் சுயதிருப்தி உணர்வை நம்மிடமிருந்து நீக்கினாலொழிய நாம் ஒன்றையும் உண்மையாகக் கற்க முடியாது.

—ஓர் அறிஞர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவர் பகுதி

## நூற்றுக்கு நூறு

மக்கள் தம் வாழ்வில் எல்லோராலும் விரும்பப்படுவது மாபெரும் செல்வக் களஞ்சியமாகிய இன்பமே ஆகும். "விளக்கு எரிவதற்கு ஒரு தூண்டுகோல் வேண்டும்" என்பது போல் வாழ்வில் இன்பம் அடைவதற்கு வெற்றியே தூண்டுகோலாகின்றது. தம்வாழ்வில் ஒவ்வொரு மக்களும் பிறர் போற்றும் படி வாழ்ந்து மற்றவர்கட்கு ஓர் எடுத்துக்காட்டாகத் திகழ வேண்டும்.

பூமியில் மானிடராய ஒவ்வொருவரும் விரும்புவது இன்பமாகையால் இதை இனிய முறையில் பெற முயல வேண்டும். ஒரு மனிதன் மண்ணுலகிற்கு வந்ததில் இருந்து விண்ணுலகை அடையும்வரை பொன்பெற்றாலும் தம் பண்பு மாறாதவனாய் இருந்தால் நூற்றுக்கு நூறு பெறுவதற்குச் சமமான இன்பத்தையும் வெற்றியையும் அடையலாம். இவ்வாறு வாழ்வில் நூற்றுக்கு நூறு பெறவேண்டிய சந்தர்ப்பங்கள் எத்தனையோ உண்டு.

மாணவராக இருக்கும் போது பாடசாலையில் பெற்றுக் கொள்ளவேண்டியது நூற்றுக்கு நூறே எண்ணிறந்தவை. "விளையும்பயிரை முளையில் தெரியும்" என்பது ஆன்றோரால் அளிக்கப்பட்ட பழமொழியாகும். இந்தமொழி வெறும் பழமொழியாக மட்டுமன்றி மாணவராக இருக்கும் ஒவ்வொரு வருக்கும் கிடைக்க வேண்டிய அருள்மொழியாக இருக்க வேண்டும். ஒரு மாணவன் தன்பாடசாலையில் பூரண நூற்றுக்கு நூறு பெற வேண்டுமாயின் அவன் தனது ஒழுக்கம், பண்பு, குணம், பிறர்சிநேகம் என்பவற்றில் எல்லாந் தன்னிறைவு காணவேண்டும். அப்படித் தன் நிறைவு பெற்ற மாணவனுக்கு ஆசிரியராற் கொடுக்கப்படுவது தான் யாது? அது தான் அவனால் நாடப்பட்ட நற்புள்ளியாகிய நூற்றுக்கு நூறு ஆகும்.

அடுத்து வாலிபப்பருவம். இப்பருவத்தில் எந்த மனிதனும் ஒரு தொழிலையே நாடிச் செல்கின்றான். இப்படி ஒருவன் நாடிய தொழில் கிடைத்துவிட்டால் அவன் அங்கும் நூற்றுக்கு நூறு பெறவேண்டிய சந்தர்ப்பம் ஏற்படுகின்றது. முதலில் அவன் அத்தொழிற்சாலையில் உள்ள அனைவரும் தன்னை மதிக்கத்தக்க முறையில் நடக்க வேண்டும். அடுத்து அவன் தனது தலைவரின் வேண்டுகோளுக்கு இணங்கித் தன் பணியை மேற்கொள்ளவேண்டும். அடுத்துத் தொழிலில் ஊக்கம், விடாமுயற்சி என்பவற்றைப் பேணவேண்டும். ஒருவன் தான் செய்யுந் தொழிலைத் தெய்வமாகவும், அதில் இருந்து கிடைக்கும் திறமையையே செல்வமாகவும், கையையும் காலையும் உதவியாகவும் தான் கொண்ட கடமையே பதவியாகவும் நினைத்து நடந்தால் அங்கும் அவன் நூற்றுக்கு நூறு பெறுவது நிச்சயமாகும்.

அடுத்து அவனுக்குக் கிடைப்பது இல்வாழ்க்கை என்னும் இணையில்லாப் பெரும் சமுத்திரமாகும். இச் சமுத்திரத்தையும் அவன் நீந்திக் கடந்து அதிலும் நூற்றுக்கு நூறு வாங்க வேண்டும். இல்வாழ்வை அடைந்த ஒருவன் அதில் நூற்றுக்கு நூறு பெறுவது மிகவும் கடினமாகும்.

"இல்வாழ்வான் என்பான் இயல்புடைய
மூவர்க்கும் நல்லாற்றில் நின்றதுணை."

இது தெய்வப் புலவராகிய திருவள்ளுவரின் பொய்யாமொழியாகும். இதில் திருவள்ளுவர் ஒரு இல்வாழ்வானின் கடமை எதுவெனக் கூறுகின்றார். நீரில் மூழ்கித் தத்தளிக்கும் ஒருவன் மரக்கலம் கிடைத்ததும் துன்பந் தணிந்து இன்பம் அடைவது போல், இல்வாழ்வானாற் காப்பாற்றப்பட வேண்டியவர்களோ பிரமச்சாரிய நிலை, வானப்பிரத்த நிலை, சன்னியாச நிலை என்னும் மூன்று நிலைகளையும் உடையவர்களாகும். இவ்வாறு இல்வாழ்வான் தன்னால் இயன்றவரை காப்பாற்றக் கூடியவர்களைக் காப்பாற்றி செவ்வனே இல்வாழ்வை மேற்கொண்டால் இவன் இதிலும் நூற்றுக்கு நூறு பெறலாம். ௨௱

இல்வாழ்வின் பயன் புத்திரப்பேறு ஆகும். இப்பேறு பெற்றவன் இதிலும் நூற்றுக்கு நூறுகாண வேண்டும்.

"தந்தை மகற்காற்றும் நன்றி
அவையத்து முத்தியிருப்பச் செயல்"

இத் தெய்வப்புலவரின் வாக்கு தந்தை தன் மகனுக்குச் செய்ய வேண்டிய கடமை என்ன என்பதை எடுத்துக் காட்டுகின்றது. ஒரு தாய் தன்மகனை ஊரார் போற்ற அதைத் தன் செவி கேட்டு மகிழ வேண்டும் என்றே விரும்புவாள். இதை உணர்த்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தவே ''ஈன்றபொழுதிற் பெரிதுவக்கும் தன் மகனைச் சான்றோன் எனக் கேட்டதாய்'' என்று புலவர் கூறியிருக்கின்றார். ஒரு தந்தை தன் மகனை வறுமையிற் செம்மையாய் வளர்த்து ஒரு சபையிலே முன்னிடத்தை வகிக்கக்கூடிய தன்மையை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். இவ்வாறு செய்வதனால் ஊரார் புகழ்வார்கள். இதைக் கேட்ட பெற்றோர் மனம் மகிழ்ச்சி மிகுதியால் நிலவைக் கண்டதும் பொங்கி எழுந்து ஆர்ப்பரிக்கும் கடலைப்போல் ஆகின்றது. இவ்வாறு பிள்ளைகளை வளர்த்தால் இல்வாழ்வான் இதிலும் நூற்றுக்கு நூறு பெறலாம்.

நம் முன்னோர்களில் தம் வாழ்வில் பெருமை பெற்றவர்களோ எண்ணிறந்தவர்கள். அவர்களுள் கண்ணகியோ தன் கற்பின் மகிமையால் நூற்றுக்கு நூறு பெற்றாள். சிபிச் சக்கரவர்த்தியோ கொடையில் நிகரற்றவனாகி நூற்றுக்கு நூறு பெற்றான். மனுநீதிகண்ட சோழனோ நீதியில் சிறந்தவனாகி நூற்றுக்கு நூறு பெற்றான். அரிச்சந்திரனோ வாய்மையில் வழுவாது நின்று நூற்றுக்கு நூறு பெற்றான். பாரதியோ பாட்டிலே வல்லவனாகி நூற்றுக்கு நூறு பெற்றான். இவ்வாறு நம்முன்னோர் ஒவ்வொருவரும் தம்திறமையைக்காட்டி வெற்றி பெற்றிருக்கின்றார்கள். அவர்கள் பின்பற்றிய நற்பண்புகளை நாமும் பின்பற்றினால் நிச்சயம் வாழ்வில் வெற்றி அடையமுடியும்.

ஒருவகுப்பில் படிக்கும் மாணவர்கள் எல்லோரும் பரீட்சையில் நூற்றுக்கு நூறு புள்ளி பெற முடியாது. அதே போல் ஒரு சமுதாயத்தில் வாழும் அனைவரும் நூற்றுக்கு நூறாகிய வெற்றியை அடைய முடியாது. அவர்களிற் சிலரைச் சந்தர்ப்பம், சூழ்நிலை, என்னும் உருவில் வரும் தீயநட்பு பிரித்துவிடுகின்றது. இப்படிப்பட்டவர்கள் இறுதியில் இதை உணர்ந்ததும் உள்ளம் உருகுவார்கள். இவ்வாறு வாழ்வின் இலட்சியத்தையே அழித்து விடுவது தீய நட்பாகும். இந்தத் தீய நட்பு என்னும் வலையில் அகப்படாமல் தங்களை விலக்கி வாழ்பவர்கள் தம்வாழ்வில் நூற்றுக்கு நூறு திருப்தி பெற முடியும்.

இவ்வாறு மாணவருக்குப் பாடசாலையில் ஏற்படும் சோதனைபோல் வாழ்வில் எண்ணிறந்த சோதனைகள் ஏற்படுகின்றன, அந்தச் சோதனையில் இருந்து விலகி நம்மைப் பாதுகாத்து. நிலைத்த புகழை நிறுவ வேண்டும்.

'வாழ்க்கை என்பதே சோதனையாகும் வாங்க வேண்டும் அதில் நூற்றுக்கு நூறு'

க. விஜயரத்தினம்
(10)

## வள்ளுவனின் உயர்வு தரும் குறள்

தெள்ளூற்ற தமிழ்ச்சுவையும் வாழ்க்கைக் கேற்ற
சிறந்த அனு பவநீதிச் சிறப்பும் ஒன்றி
உள்ளத்துக் குரனூட்டி இன்பம் பாய்ச்சி
உருச் சிறிதே யானாலும் ஆழ்ந்த காட்சி
அள்ளூற்றுக் கிடக்கின்ற குறளை நந்தம்
அரும்பொருளாய்த் தந்தருளும் புலவன் சான்றோன்
வள்ளுவன்றன் வழியோர்ந்து நடப்பார் தம்மை
மாநிலத்தில் தேவரென மதிக்கலாமே.

நீதிநூல் பலவுண்டு மாந்தர் கூர்ந்து
நிறைவிலை வோடேபடிக்க நினையார் வேறு
சாதிநூல் சமயநூல் என்றால் அந்தச்
சார்பாரே படித்தின்பம் பெறுவார் அம்மா
ஓது நூல் பலவேண்டாம் குறளை ஓதின்
உயர்வுண்டாம் கவிநயமும் சார்தலாலே
காதலோ டோதுதற்கு நெஞ்சம் மூளும்
கற்கண்டு போலினிக்கும் பாக்கள் உண்டே.

வயிரம் போற் சிறிய உரு ஒளியும் அற்றே
மதிப்புக்கோ அளவில்லை மனித சாதி
துயரம் போக்கிட வேண்டின் ஆட்சி பெற்றுச்
சூழ்ச்சி சிறந் தின்ப வாழ் வடைய வேண்டின்
ஆரேனும் தம்வாழ்வில் உயரவேண்டின்
உயர்வினிலும் உயர்வு தரும் குறளை நெஞ்சில்
உணவாகிக் கரைத்துவிடல் நன்றாம் அன்றே.

ரதி சின்னத்தம்பி
(10)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இயற்கை இன்பம்

**வானத்திலே** பரிதி தன் அழகிய பொற்கதிர்களால் வெண்முகிற் படலங்களை அழித்து அழித்துத் தீட்டுகின்றது. இயற்கை அன்னையும் காலையிலே தன் தங்கநிறமான அங்கத்தை ஏழுநிற வர்ணஜாலம் விளங்கும் படலத்தால் போர்த்திருக்கின்றாள். நேரத்திற்கு நேரம் வெவ்வேறு வர்ணங்கள் பொருந்திய எழில் வஸ்திரங்கள் அணிந்து பார்ப்போர் மனதைக் கொள்ளை கொள்ளும் அழகுத் தேவதையாகி விட்டாள்.

இருள்போர்த்த போர்வை அகன்றதும் வானம் செக்கச் செவேலெனச் சிவந்து காணப்படும். இரவு முழுவதும் சிரித்த குமுதமலர்கள் இப்போது திகைப்படைய, செந்தாமரைகளும், வெண்டாமரைகளும் தலைநிமிர்ந்து தமது நாயகனை வரவேற்கின்றன. வண்டுகள் ரீங்காரம் செய்துகொண்டு அவற்றிலுள்ள நறுந்தேனை உண்டு மகிழ்கின்றன.

இயற்கை அழகில் தான் என்னபுதுமை! என்ன இன்பம்! காலை மாலை நேரங்களில் வானத்தின் அழகிலே மயங்கிய பாரதியாரின் வாயிலிருந்து கவிதை ரூபமாக அவ்வழகு வெளிப்படுகிறது.

''பாரடியோ! வானத்திற் புதுமையெல்லாம்
உவகையுற நவநவமாகத் தோன்றும்
காட்சி''

'கணந்தொறும் வியப்புகள் புதியதோன்றும்'

''என்னடீ! இந்த வண்ணத்தியல்புகள்
எத்தனை கலவை!''

''ஆஹா! எங்கு நோக்கிடினும்
ஒளித்திரள்! ஒளித்திரள்!''

**வண்ணக்களஞ்சியம்** என அதன் அழகிற் திளைத்த பாரதியார் கவிதைவெறி கொண்டு பாடுகின்றார். இயற்கை இன்பத்தைக் கண்டு களித்த வேறோர்கவி உணர்ச்சி மேலீட்டால் வானத்தை மயிலின் தோகைக்கு ஒப்பிட்டு ''வானத்தின் மீது மயிலாடக்கண்டேன்'' என்று பாடுகின்றார்.

இயற்கை இன்பத்தை உற்றுநோக்கும் போது எம்மையறியாமலே இறைவனைப் போற்றுகின்றோம். இயற்கையின் ஒவ்வொரு அம்சமும் எம்முடன் பேசிக்கொண்டிருக்கிறது. வெறித்தோடிக் கொண்டிருக்கும் நீலக்கடலிற்கூட அலைகளின் அலாதி அழகு. காரிருள் மத்தியில்கூட விண்மதியின் அழகு. சேற்றின் மத்தியில் கூட செந்தாமரையின் அழகு, கொடிய முட்களின் மத்தியில் கூட ரோஜாமலரின் அழகு, ஆஹா! எவ்வளவு புதுமை இது.

''கானெல்லாம் மலர்ந்த முல்லை
ககனமீ தெழுந்த தென்ன
வானெல்லாம் வயங்கு தாரை
நிரை நிரை மலர்ந்து தோன்ற
வேனிலான் விழவின் வைத்த
வெள்ளி வெண்கும்ப மென்னத்
தூநிலா மதியம் வந்து
குணதிசை தோன்றிற்றம்மா''

என்று கவிஞர் ஒருவர் பாடும் பொழுது எங்களின் கண்கள் முன் வரும் காட்சி எங்கள் உள்ளத்தைத் துள்ள வைக்கின்றது. எழில் வெண்மதியக் குணதிசையில் உதித்து மெல்ல மெல்ல பவனி வருகின்றது. கானகத்திலே பகல் முழுவதும் மலர்ந்திருந்த முல்லை மலர்கள் இந்நிலவு நேரத்தில் ஆகாயத்தில் எழுந்துவிட்டனவோ என்று ஐயம் ஏற்படுகின்றது.

அந்திமாலையின் அழகிலே ஈடுபட்ட புலவர் ஒருவர் அந்தியை ஒரு சிற்றரசனாக உருவகம் செய்து கூறுகின்றார்.

''மல்லிகையே வெண்சங்கா
வண்டூத வான்கருப்பு
வில்லி கணைதெரிந்து
மெய்காப்ப—முல்லையெனும்
மென்மாலை தோளசைய
மெல்ல நடந்ததே
புன்மாலை அந்திப் பொழுது.''

வண்டுகள் மல்லிகையாகிய சங்கை ஊதுகின்றன. மன்மதன் வில்லேந்தியபடி மெய்க்காவல் புரிகின்றான். முல்லை மாலை தோளிலே அசைய அந்திமாலை என்னும் அரசன் அடிமேல் அடிவைத்து பவனி வருகின்றான் என்று கூறுகின்றார் புலவர்.

மலையின் மேல் படிந்திருக்கும் முகிற் படலங்கள், அங்கிருந்து சலசலவென வழிந்தோடிவரும் அருவிகள், அக்கம்பக்கங்களில் பார்ப்போர் மனதைக் கொள்ளை கொள்ளும் பறவையினங்கள், காட்டுப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புறாக்கள், சோலையின் அருகே துள்ளி விளையாடும் புள்ளிமான்கள், இவை எல்லாவற்றையும் நோக்கும் போது இவ்வியற்கையை இவ்வளவு அழகாகவும், விவேகமாகவும் படைத்த ஓரிறைவன் உள்ளான் என்று எம் உள்ளம் கூறுகின்றது. இவ்வியற்கை எழிலில் உண்மையாக ஈடுபட்டவர்கள் எல்லாம் வல்ல இறைவனை மறுக்கவே முடியாது. இதனால் தான் கவிமணி தேசிக விநாயகம்பிள்ளையவர்களும்,

''உரையிறந்து பெருமைபெற்றுத்
திரைக்கை நீட்டி
யொலிக்கின்ற கடலேயிவ்
வுலகஞ் சூழக்
கரையுமின்றி யுன்னை வைத்தா
ரியாரே யென்பென்
கானகத்திற் பைங்கிளிகாள்
கமலமேவும்
வரிசிறை வண் டினங்களோ
தீமிங் காடுது
மார்க்க மன்றோ நீங்களிது
வரையிலேயும்
பெரிய பரி பூரணமாம்
பொருளைக் கண்டு
பேசியதுண்டோ வொருகாற்
பேசுமென்பேன்.''

என்று இறைவனைப் பெரிய பரிபூரணமாகிய பொருள் என்று மிகைப்படுத்துகின்றார்.

சி. பாலச்சந்திரன்
(9)

## வள்ளுவர் புகட்டும் கல்வி

திருக்குறள் அறம், பொருள், இன்பம் என்னும் முப்பால்களையும் தன்னகத்தே கொண்டு விளங்குகின்றது. திருக்குறளுக்குச் சரி நிகரான நூல் இல்லை என்பது புலவர்களின் ஏகோபித்த கருத்து. இந்நூல் ஈடும், எடுப்பும் இல்லாது நனி சிறந்து விளங்குகின்றது. திருவள்ளுவர் தரணிக்களித்த இந்நூல் ஒரு சமயத்தையோ, ஒரு சாதியினரையோ குறிக்காது சாதி சமய பேதமின்றி எல்லோருக்கும், எந்நாட்டவர்களுக்கும் நடுநாயகமான பொது நூலாய்த் திகழ்கின்றது. ஆகவே இந்நூல் பொதுமறை என உலகத்தோராற் போற்றப்படுகின்றது. இதிற் கூறப்படும் அறிவுரைகள், கருத்துக்கள் யாவும் எல்லோருக்கும் அவசியமானவை. இந்நூல் கப்பலில் பிரயாணம் செய்பவனுக்கு சுக்கான் போன்று உறுதுணை புரிகின்றது. திக்கற்றவர்களுக்கு கலங்கரை விளக்கம் போன்று வழி காட்டுகின்றது; நெறிப்படுத்துகின்றது. கல்வியின் மேன்மையைத் திருவள்ளுவர் தமது திருக்குறளில் எடுத்தியம்புகின்றார்.

கல்வியறிவுடையோர்கள் எல்லோரும் கண்ணுடையவர்கள். ஏனையோர்கள் கண்ணிலாக் கபோதிகள். கல்வியறிவுள்ளவன் தனதுநாடு, தனது ஊர் என்ற பேதம் காணமாட்டான். எல்லோரும் ஒரு மக்கள், ஓரினம் என்பது அவன் கொள்கையாக இருக்கும். தான் கல்வி கற்றதனால் உண்டான இன்பத்தைப் போலவே இவ்வுலகில் உள்ள மக்கள் அனைவரும் அறிவு பெற வேண்டும் என்ற எண்ணம் உருவாகவேண்டும். கல்வி என்னும் கடலிலே, அறிவு என்னும் முத்தை எடுக்க எல்லோரும் முயல வேண்டும். பெற்றோர்கள் தமது பிள்ளைகளின் கல்வியிலே கூடிய சிரத்தை எடுத்துக் கல்வி பயில வைத்து பல அறிவாளிகள் மத்தியிலே தமது மக்களையும் ஒருவராக்க வேண்டும். அவன், தான் கற்ற கல்வியினால் பெற்றவர்களுக்குப் பெருமை தேடித் தரவேண்டும். கற்ற கல்வியின் பயனால் மற்றவர்களையும் கல்விமான்களாக்க முயல வேண்டும். அவன் அங்ஙனம் முயலானாகில் மணம் இல்லாத மலர்களால் தொடுக்கப்பட்ட மாலைக்கு ஒப்பாவான். பிள்ளைகள் பெற்றோர்களுக்குக் கட்டுப்படவேண்டும். மாணவர்கள் ஆசிரியர்களுக்குக் கீழ்ப்படிதல் வேண்டும், இதுவே அவன் கற்ற கல்வியின் மேன்மைக்கு வழியாகும். கற்ற கல்வியின்படி நடப்பவன் மாணவ சமுதாயத்திற்கு ஒரு வழிகாட்டியாகத் திகழ்கின்றான். நாடும் ஏடும் போற்றிப் புகழும் நாட்டில் மறுமலர்ச்சி உதயமாகும். மாணவ சமுதாயம் குடத்துள் விளக்குப் போன்றில்லாமல் குன்றின்மேலிட்ட தீபம்போல பிரகாசிப்பார்கள் என்பது உறுதி.

கல்வியறிவில்லாதவனுடைய நல்ல கருத்துக்களையும், அறிவுரைகளையும் கற்றோர்கள் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள். அவர்களுடைய புத்திமதிகள் யாவும் புற்றரையிலே வார்த்த அமிர்தத்தைப்போல பயனில்லாமற் போய்விடும். கல்வி கற்ற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வன் நாட்டை ஆளும் மன்னவனைவிடச் சிறப்புள்ளவன் என்று ஔவையார் புகழ்கின்றார். கல்வியானது இறைத்த கிணறு ஊறுவதைப்போன்று, கற்ற அளவு பெருகும். பிறப்பில் கற்கும் கல்வி ஒருவனுக்கு ஏழு பிறப்பும் நின்று உதவி புரிகின்றது. ஆகவே ஒருவன் இளமைக் காலத்தைக் கல்வியிற் பயன்படுத்தி மேன்மைபெற வேண்டும்.

திருவள்ளுவர் காட்டுகின்ற அறநெறிப் பாதையில் நாம் வெற்றிபெறப் பாடுபட வேண்டும். கல்வியின் மேன்மை ஏட்டிலே பொறிக்கப்படவேண்டும். வையத்துள்ளோர்கள் எல்லோரும் சிறப்புற்று வாழத் திருவள்ளுவருடைய அறிவுரைகளைப் போற்றிப் பின்பற்றுவோமாக.

வாழ்க தமிழ்! வளர்க திருக்குறள்!!

**கி. நவரத்தினம்**

*(9)*

## நன்றி மறவேல்

''உப்பிட்டவரை உள்ளவும் நினை'' என்னும் முதுமொழிக்கிணங்க நமக்குச் சிறுஉதவி செய்தவராயினும் அவரை நாம் உயிருள்ளவரையிலும் மறத்தல் கூடாது. ஒருவர் நமக்கு ஆபத்துக் காலத்தில் உதவி செய்தால் அவ்வுதவி செய்தவருக்கு துன்பம் ஏற்படும் காலத்தில் நாம் எம்மால் இயன்ற உதவியைச் செய்தல் வேண்டும், பயன்கருதி பிறருக்கு நாம் உதவி செய்தல் கூடாது.

மனிதனாக பிறந்துள்ள நாமெல்லாரும் சமுதாயத்தில் தனித்து வாழ முடியாது. இரண்டு துடுப்புக்கள் இன்றி கப்பலைச் செலுத்த முடியாது. அது போலவே மனிதன் வாழ்க்கைப் படகைச் செலுத்துவதற்குப் பலரின் உதவியைப் பெறல் வேண்டும். மனித சமுதாயத்துக்கு பல்வழிகளாலும் உதவி புரிந்தும் ''இடுக்கண் களைந்தவரை'' நன்றி மறவாமலும் சமுதாயத்தோடும் ஒத்து வாழ்ந்து பிறருடைய நன்மதிப்பைப் பெறவேண்டும்.

நமக்கு உதவி செய்பவர்பலர். பத்து மாதமும் நாம் ஒரு துன்பமும் இல்லாமல் நன்றாக வளருவதற்கும் பிறந்தநாட் தொடக்கம் ஓடியாடித்திரியுமட்டும் பாதுகாப்புத் தருவதற்கும் உதவி செய்பவள் தாயேயாவாள். ஏடு துவக்கல் தொடங்கி கல்வியில் கரைகாணும் வரையிலும் உதவி செய்பவர் தந்தையாவர். நமக்குத் துன்பம் வந்த காலத்தில் உதவி செய்பவர் மூத்தோர் முதலியோர் ஆவர். அதன் பின்பு கல்வி, துன்பம் நோய், நன்மையான காரியங்கள் என்பவற்றில் ஆசிரியர், அயலவர், நண்பர், புரோகிதர், மருத்துவர் என்பவர்களும் உதவி செய்கிறார்கள். அந்நிய தேசம் சென்ற வேளையில் எதிர்பாராத சந்தர்ப்பங்களில் துன்பம் ஏற்படும் பொழுது எதிர்பாராதவர்களும் உதவி செய்தலும் உண்டு. ஒருவர் செய்த உதவியை மறந்து அவருக்கு ஒரு உதவி செய்யாது இருக்கும்போது மனிதன் ஐந்தறிவுள்ள மிருகங்களிலும் பார்க்க கேவல நிலைக்கு தாழ்த்தப்படுகிறான். இப்படி இருத்தல் மனித சமுதாயத்திற்கு கறையாக அமைந்து விடுகிறது. இந்நிலையினின்றும் மனிதன் விடுபடவேண்டும்.

''எந்நன்றி கொன்றார்க்கும்
உய்வுண்டாம் - உய்வில்லை
செய்நன்றி கொன்ற மகற்கு'' என்று கூறும் திருவள்ளுவரின் குறளை நோக்குக. செய்நன்றியை மறந்த எவனுக்கும் ஒருபோதும் உய்வில்லை என்பதை வள்ளுவர் தன் குறள் மூலம் எடுத்துக்காட்டுகிறார்.

பிறந்த நாட் தொடக்கம் நம்மைப் பாதுகாக்கும் தாயைப் பேணி நடக்கிறோம். எல்லாவற்றுக்கும் மேலாக நம்மைநன்றாகப் படைத்து நாம் அநுபவிக்க இவ்வுலகத்தையும் சகல போகங்களையும் அளித்த இறைவனுக்கு நன்றி செலுத்தல் வேண்டும். கடவுள் நம் உதவியை எதிர்பார்த்திருப்பவர் இல்லையென்றாலும் அவருக்கு நாம் நன்றி செலுத்துதல் மூலம் மனிதனின் பண்பாடு நன்கு வெளிப்படையாகிறது.

ஒருவர் செய்த நன்றியை மறந்து நடப்பவர்கள் ''உண்ட வீட்டுக்கு இரண்டகம் செய்தவரைப் போலாவர்.'' ஆகவே நன்றி மறவாத வாழ்வே சிறந்த வாழ்வாகும்.

**இ. விஜயகுமாரி**

*(8)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முட்டாளும் முழுநிலவும்

கிணற்றடிக்குத் தண்ணீர் எடுக்கப் போன ஒரு முட்டாள், கிணற்று நீர்ப்பரப் பின் மீது சந்திரனது பிரதிபிம்பத்தைக் கண்டுவிட்டு சந்திரன் கிணற்றினுள் விழுந்து விட்டதே என்று கவலைப்பட்டான்.

உடனடியாக சந்திரனை மேல் இழுப் பதற்காக கொக்கி ஒன்றினைக் கயிற்றில் கட்டி நீருள் இறக்கினன். கொக்கி ஒரு கல்லில் சிக்கிக் கொண்டது. அந்த முட் டாள் ஆனமட்டும் வலுவாகக் கயிற்றை இழுத்தபோது கயிறு படக்கென்று அறுந் தது. அந்த விசையில் அவன் முதுகு அடி பட நிலத்தில் வீழுந்தான். அப்போது சந்திரன் வானிற் பிரகாசிப்பதை அவன் கண்டான். உடனே சந்தோஷத்தால் கத் தினன். ஆண்டவனுக்கு ஆயிரம் நன்றிகள். எனது முயற்சி வீண்போகவில்லை. நான் இழுத்த இழுவையில் சந்திரன் கிணற் றுக்கு வெளியே பாய்ந்து பழைய இடத் திற்குச் சென்று விட்டதெனச் சந்தோஷப் பட்டான்.

சு. மகாலிங்கம்
(8)

## கந்தனின் தீபாவளி

'காந்தி கபே' என அழைக்கப்படும் அந்தத், தேநீர்க்கடை. நகரில் பிரபலமான தொன்று. 'காந்தி கபே' என்று பெரிய எழுத்தில் விளம்பரப்பலகை போடப்பட் டிருந்தாலும், அதனை எல்லோரும் மீசைக் காரன் கடை என்றே அழைப்பார்கள். கடையின் விளம்பரப்பலகை கண்ணுக்குத் தெரிவதை விட, கடையின்முன் மேசை யில் இருந்து காசு வாங்கிக் கொண்டிருக் கும் கடை முதலாளியான இராவணன் மீசை இராசையாவே கண்ணுக்குத் தெரி வதால் 'காந்தி கபே' மீசைக்காரன் கடையாகி விட்டது.

இராசையா மிகவும் பொல்லாத மனிதர். ஆளின்தோற்றமே பயத்தை ஊட்டும். ஆனாலும் அந்தக் கடையில் எப் போதும் சனம் நிரம்பி வழியும். நல்ல வியாபாரம். அங்கு சுமார் ஆறு பையன் களும், நான்கு பெரியவர்களும் வேலை செய்கிறார்கள். பெரியவர்கள் விஷயத்தில் அவர்களை நன்றாக வேலை வாங்குவதுடன் சம்பளமும் நன்றாகக் கொடுப்பார். ஆனால் பையன்களைப் பொறுத்தவரையில் சொற்ப சம்பளத்துடன் கடுமையாகவேலை வாங்கு வார். ஏதாவது பிழைநடந்து விட்டால் நன்றாக வெளுத்துவாங்கி விடுவார். அங்கு வேலை செய்பவர்களில் கந்தனும் ஒருவன். அவன் நேர்மையும், இரக்க சுபாவமுமுடை யவன். அவனுக்கு அங்கு பதினைந்து ரூபா தான் சம்பளம். அவன் வாடிக்கையாளர் களுடன் மிகவும் மரியாதையாகப் பழகு வதால் அங்கு சாப்பிட வருபவர்கள் அவன் மீது மிகுந்த அன்பு வைத்திருந்தார்கள். இதனால் அவன்மீது மற்றப் பையன்களுக் குப் பொறாமை. அவனை எப்படியாவது அவ்வேலையை விட்டு அகற்றவேண்டுமெனத் திட்டமிட்டனர்.

தீபாவளிக்கு மூன்று நாட்களே இருந் தன. கந்தன் மூன்று வருடங்களாகத் தீபா வளி கொண்டாடவேயில்லை. சாப்பாட் டிற்கே கஷ்டம். தீபாவளி எப்படிக் கொண் டாடுவது? மற்றவர்கள் எல்லாம் நாளைக் குக் காலையே தங்கள் வீடுகளுக்குப் போய் விடுவார்கள். அவன்தான் கடையில் தனி யாக வேலை செய்யவேண்டும். அவனுக்கு அழுகையாக இருந்தது. அன்று மாலை அந்தக் கடையில் ஒரே பரபரப்பாக இருந் தது. இராசையா இராவணனாகவே அங்கு நின்றார். அவர் முன்னால், அங்குவேலை செய்யும் முருகன், ரமணி, பாபு, எல்லோ ரும் வெடவெடவென நடுங்கியபடி நின் றார்கள். கந்தன் எதிரேயுள்ள தூண் ஒன்றில் கட்டப்பட்டிருந்தான். அவன் முக மெல்லாம் வீங்கிச் சிவந்திருந்தது. இரா சையா கத்தினார்: "வாச்சை எங்கேடா வைத்திருக்கிறாய்? சொல்லடா." "நான் எடுக்கேல்லை; நான் எடுக்கேல்லை" அவன் விம்மினன். "எடுக்கிறதை எடுத்துப் போட்டு பொய் வேறு சொல்கிறாயா?" என்றபடி மீண்டும் கையில் வைத்திருந்த பிரம்பால் அவனை விளாசினார். வலி பொறுக்காமல் கந்தன் கத்தினன். அதற் குள் வேறு இருவர் உள்ளே வந்தனர். வந்த வர்களில் ஒருவர் ஒரு பெரிய நகைக்கடை முதலாளி. அவர் அங்கு அடிக்கடி வருபவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கந்தன்மீது மிகுந்த பற்றுமிக்கவர். அவர் மெதுவாக முதலாளியிடம் சென்று நடந்ததை விசாரித்தார்.

''இவனா? திருட்டு ராஸ்கல்! எங்கள் சமையற்காரனுடைய விலையுயர்ந்த ''வாச்சை'' இவன் திருடிவிட்டான். அதை அவருக்கு யாரோ அன்பளிப்பாகக் கொடுத்தார்களாம்... கள்ளப்பயல்! என்றார் இராசையா கந்தனைப் பார்த்தபடியே. அப்போது அங்குவந்த சமையற்காரன் ''ஐயா! ... சாப்பாடு ரெடி'' என்றபடி அந்த மனிதரை நோக்கினார். பின்னர் திடீரென்று ஏதோ நினைத்தவராக அவரைப் பார்த்துக் கேட்டார். "ஐயா! நான் கேட்கிறேன் என்று குறை நினைக்க வேண்டாம் இந்த வாச்சை எங்கு வாங்கினீர்கள்?'' என்று அவர் கட்டியிருந்த வாச்சைச் சுட்டிக் காட்டியபடி கேட்டார் சமையற்காரர். ''ஓ, தாராளமாக. இப்பதான் ஐநூறு ரூபாவுக்கு ஒருவரிடம் வாங்கினேன். அதோ அவரிடம்தான்'' என்று தன்னுடன் கூட வந்தவரைக் காட்டினார். ''ரீ'' குடித்துக் கொண்டிருந்தவர் விழிக்க ஆரம்பித்தார். சமையற்கார ஐயாவுக்குப் புரிந்து விட்டது. வேகமாகச் சென்று அம்மனிதனின் சட்டையைப் பிடித்து இழுத்தபடி கோபத்துடன் கத்தினார். ''எங்கேயடா இதை எடுத்தாய்?'' ஐயா! எனக்குத் தெரியாது. என்னுடைய தம்பி இதைக் கொடுத்தான்'' என்றான். அவன்வேறுயாருமில்லை. ரமணியின் அண்ணன்தான். பின்னர் ரமணி அழைக்கப்பட்டான். விபரமாக எல்லாம் தெரிய வந்தது அன்று மாலை இராசையா கந்தனை அழைத்து அவன் கையில் நூறு ரூபாவைக் கொடுத்து, மூன்று நாட்கள் லீவும் கொடுத்தார். இம்முறை கந்தனின் வீட்டில் தீபாவளி சிறப்பாகக் கொண்டாடப்பட்டதைக் கூறவும் வேண்டுமா?

அ. அஸீஸ்
(8)

## சிலம்புச் செல்வம்

